
சுவடி : 40
ஏடு : 1
**சூலை 2016**
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
**தி.துரை சித்தார்த்தன்**
*
அலுவலக
நிருவாகப் பொறுப்பு
**ப. வடிவேலு**
94441 05892
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர்,
எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை - 53.
தொடர்புக்கு :
94448 04980
72994 41712
044-2625 2119
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*



# மருத்துவக் கல்வியில் சேர பொது நுழைவுத் தேர்வு ஏன்? உச்சநீதிமன்றத்தின் நோக்கம் என்ன? தமிழக மக்கள் என்ன செய்யவேண்டும்?



மருத்துவக்கல்வி, உயர் கல்விப் பிரிவைச் சார்ந்தது.

இந்தியாவில் மொத்தம் 412 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. இவற்றுள் அரசுக் கல்லூரிகள் 190; தனியார் கல்லூரிகள் 222.

412 கல்லூரிகளிலும் மொத்தம் 52715 இடங்கள் உள்ளன; 190 அரசுக் கல்லூரிகளில் 25880 இடங்களும், 222 தனியார் கல்லூரிகளில் 26835 இடங்களும் உள்ளன.

தமிழ்நாட்டில் பெரும்பாலான 12ஆம் வகுப்பு (+2) மாணவர்கள் மாநிலக் கல்வித் திட்டத்தில் படிக்கிறார்கள்.

வடநாட்டு மாநிலங்களில் மய்ய அரசு உயர்நிலை வகுப்புக்கான (CBSE= Central Board of Secondary Education) பாடத்திட்டம், தமிழ்நாட்டுப் பாடத் திட்டத்தினின்றும் வேறுபட்டது.

**பொது நுழைவுத் தேர்வு வினாத்தாள்கள் மய்ய அரசு நடத்தும் 12ஆம் வகுப்புப் பாடத்திட்டப்படியே அமைந்திருக்கும். அது கடினமான திட்டம். மேலும் வினாக்கள் ஆங்கிலம் அல்லது இந்தியில் இருக்கும்.**

எனவே தமிழ்நாட்டு மாணவ, மாணவியருக்குப் பாடத்திட்டம் முதலாவது தடை; மொழி இரண்டாவது தடை. எல்லாவற்றுக்கும் மேலாக நகர்ப்புற-செல்வப் பின்னணி உள்ள-படித்த உயர்சாதிக் குடும்பங்களைச் சார்ந்த அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களோடு, நாட்டுப்புற-ஏழை-கீழ்ச்சாதி வகுப்பு மாணவர்கள் போட்டிபோட்டுக் கொண்டு, புதிய பாடத்தின் கீழ் நுழைவுத் தேர்வு எழுதும் பலர் பொது நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெறமுடியாது.

**இப்படிப் பெரும்பாலான ஏழை-நாட்டுப்புற-கீழ்ச்சாதி மாணவ, மாணவிகள் மருத்துக் கல்வி போன்ற உயர்கல்வி பெறுவதைத் தடுக்க வேண்டும் என்பதுதான், இந்திய உச்சநீதிமன்றத்தின் ஒரே நோக்கம். இதில் உச்ச நீதிமன்றம் உறுதியாக உள்ளது.**

இந்திய அரசு பிறப்பித்த அவசரச் சட்டத்தின் கீழ், மாணவ, மாணவியர் இந்த ஓர் ஆண்டில் மட்டும் (2016-17) பொது நுழைவுத்தேர்வு எழுதாமல், +2 தேர்வில் பெற்ற மதிப்பெண்களை மட்டும் வைத்து விண்ணப்பிக்கலாம்; அவரவர் பெற்ற மதிப்பெண் தரவரிசைப்படி-பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப் பட்டோர், பட்டியல் வகுப்பினர், பட்டியல் பழங்குடியினர் அவரவர் ஒதுக்கீட்டின்

கீழ், தரவரிசைத் தகுதியைக் கொண்டு சேரலாம். பொதுப் போட்டிக்கான 31 இடங்களில் எல்லா வகுப்பினரும் போட்டியிட்டு, தரவரிசைப்படி இடம் பெறலாம்.

**அதாவது தலைக்கு வந்த ஆபத்து தலைப்பாகை யோடு போனது என்பது போல, இந்த 2016-17 ஆம் ஆண்டில் மட்டும் அனைத்திந்தியப் பொது நுழைவுத் தேர்வு எழுதுவதிலிருந்து தமிழ்நாடு உள்ளிட்ட மாநில மாணவர்களுக்கு ஒரு வாய்ப்புத் தரப்பட்டுள்ளது.**

**இதிலிருந்து ஏழை மாணவர்களும், மாநில அரசுகளும் நிரந்தரமாக விடுபட என்ன வழி என் பதை முதலில் தமிழக அரசினர் சிந்திக்க வேண்டும். தமிழக அரசினர் மட்டுமோ, தமிழ்நாட்டு மக்களும் மாணவ, மாணவியரும் மட்டுமோ அல்லது மற்ற எந்த ஒரு மாநில அரசோ, மாணவர்களோ, 2016-17க்குப் பிறகும் அனைத்திந்தியப் பொது நுழைவுத் தேர்வு எழுதவேண்டிய இக்கட்டிலிருந்து தப்ப முடியாது.**

இது ஒழிக்கப்பட ஒரே வழிதான் உண்டு என்று நாம் கருதுகிறோம்.

தொடக்கக்கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரையில் எல்லாக்-கலை, அறிவியல், பொறியியல், தொழில்நுட்பவியல், மருத்துவம், வேளாண்மை, சட்டம் உட்பட்ட எல்லாக் கல்வித் திட்டங்களும் மாநில அரசு அதிகாரப் பட்டியலுக்கு (State List) மாற்றப்படக் கோரி, இந்திய அரசினரை எதிர்த்து மாபெரும் போராட்டங்களை நடத்தியே தீரவேண்டும்.

**1975 வரை மாநிலங்களின் அதிகாரப் பட்டி யலில் இருந்த அந்த அதிகாரத்தை மீட்டெடுக்க வேண்டும்.**

கட்சி, தலைமை, மொழி, மாநில வேறுபாடு பார்த் தால் இப்படிப்பட்ட அதிகார மாற்றத்தை வென்றெடுக்க முடியாது.

மேலும் தமிழ்நாட்டில் மட்டும் போராடினால் வெற்றி கிட்டாது. அனைத்திந்திய அளவில் போராட வேண்டும்.

என்ன செய்யப்போகிறோம்?

எல்லோரும் சிந்தித்து, இணக்கமான முயற்சிகளை 2016 முடிவுக்குள்ளேயே தேடுங்கள் என அன்புடன் அனைவரையும் வேண்டுகிறோம்.

**- வே.ஆனைமுத்து**

## 25 ஆண்டகளாகச் சிறைப்பட்டிருக்கும் 7 தமிழகர்கள் விடுதலை கோரி வாகனப் பேரணி

*காஞ்சிபுரம் தோழர்கள் பங்கேற்பு*

*11.06.2016 சனிக்கிழமை 7 தமிழர்களின் விடுதலை கோரி, வேலூர் மத்திய சிறை அருகில் தொடங்கி சென்னை கோட்டையை நோக்கி நடக்க விருந்த எழுச்சிப் பேரணிக்கு காவல்துறை அனுமதி மறுக்கப்பட்டது.*

*அதனால் சென்னை எழும்பூர் இராஜரத்தினம் விளையாட்டுத் திடலில் இருந்து கோட்டை நோக்கிச் செல்ல காவல்துறை அனுமதி வழங்கியது. தமிழ கத்தின் அனைத்துப் பகுதிகளிலும், கட்சி, மதம், சாதி வேறுபாடு பாராமலும் திரைத்துறையைச் சேர்ந்த கலைஞர்களும் முற்போக்கு அமைப்புத் தோழர்களும் கலந்து கொண்டனர்.*


*பேரறிவாளன் தாயார் அற்புதம்மாள் அவர்கள் தலைமையில் பிரம்மாண்டமான எழுச்சிப் பேரணி மதியம் சுமார் 1 மணியளவில் துவங்கியது. பேரணி 7 பேரை விடுதலை செய்ய வலியுறுத்திய முழக்கங் களுடன் கோட்டையை நோக்கி எழுச்சியுடனும் கட்டுப்பாட்டுடனும் சென்றது. பேரணி தலைமைச் செயலகத்துக்குச் சற்று முன்னால் காவல்துறையால் தடுத்து நிறுத்தப்பட்டதால், நிகழ்ச்சி எழுச்சியுரை யுடன் நிறைவுபெற்றது.*

*பிறகு அற்புதம்மாள் அவர்கள் தலைமைச் செயலகத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர் களை நேரில் சந்தித்து விண்ணப்பம் கொடுத்தார். முதல்வர் மனுவைப் பெற்றுக் கொண்டார்.*

*பேரணியில் காஞ்சியிலிருந்து டாக்டர் விமுனாமூர்த்தி, காஞ்சி அமுதன், மா.பெ.பொ.க.. தமிழினியன், உலகஒளி, ஜெயப்பிரகாஷ் மற்றும் பா.ம.க., விடுதலைச் சிறுத்தைகள், ம.தி.மு.க., தமிழர் வாழ்வுரிமைக்கட்சி, வெளிச்சம் சமூக விழிப்புணர்வு அமைப்பு, தமிழ்த்தேச மக்கள் கட்சி, பேரறிவாளன் கல்விப்பாசறை மற்றும் அனைத்து முற்போக்கு அமைப்புத் தோழர்களும் கலந்து கொண்டனர். சென்னை மா.பெ.பொ.க. தோழர்கள் வாலாசா வல்லவன், சோ.அண்ணாதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.*

செய்தி : **மு.ஜெயப்பிரகாஷ்**

# தந்தை பெரியாரின் சிந்தனைகளை கன்னட மொழியில் மொழிபெயர்த்த
# பேரறிஞர் வி.சி.வேலாயுதம் (எ) வேமன்னா மறைந்தாரே!



**வி.சி.** வேலாயுதம் வேலூர் மாவட்டம் விரிஞ்சிபுரம் என்ற ஊரில் பிறந்தவர்.

இளமையில் கர்நாடக மாநிலம் பெங்களூரில் இயங்கிய பிஅண்சி துணி நெசவு ஆலையில் நெச வாளராகப் பணியேற்றார். தொழிற்சங்க ஈடுபாடு காரண மாக வேலையிலிருந்து நீக்கப் பட்டார். தந்தை பெரியாரின் கொள்கைகளை வாழ்க்கை நெறியாக ஏற்றார்.

பெங்களூரில் முதன் முதலாகத் தந்தை பெரியாரின் கொள்கைகளைப் பரப்புவதற்காகத், திராவிட சங்கத் தைத், தந்தை பெரியாரை பெங்களூருக்கு அழைத்துத் தொடங்கிய வர் நாராயணசாமி என்பவர் ஆவார்.

அவருடைய மகன் சம்பத், வி.சி.வேலாயுதம், வி.மு.வேலு, ஆர்.இராகண்ணா, பி.பாலசுந்தரம் ஆகிய தோழர்கள் இணைந்து "சிந்தகர சாவடி" என்ற பெயரில் சிந்தனையாளர் கழகத்தைத் தொடங்கினர்.

இராகண்ணா தவிர்த்த மற்றவர்களில் மூவர் தமிழர். தோழர் சம்பத் தெலுங்கர்.

1-7-1974இல் முதன்முதலாக, "பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்" நூற்றொகுப்பை திருச்சி சிந்தனையாளர் கழகம் வெளியிட்டது. அத்தொகுப்புகள் வேண்டும் என, பெங்களூர் பூந்தோட்டம் அ.கொடையரசன் வழியாக எனக்கு எழுதினர்.

நான், 1975இல், பெங்களூரில் விசாலக்குமி சிவலிங்கம் அவர்கள் நடத்திய மாநாட்டுக்கு அழைக்கப்பட்டேன்; தொடர்வண்டியில் சென்றேன். 8 படிகள் கொண்ட ஒரு அட்டைப் பெட்டியைத் தொடர் வண்டியிலிருந்து இறக்கி வி.சி.வேலாயுதம் தலையில் வைத்தனர். மகிழ்ச்சியில் வேலாயுதம் அங்கேயே நன்கு நடனம் ஆடினார். அது இன்னும் என் கண்முன் நிற்கிறது. அவர் அதற்கு முன்னரே கன்னட மொழியைக் கற்றிருந்தார்.

தம் வாழ்நாள் முழுவதையும் பெரியாரின் சிந்தனை களைத் தலைப்புவாரியாக-பொருள் வாரியாகக் கன்னடத்தில் மொழி பெயர்ப்பதில் வி.சி.வேலாயுதம் முனைப்பாக ஈடுபட்டார். அவருடைய கன்னட மொழி ஆக்க நூல்களை வெளியிடுவதில் மறைந்த நாராயணசாமி, அவர் மகன் நா.சம்பத், பாலசுந்தரம் (எ) பொன். இளவழகன் ஆகியோர் முழுமூச்சாக ஈடுபட்டனர்.

அப்படி, கன்னட மொழியில் நூல் வெளியிடும் விழாவுக்கு, முன்னாள் துணைவேந்தர் எச்.நரசிம்மய்யா, வே.ஆனைமுத்து, "விடுதலை" ஆசிரியர் கி.வீரமணி ஆகியோர் அழைக்கப் பட்டோம். அவ்விழா, 17-9-1978இல் அன்று நடைபெற்றது.

அப்போது முதல், தொடர்ந்து, பெரியார் சிந்தனைகளை மொழி பெயர்ப்பதிலேயே முழுவதுமாக மூழ்கினார், வேமன்னா.

இடையில் பாலசுந்தரம், நா.சம்பத், பூ.அ.கொடையரசன் ஆகியோர் மறைந்தனர். "சிந்தகர சாவடி"யில் நூலகம் அமைத்து, கிழமைதோறும் பெரியாரைப் பற்றிப் பேச்சுகள் நிகழ்ச்சி நடத்துவது, கொள்கைப் பயிற்சி அளிப்பது இவற்றைச் செய்தனர். அது இயங்கிய இடத்தைக், காலி செய்திட நேர்ந்தது. நூல்களைக் காத்திடும் பொறுப்பை சண்முகசுந்தரம் ஏற்றார். அவரும் மறைந்தார்.

இவர்களைப் பற்றிய வரலாற்றைப் பதிவு செய்திட, 2015இல் இரண்டு தடவைகள் பெங்களூருக்குச் சென்றேன். புலவர் கி.சு.இளங்கோவன், க.வேலு, வி.மு.வேலு, வி.சி.வேலாயுதம் ஆகிய பெரியார் கொள்கையாளர்களுடனும், நா.சம்பத் குடும்பத்தினருடனும் அளவளாவினேன். அந்தோ! வேமன்னாவுடன் அதுவே என் கடைசிச் சந்திப்பு ஆகிவிட்டது.

கன்னட மொழியில் வேலாயுதம் மொழி பெயர்ப்பு நூல்களைப் பெற்றுப் படித்த கன்னடப் பேரறிஞர்-மைசூர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் போற்றுதலுக்குரிய கவிஞர் குவெம்பு (Kuvempu) அவர்கள் பெரியாரின் கூரிய, புரட்சிகரமான சிந்த னைகளை அறிந்து பெரியாரை உச்சிமேல் வைத்துப் போற்றினார்.

அவரை அடுத்து, மைசூர் பல்கலைக்கழகத் துணை வேந்தராக வந்த ஜவேரா கவுடா அவர்களும் கன்னட மொழியில் பெரியாரைப் படித்தார். அதன் விளைவாக, 1973 நடுவில் தந்தை பெரியாரைத் திருச்சியில் நேர்காணல் செய்து, பெரியாரிடமே அவருடைய முன்னோரின் வரலாற்றைக் கேட்டறிந்து, உடனேயே பெரியரைப் பற்றிக் கன்னடத்தில் ஒரு நூலை எழுதினார்.

இடையில் வி.சி.வேலாயுதம் அவர்களின் துணைவியார் படுத்த படுக்கையாக 10 ஆண்டுகள் நோய் வாய்ப்பட்டுத் துன்புற்றார். அவருக்கு ஒரு ஆண் செவிலியராக வேலாயுதம் செயல்பட நேர்ந்தது; மகளும், மகனும் நன்கு துணை நின்றனர். வேலாயுதம் அவர்களின் உடல் நலிந்தது; கண்பார்வை மங்கியது; வெளியிடங்களுக்குச் செல்வது தடைப்பட்டது. இத்தகைய பெரியாரியல் மேதை வி.சி.வேலாயுதம் தம் 89ஆம் அகவையில், 8-6-2016 புதன் அன்று மறைவுற்றார். இது நமக்குப் பெரும் பேரிழப்பாகும்.

எளிய படிப்பாளியாக-தொழிலாளியாக இருந்த அவரின் மேதைமையையும், பெரியாரின் கொள்கையில் அவர் பெற்றிருந்த தெளிவையும், அன்னாரின் கன்னட மொழி ஆளுமையையும் அறிந்த கர்நாடக மாநிலத்திலுள்ள குல்பர்கா பல்கலைக் கழகத்தார், வி.சி.வேலாயுதம் என்கிற வேமன் னாவின் பெரியார் சிந்தனைகள்-கன்னட மொழி பெயர்ப்பு நூலை ஒரு பெருந் தொகுதியாகப் பல்கலைக் கழகச் சார்பில் வெளியிட்டு "பெரியார் விருது" (PERIYAR AWARD) வழங்கிஅவரைப் பாராட்டினர். அப்புகழ் சேர்க்கும் பணி வழியாக, வி.சி.வேலாயுதம் என்கிற வேமன்னாவின் புகழ் என்றும் நிலைத்திருக்கும்.

**பெங்களூர் வேமன்னா புகழ் ஓங்குக!**

**-வே.ஆனைமுத்து**



# செயல் மறவர் சீர்காழி மா.முத்துச்சாமியின் துணைவியார் மு.பேச்சியம்மாள் மறைந்தார்!

திருச்சிராப்பள்ளி பெரிய கடை வீதியில் எஸ்.வயணப் பெருமாள் எவர்சில்வர் பாத்திரக்கடை மிகவும் பெயர் பெற்றது. அவரும் அவரது தம்பி குருசாமியும், மா.முத்துச்சாமியும் வயணப் பெருமாள் கடையில் பணியாற்றி, வணிக நுணுக்கங்களை நன்கு கற்றனர்.

தந்தை பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளில் ஊறித் திளைத்தவர், எஸ்.வயணப் பெருமாள். அதே கடை வீதியில் ச.கதிர்வேலு முடிதிருத்தும் கடை வைத்திருந்தார். இவர்கள் என்போன்றோர்க்கும், எஸ். பிரான்சிஸ் அவர்கட்கும் ஊக்கம் அளிக்கும் மூத்தோர் ஆவர். பின்னாளில் எஸ்.குருசாமி தனிக்கடை வைத்தார்.

மா.முத்துச்சாமி சீர்காழிக்கு வந்து, அங்கு எவர்சில்வர் பாத்திரக்கடை தொடங்கினார். போதிய அளவு வங்கியில் கடன் பெற்று வணிகத்தை விரிவு செய்தார்.

சீர்காழி திராவிடர்கழகத்தில் முதன்மையானவராக விளங்கினார். வங்கிக்கு உரிய நேரத்தில் பணம் செலுத்தத் தவறாதவர். வாணிபத்தில் எடையில், விலையில் மிகவும் நேர்மையாகவும், நாணயமாகவும், நாகரிகமாகப் பழகியும் நடந்து கொண்டார். ஊரில் பார்ப்பனப் பெண் மக்களும் மற்றப் பெரிய இடத்துத் தாய்மார்களும் இவருடைய கடையை மொய்க்கத் தொடங்கினர்.

**இவ்வளவுக்கும் துணைநின்று ஈடுகொடுத்தவர் இவருடைய அன்புத்துணைவியார், மறைந்த பேச்சியம்மாள் அவர்கள்.**

தந்தை பெரியார் மறைந்த 1973 இறுதியில் மா.முத்துச்சாமி-தஞ்சை மாவட்ட தி.க.பொருளாளர் பொறுப்பில் இருந்தார்.

பெரியாரின் மறைவை அடுத்து, சீர்காழி பனங்காட்டாங்குடி, மாதானம், வடகால் பகுதிகளுக்கு என்னை மிதிவண்டியில் அழைத்துக் கொண்டு போய்ப் பொதுக் கூட்டங்களில் பேசச் சொல்வார். பம்பரமாகச் சுழன்று பணியாற்றினார். சில சமயங்களில் மயிலாடுதுறை வடிவேலுவும் பரப்புரைப் பணிக்கு வருவார். எங்களுக்கு நல்லுணவு படைத்தவர் பேச்சியம்மாள் அவர்கள். அடிக்கடி உறவினர்களும் வருவர். அவர்களையும் அன்புடன் ஓம்புவார், அம்மா அவர்கள்.

பெரியார் சமஉரிமைக் கழகம் (எ) மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக்கட்சி, 8-8-1976இல், மா.முத்துச்சாமியின் இல்லத்தில் தொடங்கப்பட்டது.

மறைந்த பெரியார் பா.வைரக்கண்ணு, கோவிந்தராசன், ஆசிரியர் கோ.செயராமன், கோ.மு.கருப்பய்யா, வழக்குரைஞர் ப.கோபாலகிருஷ்ணன், புதுப்பட்டினம் சின்னத்தம்பி, அன்பு இராசப்பா ஆகியவர்களை இணைத்துக் கொண்டு-அடிக்கடி சீர்காழியில் பொதுக் கூட்டங்களை நடத்துவார் மா.முத்துச்சாமி. கூட்டம் முடிந்தவுடன் 50, 60 பேர்களுக்கு இரவு நல்லவிருந்து படைப்பார் பேச்சியம்மாள். அழகு அன்பழகன், மகாலட்சுமி இரணியன், மகள்கள் செந்தமிழ்ச்செல்வி, மரகதமணி, நேருஜி ஆகியோரும் ஓய்வின்றி உதவுவர்.

1925-30களில், அன்னை நாகம்மாள், பெரியார் பெரும் படையினருக்கு அன்பு பொங்க உணவு அளித்ததுபோல், பெரியார் தொண்டர்களை ஓம்பியவர் மறைந்த மு.பேச்சியம்மாள் அவர்கள். அன்னார் தம் 88ஆம் அகவையில், 1-6-2016 புதன் பிற்பகல் 4 மணி அளவில் மறைவுற்றார் என்ற செய்தி கேட்டு, மா.பெ.பொ.க. தோழர்களும், தி.க., தி.மு.க. தோழர்களும் உறவினர்களும் 2-6-2016 வியாழன் 2 மணிக்குள் வருகைதந்து, மு.பேச்சியம்மாள் அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

திருச்சி வயணப் பெருமாள் துணைவியாரும், அம்மா அவர்களின் தமக்கையுமான பாலாம்பாள் அவர்கள், தம் 94ஆம் அகவையிலும் மதுரையி லிருந்து வந்து, தம் தங்கைக்கு இறுதி அஞ்சலி செலுத்தி மீண்டார்.


அம்மையாரின் உடல் இறுதி ஊர்வலம் புறப்படுவதற்கு முன்னர், 2-6-2016 பிற்பகல் 3.30 முதல் 4.30 வரை புகழ் அஞ்சலிக்கூட்டம், வீட்டின் முற்றத்தில், வே.ஆனைமுத்து தலைமையில் நடைபெற்றது. மா.பெ.பொ.க. தோழர்கள் சி.பெரியசாமி, அரியலூர் புலவர் இரா.கலியமூர்த்தி, துரை.கலையரசு, ப.வடிவேலு, சீர்காழி தி.க. தலைவர் ஜெகதீசன், ப.க.தலைவர் நடராசன், கோ.கோவிந்தராசன், ம.க.இ.க. அம்பிகாபதி, திருச்சி அறிவழகன், அழகுவின் தம்பி கொளத்தூர் தங்கமுத்து, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் க.சுப்ரவேலு ஆகியோர் இரங்கலுரை ஆற்றினர்.

இறுதியில் இடுகாடுவரை வந்து, மயிலாடுதுறை பேராசிரியர் செயராமன் தம் துணைவியாருடன் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

**வாழ்க மு.பேச்சியம்மாள் புகழ்!**

**- வே.ஆனைமுத்து**

# சட்டஎரிப்பில் சிறை சென்ற மறவர்
# இளந்தாடி தி.க.துரைராசன் மறைந்தார்



இளந்தாடி தி.க.துரைராசன் என்பவரை திருச்சி யிலுள்ள பெரியார் தொண்டர்கள் அனைவரும் அறிவர். கண்ணையன்-தனலட்சுமி இணையருக்கு மூத்த மகனாகப் பிறந்தவர்; இவருடன் பிறந்தவர்கள் ஏழு பேர். பெரிய குடும்பச் சுமையை ஏற்றுக் கொண்டதால், தன் இளமைக் காலத்தில் திருமணம் செய்து கொள்ளாமல் தள்ளிப் போட்டவர்.

பெரியார் நடத்திய பல போராட்டங்களில் கலந்து கொண்டவர். பிள்ளையார் சிலை உடைப்பு, 1952, 1953, 1954இல் திருச்சி டவுன் ஸ்டேசன், இரயில்வே நிலையங்களில் உள்ள இந்தி எழுத்துக்களை அழித்தல் முதலான போராட்டங்களில் பங்கேற்றார். சட்ட எரிப்புப் போராட்டத்தில் (26.11.1957) திருச்சி, கோயம்புத்தூர் சிறைகளில் 1½ ஆண்டுக்காலம் தண்டனை அனுப வித்தவர். திருச்சி நிகர திராவிடர் கழகப் பொறுப்பாள ராக இருந்துள்ளார். 24 மணி நேரமும் கருப்பு சட்டை யுடன் மிதிவண்டி மூலம் திருச்சி நகரத்தில் இயக்கப் பணியாற்றியவர். இயக்கக் கூட்டங்களிலும், மாநாடு களிலும் பெரியாரின் நூல்கள், 'கடவுள் இல்லை' என்று பொறித்த (ஸ்டாம்பு) முத்திரை, பெரியார் படம் போட்ட கைப்பை போன்றவைகளை விற்பனை செய்பவர்.

13.9.1981ல் திருமதி சகிகலா அவர்களைத் திரு மணம் செய்து கொண்டவர்; இவருக்கு மூன்று மகன்கள், கவிராஜன், விமல்ராஜன், அன்பரசு ஆகியோர்.

மா.பெ.பொ.கட்சியின் சார்பில், மதுரையில் வி.ஆர்.கிருஷ்ணய்யர் சமுதாயக் கூடத்தில் 6-1-2007 ஆம் நாள் பொங்கல் மலர் வெளியீட்டு மாநாட்டில், 1957ல் சாதி ஒழிப்பிற்காகச் சிறைசென்று 1½ ஆண்டுக்காலம் தண்டனை அனுபவித்த, திருச்சி இளந்தாடி தி.க.துரைராசன் அவர்களையும், ஆனை மலை தோழர்களையும் அழைத்து மேடையில் அமர வைத்துப் பாராட்டி, கேடயமும், சான்றிதழும் அளித்துச் சிறப்பித்துப் பெருமைப்படுத்தப்பட்டனர்.

8.3.2016 மகளிர் தினத்தன்று தோழர் இரா.கலிய பெருமாள் அவர்களோடு (ந.கருணாகரன்) எனது வீட்டிற்கு காலை 10 மணிக்கு வந்து மதிய உணவு சாப்பிட்டு மாலை 5 மணிவரை கல, கலப்புடன் உரை யாடி தனது இயக்கப் பணிகளைப் பற்றி எங்களிடம் பகிர்ந்து கொண்டவர்.

கடவுள் மறுப்பாளராக, சாதி, மத-ஒழிப்பு வீரராக, தந்தை பெரியாரின் கொள்கைத் தொண்டராக வாழ்ந்த தி.க.துரைராசன் அவர்கள் 17.6.2016 வெள்ளிக் கிழமை அதிகாலை 2 மணியளவில் தன் 84 அகவை யில் தன் இல்லத்தில் மறைவுற்றார், (துராநல்லூர் விரிவாக்கம் 34, இரண்டாவது வீதி விஷ்வாஷ் நகர் இல்லத்தில்) தான் ஏற்றுக்கொண்ட கொள்கைப்படி எந்த வித மதச் சடங்குமின்றி, தாரை-தப்பட்டை இல்லாமல், அவர்கள் வீட்டுப் பெண்களே அவரது உடலைச் சுமந்து எரியூட்ட அனுப்பி வைக்கப்பட்டது. அவரின் குடும்பத் தார்க்கு மா.பெ.பொ.க., திருச்சி சிந்தனையாளர் கழகம் மற்றும் சிந்தனையாளன் ஆசிரியர் குழுவின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

18 மாலை 4 மணியளவில் இரங்கல் கூட்டத்தில் பங்கேற்று இறுதி அஞ்சலி செலுத்தியோர், பல் மருத்துவர் எஸ்.எஸ்.முத்து நீ.செல்வேந்திரன், ச.இராதாகிருஷ்ணன், இரா.கலியபெருமாள், திரு வரங்கம் அன்பழகன், திருச்சி. ந.கருணாகரன், சீனி-விடுதலைஅரசு, வனவர் இல.கோவிந்தசாமி, கந்த வேல்குமார், சரவணன், நடராஜன், துரைராசன் தம்பி க.தர்மராசன் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகம், மா.பெ.பொ.க. தந்தை பெரியார், திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக்கழகம், காங்கிரசு, ஆகிய கட்சிகளின் தோழர்கள் குடும்ப உறவினர்கள் பெரியார் தொண்டர்கள் திரளாகக் கலநது கொண்டு இறுதி வணக்கம் செலுத்தினர்.

**வாழ்க துரைராசன் புகழ்!**

## இராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாற்றப்பெற்ற

# ஏழு தமிழர்களை விடுதலை செய்திட வழி என்ன?

## எல்லாக் கட்சித் தலைவர்களும் இந்திய அரசை நேரில் வற்புறுத்துங்கள்!

— வே.ஆனைமுத்து



முருகன் சாந்தன் பேரறிவாளன்
நளினி ரவிச்சந்திரன் ராபர்ட் பயஸ் ஜெயகுமார்

**இரா**ஜீவ் காந்தி 21-5-1991இல் தமிழ் மண்ணில் கொல்லப்பட்டார்.

பேரறிவாளன், சாந்தன், முருகன் மூவரும் தூக்குத் தண்டனைக் கைதிகளாக இருப்பதிலிருந்து வாழ்நாள் கைதிகளாக மாற்றப்பட வேண்டும் எனக் குடிஅரசுத் தலைவரிடம் கோரி, அ.தி.மு.க. அரசு 30-8-2011இல் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியது.

அதே சமயத்தில் இம்மூவரும் உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். தமிழரான ப.சதாசிவம் தலைமை நீதிபதியாக வரவாய்த்தது. அவரை உள்ளிட்ட மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, கருணை காட்டி மூவரின் தூக்குத்தண்டனையை வாழ்நாள் தண்டனை யாகக் குறைத்தது.

1991 முதல் 2011 வரையில், அப்போதே இம்மூவர் உள்ளிட்ட ஏழு பேர்களும் இருபது ஆண்டுள் சிறைத் தண்டனையை அனுபவித்துவிட்டனர்.

தலைமை நீதிபதி ப.சதாசிவம் தலைமையிலான அமர்வு வழங்கிய தீர்ப்பின் இறுதியில், குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 432இன்படி, ‘உரிய அரசு (Appropriate Govt) கைதிகளை விடுதலை செய்வது பற்றி முடிவு செய்யலாம்’ என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

**பிரிவு 432 (1) என்ன சொல்கிறது?**

**ஒருவர் எந்தக் குற்றத்திற்காகவும் தண்டனை வழங்கப்பட்டிருந்தால் உரிய அரசு எந்த நேரத்திலும் எந்த நிபந்தனைகளையும் விதிக்காமலோ அல்லது தண்டனை விதிக்கப் பெற்றவர் ஒப்புக் கொள்ளும் நிபந்தனைகளின் மீதோ அவருடைய தண்டனையை இடைக்காலமாக நிறுத்தி வைக்க லாம் அல்லது அதன் ஒரு பகுதியையோ அல்லது முழுவதையுமோ அரசு தள்ளுபடி செய்யலாம்.**

**பிரிவு 432 (2) என்ன சொல்கிறது?**

குற்றம் சாட்டப்பெற்ற கைதி தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை இடைக்காலமாக நீக்கம் செய்ய வேண்டும் என்றோ அல்லது தள்ளுபடி செய்ய வேண்டும் என்றோ விண்ணப்பித்து இருக்கும்போது, உரிய அரசு தண்டனை வழங்கிய அல்லது தண்ட னையை உறுதி செய்த நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியிடம் அந்த விண்ணப்பம் ஏற்கப்பட வேண்டுமா அல்லது மறுக்கப்படவேண்டுமா என்றும், அவர் அத்தகைய தன்னுடைய கருத்துக்கான காரணங் களையும் தெரிவிக்க வேண்டும் என்றும் கோரலாம். மேலும் அத்தகைய கருத்து அடங்கிய அறிக்கையுடன் விசாரணை நீதிமன்றத்தின் சான்று செய்யப்பட்ட ஆவணத்தையோ அல்லது அங்குள்ள அத்தகைய ஆவணத்தையோ அப்புமாறு கோரலாம்.

மேலே 432 (1)இல் உள்ள விளக்கம் தெளிவாக இருப்பதாகவும், குற்றம் சாட்டப்பெற்றவருக்கு நீதி வழங்குவதாக இருப்பதாகவும் நாம் கருதுகிறோம். இந்த நிலையில் 432 (2), (3), (4), (5), (6), (7) ஆகிய உட்பிரிவுகள் குற்றம் சாற்றப் பெற்றவருக்கு நீதி கிடைக் கக் கூடாது என்பதற்காகவே எழுதப்பட்டிருப்பதாக நாம் கருதுகிறோம். நிற்க.

குற்றவியல் தண்டனைச் சட்டத்தில் பிரிவு 45இல் உள்ள விளக்கம் “வாழ்நாள்” (Life) என்கிற சொல் வேறுவகையாகச் சொல்லப்பட்டிருந்தால் அன்றி, ஒரு மனிதனின் வாழ்நாள் என்பதைக் குறிப்பதாகும்.

பிரிவு 46இல் “மரணம்” (death) என்பது, வேறு வகை யாகச் சொல்லப்பட்டிருந்தால் அன்றி, ஒரு மனிதனின் சாவு வரை என்பதையே குறிக்கும்.

என விளக்கங்கள் உள்ளன. அடுத்து குற்றவியல் தண்டனைப் பிரிவு 302இன் படி, கொலைக்குற்றத் துக்கான தண்டனை என்பது: எவர் ஒருவர் கொலை செய்தாரோ அவருக்குத் தண்டனை என்பது மரணம் தான் அல்லது (வாழ்நாள் சிறை மற்றும் பணத் தண்டம்

விதிப்பதுதான்) எனக் கூறுகிறது. மேலே கண்ட விதியில் வாழ்நாள் தண்டனை என்கிற சொற்கோவை 1955 இல்தான் இங்கு இடம்பெற்றது. அதற்கு முன் "வாழ்நாள் நாடு கடத்தல்" என்கிற சொற்கோவை மட்டுமே இருந்தது.

மேலே கண்ட குற்றவியல் நடைமுறைச் சட்டமும், குற்றவியல் தண்டனைச் சட்டமும் வெள்ளை இனத்தைச் சேர்ந்த நீதிபதிகளாலும், பார்ப்பன இனத்தைச் சேர்ந்த நீதிபதிகளாலும் வழக்குரைஞர்களாலும் 1860இல் உருவாக்கப்பட்டவை என்பதை நாம் உணரவேண்டும். நிற்க.

இந்தச் சட்டங்கள் இப்படி இருந்தாலும் ஒரு மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒரு கைதியோ அல்லது வாழ்நாள் தண்டனை விதிக்கப்பட்ட ஒரு கைதியோ சிறையில் 14 ஆண்டுகள் சேர்ந்தாற்போல் கழித்துவிட்டால், அவரை விடுப்பில் (Parole) விடுவிப்பதும், அவருடைய விடுப்புக் காலத்தில் சமுதாயத்தில் அவர் எப்படி நடந்து கொள்கிறார் மற்றும் சிறை வாழ்க்கையில் எவ்வாறு நடந்து கொண்டார் என்பவற்றையும் ஆய்வு செய்து, அதற்கான ஆய்வுக் குழுவின் பரிந்துரையின் பேரில் சிறையில் 14 ஆண்டுகள் கழித்த கைதிகள் முற்றிலுமாக விடுதலை செய்யப்பட்டனர்.

நான் வளர்ந்த ஊர் வடக்கலூர் அக்ரகாரம். அது சின்னாற்றின் வடகரையில் உள்ளது. சின்னாற்றின் தென்கரையில் கிளியூர் என்னும் சிற்றூர் உள்ளது. அவ்வூரில் தேவதாசிகள் தெரு என ஒரு தெரு இருந்தது. அந்த வகுப்பில் பிறந்த ஒருவர் தன் வகுப்பிலேயே பிறந்த பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். திருமணம் ஆகாத அவருடைய மைத்துனி சோரம் போய்விட்டார். அப்பெண் மாட்டுக்குத் தீனி போடுவதற்காக சோளத்தட்டையை முழங்காலில் வைத்து முறித்துக் கொண்டிருந்தபோது, அக்காள் கணவன் கதிர்வேல் கொடுவாளோடு சென்று பின்புறம் கழுத்தில் வெட்டிக் கென்றுவிட்டார். அடுத்த நாள் காலையில், நான், அகரம் மக்களோடு சென்று அப்பிணத்தைப் பார்த்தேன். இது நடந்தது 1936இல். கதிர்வேல் கொலைக் குற்றத்துக்காக அந்தமான் தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அவர் 18 ஆண்டுகளில் 1954-55இல் விடுதலை செய்யப்பட்டார் என்பது நாம் அறியத்தக்கது.

அடுத்து, வெள்ளாற்றின் தென்கரையில் அத்தியூர் இருக்கிறது. அருணாசப்படையாட்சி என்பவர் தோப்பு, துரவுகளுக்கும் நிலபுலன்களுக்கும் சொந்தக்காரர். அவர் ஒரு வைப்பாட்டி வைத்திருந்தார். அவருடைய மனைவி வாட்டசாட்டமானவர்.

தன் தோப்பில் கள் இறக்குபவரிடம் பாளை சீவும் கத்தியை வாங்கி வைத்துக் கொண்டு, தன் கணவனின் வைப்பாட்டியை உட்காரவைத்துப் பேன் பார்ப்பது போலப் பார்த்துவிட்டு, தென்னம்பாளை சீவும் கத்தியால் அப்பெண்ணை வெட்டிக் கொன்றுவிட்டாள். கொலை செய்த அருணாசலப் படையாட்சியின் மனைவி, கொலைக் குற்றத்துக்கான தண்டனையாக அந்த மானுக்கு அனுப்பப்பட்டாள். இது 1940இல் நடந்தது. அவர் 1956இல் விடுதலை ஆகி வந்தார். 1967க்குப் பிறகு கூட அவர் உயிர் வாழ்ந்தார். ஆண் வாரிசு இல்லாத அந்தக் குடும்பத்துக்கு நான் 1956 முதல் 1967 வரை மேற்பார்வையாளனாக இருந்தேன்.

நான் அரசியல் சட்ட எரிப்புக் குற்றம் சாட்டப்பெற்று 1958இல் 10- திங்கள் வேலூர் சிறையில் இருந்தேன். சின்னாற்றின் வடகரையில் உள்ள வடக்கலூர் இராம சாமி ரெட்டியார் என்பவரும் இன்னொருவரும், வேறு ஒருவரின் மனைவியோடு கள்ளத் தொடர்பு வைத்திருந்தனர். கணவனைக் கொன்றுவிட்டால் அவருடைய மனைவியைத் தாங்கள் அனுபவிக்கலாம் என்று கருதி, 1942இல், கணவனைக் கொன்று சின்னாற்றில் புதைத்துவிட்டனர். வழக்கில் இருவரும் சிக்கி வாழ்நாள் தண்டனை அனுபவித்தனர். வேலூர் சிறையில் நான் 'பி' வகுப்புக் கைதி. எனக்கு உதவி செய்வதற்காக 'சி' வகுப்புப் கைதியான இராசாமி ரெட்டியார் அமர்த்தப்பட்டார். அவர் தன்னுடைய வரலாற்றை ஒளிக்காமல் என்னிடம் கூறினார். "எனக்கு நன்னடத்தைச் சான்று அளிக்கப்பட்டு இருக்கிறது. விரைவில் விடுதலை ஆவேன்" என்று அவர் என்னிடம் கூறினார். நான் 1958 திசம்பரில் விடுதலை ஆனேன். அவர் 1959இல் விடுதலை ஆனார்.

கிளியூர், அத்தியூர் கொலைகள் வெள்ளையன் காலத்தில் நடந்தவை. அப்போதும் மேலே கண்ட குற்றவியல் நடைமுறைச் சட்டங்களும் குற்றவியல் தண்டனைச் சட்டங்களும் இருந்தன.

எல்லா இந்தியர்களும் வெள்ளையனுக்கு எதிரிகள். அப்போதும் சிறைகள் இருந்தன; அப்போதும் இதே குற்றவியல் நடைமுறைச் சட்டமும், குற்றவியல் தண்டனைச் சட்டமும் இருந்தன. எந்த ஒரு தனி இந்தியனும் வெள்ளையனுக்கு எதிரி அல்லன்.

'ஒரு குற்றவாளி வாழப் பிறந்தவன். சிறையில் வாழ்ந்த காலத்திலும் விடுப்பில் வெளிவந்த காலத்திலும் செம்மையான நடத்தையில் இருந்தவன். அவன் எஞ்சிய நாளில் அமைதியாக வாழ சிறை நிர்வாகமும், அரசு நிர்வாகமும், நீதிமன்றமும், சிறைகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து சான்றிதழ் வழங்கும் குழுக்களும் அன்று நேர்மையாக இருந்தன.

மேலே கண்ட செய்திகள் வெறும் கதைகள் அல்ல.

"வாழ்நாள் நாடுகடத்தல்" என, 1955 வரை தண்டனை வழங்கப்பட்ட போதும், "மரண தண்டனை" (அ) "வாழ்நாள் சிறைத்தண்டனை" என, 1956க்குப் பிறகு தண்டனை வழங்கப்பட்ட போதும், பல கைதிகள் 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்த பிறகு முற்றாக விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதையும், சில கைதிகள் 20 ஆண்டுகளுக்குள் விடு

தலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் எல்லோருக்கும் உணர்த்துவதற்குத்தான் இச்செய்திகள்.

எதைவைத்து, அப்படி, தண்டனையை இரத்து செய்து விடுவித்தார்கள்?

**ஒவ்வொரு நீண்டநாள் கைதி பற்றியும் அவர் சிறையிலிருந்த காலத்தில் திருந்தி இருக்கிறாரா? அவரை விடுதலை செய்தால் அவரால் வெளியிலுள்ள சமூகத்துக்குக் கெடுதி நேருமா? விடுதலை செய்யப்பட்டால் அவருக்கு வெளியில் ஆபத்து இருக்கிறதா? என்பதை, வெளியில் அதற்கான அதிகாரம் படைத்த நன்னடத்தைக்குப ஆய்வு செய்து அரசுக்குக் கொடுத்த அறிக்கையை ஏற்றுத்தான் மாகாண (அ) மாநில அரசினர் அப்படி விடுதலை செய்தனர்.**

**அதாவது, சிறை என்பது கைதிகளைத் திருத்தும் இடம்; ஒரு கைதி திருந்தியிருக்கிறார்; எனவே மாநில அரசு அவரை விடுதலை செய்கிறது.**

**இராஜீவ் கொலைக்குற்றம் சாற்றப்பெற்ற 7 பேரும் மிகவும் திருந்தியிருக்கிறார்கள்; தத்தம் கல்வித் தகுதியை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள்; மற்ற கைதிகளுக்குக் கல்வி கற்றுத் தந்திருக்கிறார்கள். எனவே இந்த ஏழு பேர்களும் உடனே விடுதலை செய்யப்படத் தகுதி பெற்றவர்கள் என்பது அரசும் மக்களும் அறிந்திட வேண்டிய செய்தியாகும்.**

அதற்குமேல், இந்திய அரசமைப்பின் விதி 161 இன் கீழ், ஏழுபேரையும் விடுதலை செய்ய வேண்டும் எனத் தமிழக அரசினரிடம் நாம் எல்லோரும் கோருகிறோம்.

விதி 161 என்ன கூறுகிறது? **குறிப்பிட்ட சில வழக்கு களில் (in certain cases), (அ) குறிப்பிட்ட வழக்குகளில்** தண்டனை பெற்றவரை மன்னித்து ஆணை பிறப்பிக்கவோ, தண்டனையைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கவோ, தண்டனையைக் குறைக்கவோ, கடுந்தண்டனையைக் குறைக்கவோ மாநில ஆளுநர் அதிகாரம் பெற்றவராவார்.

ஒரு மாநில அரசின் அதிகார வரம்புக்கு உட்பட்ட வழக்குகளில், எந்தச் சட்டத்துக்கு எதிராக எந்த ஒருவர் செய்த குற்றத்துக்காகத் தண்டிக்கப்பட்டிருந்தாலும், அவரை மன்னித்துவிடவோ (Pardon), உயிர்த்தண்டனையைக் குறைக்கவோ (reprieve), தண்டனை நிறைவேற்ற வகையில் காலந்தாழ்த்த இசைவளிக்கவோ (respite), தண்டனையைக் குறைக்கவோ (remission), தண்டனையை, இடை நிறுத்தம் (suspend) செய்யவோ, கடுந்தண்டனையைக் குறைக்கவோ (permit or commute) ஒரு மாநில ஆளுநருக்கு அதிகாரம் உண்டு. (The Governor of a Sate shall have power of grant) எனத் திட்டவட்டமாக உள்ளது.

**ஆனால், மேலே உள்ள விதி 161க்கான தலைப்பில், குறிப்பிட்ட சில வழக்குகளில், (in certain cases) என்றிருப்பதானது, மாநில ஆளுநர் எல்லா வழக்குகளிலும் தண்டனை பெற்ற கைதிகளைப் பொறுத்தும் இந்த விதியின் கீழ் அவருடைய அதிகாரத்தைச் செலுத்த முடியுமா என்பதைச் சட்ட வல்லுநர்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது நம் தேர்ந்த கருத்து.**

இவைகளுக்கு ஒரே மாற்றாக, குடிஅரசுத் தலைவருக்கு உரிய அழுத்தம் தந்திடத் தமிழ்நாட்டு அரசினரும் தமிழகத் தலைவர்களும் எல்லாம் செய்ய வேண்டும் என நாம் கருதுகிறோம்.

பிரதமர் இந்திரா காந்தி காலத்துக்குப் பின்னர் காங்கிரசு ஆட்சிக் காலத்திலும், இடைக்காலத்தில் வந்த சனதாக்கட்சி ஆட்சிக் காலத்திலும் சிறைத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகியவை எவையும் நேர்மையாக இல்லை. பிழைக்கத் தெரிந்த வழக்குரைஞர்களும், பெண் விரும்பிகளாகவும், குடிகாரர்களாகவும், கைநிறையப் பணம் பெறுகிறவர்களாகவும், ஆளும் கட்சியை அரவணைத்தும்-அரசு வழக்குரைஞர்களாகவும், நீதிபதிகளாகவும் வர, 1984 முதல் இன்றுவரையில் செல்வாக்கு ஏற்பட்டுவிட்டது.

இச்சூழலில் “இராஜிவ்காந்தி கொல்லப்படுவார்” என்பதை “Illustrated Weekly of India” 1991 மே 25-31 இதழில், பல சோதிடர்கள் எழுதி இருந்தார்கள். அந்தச் சோதிடர்களிடம் எந்தப் புலனாய்வுத் துறையும் விசாரணை நடத்தவில்லையே, ஏன்?

அடுத்து “Times of Astrology” என்ற இதழில் (6.6.1990 முதல் 20.8.1991 க்கு உட்பட்ட காலத்தில்) கே.என்.ராவ் என்பவர், “ராஜீவின் அரசியல் வாழ்க்கையில் அவருடைய உயிருக்கு ஆபத்து நேரக்கூடிய தன்மையில் ஆபத்து இருக்கிறது’ என்று எழுதினார். அதே கே.என். ராவ் 2.6.1991 நாளிட்ட “The Times of India” ஏட்டில், “1990 சூன் முதல் 1991 ஆகஸ்ட்டு காலக்கட்டத்தில் ஓர் அரசியல் கொலை நடக்கும் என்பதைக் கண்டுபிடித்துள்ளேன்” என்றும் எழுதி உள்ளார். இவரிடம் சி.பி.அய் ஆய்வு செய்யாதது ஏன்?

1991 மே 22 முதல் நான் இரண்டு மாதம் கல்கத்தாவிலும், பாட்னாவிலும், தில்லியிலும் இருந்தேன். இவ்வளவு ஏடுகளையும் படிக்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

இராஜீவ் காந்தி கொல்லப்படுவதற்கு 6 மாதங்களுக்கு முன்னர் பாலஸ்தீன விடுதலைத் தலைவர் யாசர் அராபத், இராஜீவ் காந்தியிடம், நேரில் “உங்களுக்கு அயல்நாட்டினரால் ஆபத்து இருக்கிறது” என்று எச்சரித்தார். அதையும் இராஜீவ் காந்தி பொருட்படுத்தவில்லை.

அடுத்து, பி.வி.நரசிம்மராவ் ஆட்சிக் காலத்திலும் சந்திரசேகர் ஆட்சிக் காலத்திலும் இரண்டு ஆட்சிகளையும், சி.ஐ.ஏ.-வையும் ஆட்டிப் படைக்கும் ஆற்றல் பெற்றவர்களாக சந்திராசாமி, சோழவந்தான் சுப்பிரமணியசாமி இருவரும் விளங்கினர்.

சந்திரசேகர் ஆட்சியின்போது ஈராக் பேரில் அமெரிக்கா போர் தொடுத்தது. அப்போது இராஜிவ் காந்தி மேற்கொண்ட சில நிலைப்பாடுகள் அமெரிக்கர்களுக்கு எரிச்சலை ஊட்டின. ''இந்தப் பின்னணிகளில் அமெரிக்க சி.ஐ.ஏ.வும் சந்திரசேகர் ஆட்சியை ஆட்டிப் படைக்கும் சந்திராசாமி, சுப்பிரமணியசாமி கும்பலுந்தான் இராஜிவ் காந்தியை வஞ்சம் தீர்க்கக் காத்திருந்த கும்பல்'', என 1991 சூனில் ''சிந்தனையாளன்'' இதழில் எழுதினேன்.

மேலே கண்ட இவ்வளவு செய்திகளையும் நான் தில்லியிருந்தபடியே எங்கள் சிந்தனையாளன் ஏட்டில் 1991 சூன் திங்களில் எழுதியுள்ளேன்.

இவர்கள் எல்லாம் அமெரிக்காவின் தரகர்கள்; இந்திய ஆட்சியின் கையாள்கள்; பார்ப்பன மேலாண்மையின் காவலர்கள். இவற்றைப்பற்றி எந்தப் புலனாய்வுத் துறையும் ஏன் ஆய்வு செய்யவில்லை?

இராஜீவ்காந்தியைக் கொலை செய்த தாணு 20.5.1991 இல் யாருடைய வீட்டில் தங்கியிருந்தார்? 21.5.1991 இல், யாரோடு கூட்டத்துக்கு வந்தார் என்பதை ஏன் எவரும் ஆய்வு செய்யவில்லை?

இன்று, இராஜீவ் கொலைக்குற்றம் சாற்றப்பெற்றுள்ள 7 வாழ்நாள் தமிழ்க் கைதிகளும், ஒற்றைக் கண் சிவராசனுக்கோ, தாணுவுக்கோ-நேரடியாகக் கொலைக்கு ஆயத்தமான என்ன தீய ஏற்பாடுகளைச் செய்தார்கள்? எங்கே கூடிச் சதி செய்தார்கள்? பேட்டரி வாங்கித் தந்த குற்றம் செய்த பேரறிவாளனும், ஈழத்து முருகனைத் திருமணம் செய்து கொண்ட நளினியும் என்ன குற்றம் செய்துவிட்டார்கள்? இதற்கு என்ன சான்றுகள் உள்ளன?

எங்கோ இத்தாலியில் பிறந்த ஒரு சோனியா காந்தியின் கணவர் கொல்லப்பட்டார் என்கிற ஒரே காரணத்துக்காக-இராஜீவ் காந்தியை, பிரியங்காவும் இராகுலும் இராஜீவின் வாரிசுகளாக இந்தியாவை ஆட்சி செய்ய வேண்டும் என்கிற ஒரே நோக்கத்தோடு, இராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப் பெற்றவர்களை உயிரோடு வைத்துச் சாகடிக்க வேண்டும் என்கிற வஞ்சம் தீர்க்கும் எண்ணத்தால்தான், பச்சை அடிமையான பிரதமர் மன்மோகன்சிங் ஆட்சிக் காலத்தில், பிரணாப் முகர்ஜி, கர்நாடக எஸ்.எம்.கிருஷ்ணா, தமிழ்நாடு ப.சிதம்பரம் ஆகியோர் வஞ்சம் தீர்க்கப் பார்த்தார்கள். இவர்களின் ஏவல் நாய்களாக, சி.பி.ஐ, ரா இருந்தன; மற்றும் பா.ஜ.க.வுக்கும், இன்று இவை கையாட்களாக உள்ளன.

இவ்வளவு இக்கட்டான சூழ்நிலைகளில், 2011 முதல் இராஜீவ் கொலைக்குற்றம் சாட்டப்பெற்ற 7 பேரை விடுதலை செய்வதில் உள்ளார்ந்த அக்கறையோடு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா எல்லாம் செய்திருக்கிறார் என்பதில் அய்யமில்லை. இது பாராட்டுக்குரியது.

இந்நிலையில் 2016இல் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளின் தலைவர்களும், பிற அமைப்பினரும், மக்களவையிலும் - மாநிலங்களவையிலும் உறுப்பினர்களாக உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 57 பேர்களும் என்ன செய்ய வேண்டும்?

மாண்புமிகு முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், உடனடியாக எல்லாக் கட்சிகளின் தலைவர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்து, 7 தமிழர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகள் பற்றி அவர்களுடன் கலந்துபேச வேண்டும். அ.தி.மு.க.வுக்கு மக்களவையிலும் மாநிலங்களவையிலும் 50 உறுப்பினர்கள் உள்ளனர். தி.மு.க.வுக்கு மாநிலங்களவையில் 5 உறுப்பினர்கள் உள்ளனர். பா.ம.க., பா.ஜ.க. உறுப்பினர்களும் உள்ளனர்.

மேலே கண்டபடி எல்லாக் கட்சித் தலைவர்களையும், குறைந்தது 50 நாடாளுமன்ற உறுப்பினர்களையும், முதலமைச்சர் அவர்கள் தம்மோடு அழைத்துக்கொண்டு, உடனடியாக இந்தியப் பிரதமர், இந்திய உள்துறை அமைச்சர், இந்திய சட்டம்-நீதி அமைச்சர் ஆகியோரை நேரில் கண்டு குற்றம் சாற்றப்பெற்ற 7 தமிழர்களையும் விடுதலை செய்யவேண்டும் என்று இந்திய அமைச்சரவை முடிவு செய்து, குடிஅரசுத் தலைவருக்கு அழுத்தம் தரவேண்டும் என்று கோர வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இதற்கு ஏதுவாக, சட்டமன்றத்தில் மீண்டும் ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்றும், அப்படித் தீர்மானம் நிறைவேற்றப் படுவதற்கு முன்னர் குற்றம் சாட்டப் பெற்ற 7 பேரும் குடிஅரசுத் தலைவருக்கு கருணை மனு அனுப்ப வேண்டும் என்றும் நாம் மனமாரக் கருதுகிறோம்.

இப்படிப்பட்ட கோரிக்கைகளுக்கு ஆக்கம் சேர்க்கும் வகையில், கடந்த 11-1-2016 சனிக்கிழமை சென்னையில், பேரறிவாளனின் தாயார் அற்புதம் அம்மாளின் தலைமையில் மாபெரும் பேரணி நடத்தி 7 தமிழ் மறவர்கள் விடுதலைக்கு ஒரு தூண்டுகோலை ஏற்படுத்தியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

இவர்கள் 7 பேரும் விடுதலை செய்யப்படுகிற வரையில், எந்த வேறுபாடும் கருதாமல், சிறிய அளவிலோ பெரிய அளவிலோ 33 மாவட்டங்களிலும் 7 பேர் விடுதலையை மட்டுமே கோரிக்கையாக வைத்துத் தொடர்ந்து பேரணிகளை நடத்தவேண்டும் என்று அன்போடு அனைவரையும் வேண்டிக் கொள்கிறேன். இதற்கு உரிய பங்களிப்புச் செய்திட மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி ஆயத்தமாக உள்ளது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

# பசுப்பாதுகாப்பும், இந்துத்துவப் பாசிசமும், மக்களின் அடிப்படை உரிமைகளும்

- க.முகிலன்



*பசுவதைத் தடுப்புச் சட்டத்தைத் தீவிரமாக ஆதரித்த இராசேந்திரபிரசாத் அரசமைப்புச் சட்டத்தில் கையெழுத்திடும் காட்சி*

18-6-2016 தி இந்து (ஆங்கிலம்) நாளேட்டில் இராஜஸ்தான் மாநிலத்தில் ஆரவல்லி மலைத்தொடரை ஒட்டியுள்ள துங்கட்பட்டி பகுதியில் தண்ணீரும் தீவனமும் கிடைக்காமல் நூற்றுக்கணக்கில் மாடுகள் இறந்து கிடக்கின்றன என்கிற செய்தி படத்துடன் வெளியாகி உள்ளது. பசுப்பாதுகாப்புக்கெனத் தனியாக ஒரு அமைச்சகத்தை முதலில் உருவாக்கிய இராஜஸ்தான் மாநிலத்தில்தான் பட்டினியால் மாடுகள் மடிந்து கொண்டிருக்கின்றன.

அயோத்தியில் பாபர் மசூதியை இடித்து அந்த இடத்தில் இராமன் கோயில் கட்டுவதை முதன்மையான முழக்கமாகக் கொண்டு பல மாநிலங்களிலும், நடுவண் அரசிலும் சங்பரிவாரங்களின் துணையுடன் பாரதிய சனதாக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. அய்ந்தாண்டு களுக்குமேல் தலைமை அமைச்சராக இருந்த வாஜ்பாய் ஆட்சியில் பாபர் மசூதியை சங்பரிவாரங்கள் தகர்த்த இடத்தில் இராமனுக்கு ஏன் கோயில் கட்டவில்லை? அயோத்தியில் இராமனுக்குக் கோயில் கட்டுதல் என்கிற அரசியல் ஆயுதத்தால் இனி பெரும் பயன் விளையாது என்பதைப் புரிந்து கொண்டதால், இந்துக்களின் புனித அடையாளமாகத் திகழும் பசுவைப் பாதுகாப்போம்; இறைச்சிக்காகப் பசுக்கள் கொல்லப்படுவதைத் தடுப்போம்; பசுவைக் காப்பதே ஒவ்வொரு இந்துவின் சுயமரியாதையைக் காப்பதாகும் என்கிற மதவெறி அரசியலை அண்மைக்காலமாக முதன்மைப்படுத்தி வருகின்றன சங்பரிவாரங்கள்.

தலைமை அமைச்சர் நரேந்திரமோடி சைவ உணவே உடல் நலனுக்கு ஏற்றது என்று அவ்வப்போது ‘உபதேசம்’ செய்து வருகிறார்.

கி.பி.நான்காம் நூற்றாண்டில் வடஇந்தியாவில் குப்தர்கள் ஆட்சி முதல்தான் பசு புனிதமானது என்கிற இந்துத்துவக் கோட்பாடு வலுப்பெற்றது. சைவ உணவே உயர்ந்தது என்று பார்ப்பனியம் எவ்வளவுதான் கூச்சல் போட்டாலும் மனிதகுலம் தோன்றிய காலம் முதலாய் இருந்துவரும் இறைச்சி உண்ணும் வழக்கம் பெருமளவில் இருந்து வருகிறது என்பதை நடுவண் அரசின் ஆய்வு (Sample Registration System Baseline Survey) புலப் படுத்துகிறது.

12-6-2016 நாளிட்ட ‘தி நியு இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளேட்டின் முதல் பக்கத்தில் பெரிய செய்தியாக இது வெளியிடப்பட்டுள்ளது. அந்த விவரம் கீழே தரப் பட்டுள்ளது.

| வ. எண். | மாநிலம் | சைவ உணவு உண்போர் விழுக்காடு | அசைவ உணவு (புலால்) உண்போர் விழுக்காடு |
|---|---|---|---|
| 1. | ஜம்மு-காஷ்மீர் | 31.45 | 68.25 |
| 2. | பஞ்சாப் | 66.75 | 33.25 |
| 3. | இராஜஸ்தான் | 74.9 | 25.1 |
| 4. | அரியானா | 69.25 | 30.75 |
| 5. | குசராத் | 60.95 | 39.05 |
| 6. | மகாராட்டிரம் | 40.2 | 59.8 |
| 7. | கர்நாடகா | 21.1 | 78.9 |
| 8. | கேரளா | 3.0 | 97.0 |
| 9. | உத்தர்காண்ட் | 27.35 | 72.65 |
| 10. | தில்லி | 39.5 | 60.5 |
| 11. | உத்தரப்பிரதேசம் | 47.1 | 52.9 |
| 12. | ஒடிசா | 2.65 | 97.35 |
| 13. | ஆந்திரா | 1.75 | 98.25 |
| 14. | தெலுங்கானா | 1.3 | 98.7 |
| 15. | மத்தியப் பிரதேசம் | 50.6 | 49.4 |
| 16. | பீகார் | 7.55 | 92.45 |
| 17. | மேற்கு வங்காளம் | 1.45 | 98.55 |
| 18. | அசாம் | 20.6 | 79.4 |
| 19. | ஜார்க்கண்ட் | 3.25 | 96.75 |
| 20. | சத்தீஷ்கர் | 17.95 | 82.05 |
| 21. | தமிழ்நாடு | 2.35 | 97.65 |

**மேலே உள்ள புள்ளிவிவரம் மொத்தத்தில் 75 விழுக்காடு மக்கள் புலால் உண்கின்றனர் என்பதைக் காட்டுகிறது. இந்தி பேசும் மாநிலங்கள் எனப்படும் மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேசம், குசராத், அரியானா, இராஜஸ்தான், பஞ்சாப் ஆகிய ஆறு மாநிலங்களில் மட்டும் 47% முதல் 74.9% வரை சைவ உணவினர் உள்ளனர்.**

**எட்டு மாநிலங்களில் 90 விழுக்காட்டினருக்கு மேல் மக்கள் புலால் உண்கின்றனர். பட்டியலிடப்பட்டுள்ள 21 மாநிலங்களில் உ.பி. உள்ளிட்ட 16 மாநிலங்களில் 50 விழுக்காட்டினருக்கு மேற்பட்டவர்கள் புலால் உண்கின்றனர். கேரளம், ஆந்திரம், தெலுங்கானா, தமிழ்நாடு ஆகிய தென் மாநிலங்களில் 97 விழுக்காட்டினர் புலால் உண்கின்றனர்; அதாவது இம்மாநிலங்களில் சைவ உணவு உண்போர் 3% மட்டுமே! தமிழ் நாட்டில் பார்ப்பனர்களில் பெரும்பாலான ஆண்கள் புலால் உண்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். ஆனாலும், பார்ப்பன-மேல்சாதி ஆளும் வர்க்கத்தினர், 'பசு புனிதமானது என்பதைக் காப்போம்; பசு இறைச்சிக்காகக் கொல்லப்படுவதைத் தடுப்போம், என்பதைத் தம் ஆதிக்க அரசியலுக்கான கருவியாகப் பயன்படுத்தி, வரலாற்று அறிவும் பகுத்தறிவும் இல்லாத வெகுமக்களை ஏமாற்றி வருகின்றனர்.**

### வேதகாலம் முதல் பல நூற்றாண்டுகளாகப் பார்ப்பனர்கள் மாட்டிறைச்சி உண்ட வரலாறு

1920களில் அரப்பா, மொகஞ்சதாரோ நகரங்கள் அகழ்வாய்வு மூலம் கண்டறியப்படும்வரை, வேதகால ஆரிய நாகரிகமே இந்தியாவின் தொன்மையான பெருமைக்குரிய நாகரிகம் என்று ஆரியப் பார்ப்பனர்கள் கூறிவந்தனர். ஆனால் 1920களில் கண்டறியப்பட்ட சிந்துவெளி நாகரிகம் கி.மு.3000-1750 காலத்தியது; ஆரிய நாகரிகத்துக்கு மிக முந்தியது; ஆரிய நாகரிகத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது மட்டுமின்றி, பல வகையிலும் உயர்ந்த நகர நாகரிகம் என்று வரலாற்று வல்லுநர்களால் மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது. அதே போன்று வேதகால ஆரியர்கள் கி.மு.1500-1000 கால இடைவெளியில், வெளியிலிருந்து வடமேற்குக் கணவாய்கள் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்த அயலவர்கள் என்பதும், இந்தியாவிலிருந்த தொல்குடியினருடன் போரிட்டும், பிற வஞ்சகமான வழிமுறைகளைக் கையாண்டும், ஆரிய மேலாண்மையை நிறுவினர் என்பதும் டி.டி.கோசாம்பி, ரோமிலா தாப்பர், ஆர்.எஸ்.சர்மா போன்ற சிறந்த வரலாற்று ஆய்வாளர்களால் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

**ரிக் வேதம் என்பதே ஆரியர்கள் தங்கள் வேண்டுதல்கள் நிறைவேறவும், தாசர்கள், தஸ்யூக்கள் என்று ஆரியர்களால் இழித்துரைக் கப்பட்ட இந்நாட்டின் தொல்குடியினரை அழிக்க வேண்டியும் ஆரியர்களின் முதன்மையான கடவுளர்களான இந்திரனையும் அக்கினியையும் வேண்டி பசு, காளை,**



*தாக்கூர்தாஸ் பார்கவா*

**கன்று, குதிரை, ஆடுகள் முதலானவற்றை வேள்வித் தீயில் பலியிட்ட சடங்குகளைப் பற்றிய பாடல்களின் தொகுப்பே ஆகும். இவ்வாறு பலியிடப்பட்ட விலங்குகளின் இறைச்சியை உண்டு சோமபானம் எனும் மதுவைக் குடித்து, சூதாடுவதே ஆரிய நாகரிகமாகும்.**

**கால்நடை மேய்ச்சல் சமூகமாக இருந்த வேதகால ஆரியர்கள் யாகத்தில்-வேள்வியில் பலியிடப்பட்ட விலங்குகளின் உணவை மட்டும் உண்ணவில்லை. எல்லா விலங்குகளின் இறைச்சிகளையும் உண்பதே அவர்களின் வாழ்க்கை நடைமுறையாக இருந்தது. வேதங்களில் மட்டுமல்லாது, அதன்பின் எழுதப்பட்ட பிராமணங்களிலும் பசுவின் இறைச்சியைப் பார்ப்பனர் உண்டனர் என்பதற்கு எண்ணற்ற சான்றுகள் உள்ளன. விருந்தினர்களுக்கு விருப்பமான உணவாகப் பசுவின் இறைச்சி கருதப்பட்டது.**

பண்டைக்கால இந்திய வரலாறு பற்றிய சிறந்த ஆய்வாளர்களில் ஒருவராகத் திகழும் டி.என்.ஜா, ''பசு-புனிதம் எனும் மாயை'' (The Myth of Holy Cow) என்ற நூலை 2001 திசம்பரில் வெளியிட்டார். இந்நூல் தமிழில் 'பசுவின் புனிதம்' எனும் பெயரில் 2011ஆம் ஆண்டில் பாரதி புத்தகாலயத்தால் வெளியிடப்பட்டது. 150 பக்கங்கள் கொண்ட இந்நூலில் 55 பக்கங்கள் அளவுக்கு மேலே கண்டவற்றுக்கான ஆதார விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இந்நூலின் சிறப்புக்கும், அதன் கருத்தின் வலிமைக்கும் பெரும் சான்றாக இவை திகழ்கின்றன.

இந்நூலில், ''விருந்தினர்களை உபசரிக்கும் சடங்கான அர்கியம் அல்லது மதுபர்கம் என்று மிகப் பிரபலமாக அழைக்கப்பட்ட ஒரு ஆர்வத்துக்குரிய சடங்கு குறித்து, பிற்கால வேதநூல்கள் அடிக்கடி குறிப்பிடுகின்றன. விருந்தினர்களைக் கவுரவிக்க பசுக்களைக்

கொல்லும் நடைமுறை பண்டைக் காலத்திலிருந்தே இருப்பதாகத் தெரிகிறது. ''விருந்துக்குப் பொருத்தமான பசுக்கள்'' என்ற பொருள் தரும் **அதிதினிர்** (Athithinir) என்ற சொல் ரிக் வேதத்தில் (X-68.3) காணப்படுகிறது. திருமண விழாவின்போது பசு பலி தரப்பட்டது குறித்து ரிக் வேதப்பாடல் ஒன்று குறிப்பிடுகிறது. ஆட்சியாளர் களோ, மரியாதைக்குரியவர்களோ விருந்தினர்களாக வந்தால், மக்கள் காளைகளையோ, பசுவையோ பலி தந்தார்கள் என்று **அய்த்தரேய பிராமணத்தில்** சொல்லப்பட்டுள்ளது'' என விளக்கப்பட்டுள்ளது. (பக்.31)

''இறந்து போனவர் சொர்க்கத்துக்குப் பயணம் செய்ய அவரோடு ஒரு காளையும் எரிக்கப்பட்டது பற்றி அதர்வண வேதம் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளது.'' சிரார்த் தத்தின் போது, வேறு விலங்குகளோடு பசுக்களும், காளைகளும் பலியிடப்படுகின்றன'' (நூல் பக்.32).

இக்கருத்துக்கான விளக்கக் குறிப்பாக இந்நூலில் 114ஆம் பக்கத்தில் குறிப்பு எண்.84 மற்றும் 85 களில், ''வேதநூல்களில் சிரார்த்தம் என்ற சொல் இடம் பெற வில்லை. கானேவின் கருத்துப்படி (தொகுதி IV பக்கம் (35)) கதோஉபநிடத்தில் முதன்முதலாக இச்சொல் இடம்பெற்றுள்ளது. ஆனால் தர்ம சாத்திர நூல்களில் இதுமிக முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டது. சிரார்த்தங்கள் செய்யப்பட வேண்டிய முறை குறித்துப் பதினைந்துக்கும் மேற்பட்ட தனிநூல்கள் மத்திய காலத்தில் உருவாகியிருந்தன. முன்னோர்களின் ஆவிகள் மாட்டிறைச்சியைக் கண்டு பெரிதும் மகிழ்கின்றன என்று ஆபஸ்பதர்ம சூத்திரம் சொல்கிறது என்று, டி.என்.ஜா குறிப்புரையில் குறித்துள்ளார். 55 பக்கங் களில் உள்ள குறிப்புரை ஆதாரங்கள் மூலம் பார்ப்பனர் கள் வேதகாலம், புராண-இதிகாச காலங்கள், முதலாக கி.பி.நான்காம் நூற்றாண்டில் குப்தர்கள் காலம் வரை மாட்டிறைச்சியை விரும்பி உண்டு வந்தனர் என்பதைத் தெளிவாக அறிய முடிகிறது.

டி.என்.ஜா நூலில் பக்கம் 96இல் உள்ள ஒரு பகுதியை இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாகும்.

''காவியங்கள் வெளிப்படுத்தும் ஆதாரங்கள் மிகவும் சுவையானதாக இருக்கின்றன. மகாபாரதத்தில் பெரும்பாலான பாத்திரங்கள் இறைச்சி உண்பவர்களாக இருக்கிறார்கள். காயல், சம்பாரா, எருமை உள்ளிட்ட பல்வேறு விலங்குகளின் இறைச்சிகளை யுதிர்ஷ்டிரர் தருவார் என்று ஜெயத்ரதனுக்கும் அவன் பரிவாரங் களுக்கும் திரௌபதி வாக்குறுதி தருகிறார். வனவாசம் சென்றபோது இறைச்சி உணவால்தான் பாண்டவர்கள் உயிர் பிழைத்ததாகத் தெரிகிறது.''

''நந்திதேவரின் புகழ்பாடும் குறிப்புகளையும் மகா பாரதத்தில் பார்க்க முடிகிறது. அவரின் சமயலறையில் நாள்தோறும் இரண்டாயிரம் பசுக்கள் கொல்லப்பட்டு




*2016 மே 31 அன்று இராஜஸ்தானில் சோத்திசத்ரி என்ற இடத்தில் பசுக்களை இறைச்சிக்காக வாகனத்தில் ஏற்றிச் சென்றார் என்பதற்காக இந்துத்துவ வெறியர்களால் ஒரு முசுலீம் தாக்கப்படுகிறார்*

வந்தன. தானியங்களோடு, இறைச்சியும் பார்ப்பனர் களுக்குத் தரப்பட்டு வந்தன. வேள்விகளுக்காகவும், உணவுக்காகவும் பசு உள்பட விலங்குகள் கொல்லப் பட்டு வந்ததைப் பற்றிய குறிப்புகளை வால்மீகி இராமா யணத்தில் அடிக்கடி பார்க்கலாம். உண்ணத் தகுந்தவை என்று தர்ம சாத்திரங்களால் அறிவிக்கப்பட்ட விலங்கு களைக் (குதிரை இதில் முதலிடம் பெற்றிருந்தது) பெரும் எண்ணிக்கையிலும் பலிதந்த ஒரு பெரிய வேள்வியை தசரதன் நடத்திய பின்னால்தான் இராமன் பிறந்தான். இராமன் தன் சபதத்தை நிறைவேற்றி முடித்தால் ஆயிரம் பசுக்களையும், நூறு ஜாடி மதுவையும் தானம் தருவதாக யமுனை ஆற்றைக் கடக்கும்போது சீதை உறுதி தருகிறாள். மான் இறைச்சி மீது சீதை கொண்டி ருந்த பெருவிருப்பத்தின் காரணமாக, அவள் கணவன் மான் வேடத்தில் இருந்த மாரீசனைக் கொல்லவும் துணிகிறான். இராமனைக் கவுரவிப்பதற்காக பரத்வாஜர் ஒரு கொழுத்த கன்றைப் பலி தருகிறார்.''

இராமனை இந்தியாவின் அவதார புருஷனாக இசுலாமியர்கள் ஏற்றுக்கொண்டு, மாட்டிறைச்சி உண்பதையும் கைவிடவேண்டும் என்று திரிசூலத் தைக் கைகளில் ஏந்திக்கொண்டு கொலை வெறியுடன் திரியும் சங்பரிவாரங்களின் போக்கு எந்த அளவுக்குக் கயமையானது என்பதை டி.என்.ஜா கூறியுள்ள கருத்துத் தோலுரித்துக் காட்டுகிறது. 2013 செப்டம்பர் மாதம் உத்தரப்பிரதேசத்தில் தாத்ரி என்ற ஊரில் ஒரு முசுலீம் தன் வீட்டில் மாட்டுக் கறியை வைத்திருந்தார் என்பதற்காக, இந்துத்துவ வெறியர்கள் அவர் வீட்டிற்குள் புகுந்து அவரை அடித்துக் கொன்றனர் என்பது இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.

### இந்து மதத்தில் பசுவின் புனிதமும் அகிம்சையும் தோன்றல்

கி.மு.1000-600 காலத்தில் யஜுர், சாம, அதர்வண வேதங்கள், பிராமணங்கள், சில தொடக்க கால உபநிட



*பணம் கொழுத்த பணக்காரர்கள் பரலோகம் போகும் நம்பிக்கையில் நடத்தும் கோசாலை*

தங்கள் இயற்றப்பட்டன. இக்காலப் பகுதியில் இரும்பின் பயன்பாடு பரவியதால், உறுதியான கருவிகள் உருவாக்கப்பட்டதால், வேளாண்மைத் தொழில் முதன்மை பெற்று வளர்ச்சி அடைந்தது. வேளாண்மைச் சமூகமாகப் பல இனக் குழுக்கள் வளர்ச்சி பெற்று சிற்றரசுகளாக உருவாயின. இத்தகைய வேளாண் இனக்குழு சமூகங்களிலிருந்து மகாவீரரும் (கி.மு.599-527), கவுதம புத்தரும் (கி.மு.563-483) பிறந்தனர். இவர்கள் வேளாண் தொழிலுக்கு ஆதாரமாக விளங்கும் பசுக்களையும் எருதுகளையும் பார்ப்பனர்கள் வேள்வியில் பலியிடுவதைக் கடுமையாக எதிர்த்தனர். கொல்லாமை, அகிம்சைக் கோட்பாட்டை மக்களிடையே பரப்பினர். வருணாசிரமத்தை எதிர்த்தனர். வேளாண் குடிகளும், வேளாண்மை மற்றும் கைத்தொழில்கள் வளர்ச்சியால் உருவாகியிருந்த வணிகர்களும், அசோகர் போன்ற அரசர்களும் பவுத்த, சமணக் கோட்பாடுகளை ஆதரித்தனர். **வேள்விகளில் கால்நடைகளைப் பலியிடுவதை எதிர்த்த போதிலும் மக்கள் இறைச்சியைத் தொடர்ந்து உண்டனர்.**

பார்ப்பனர்கள், வேதச்சடங்குகளைச் சத்திரியர்களுக்குச் செய்தது போல் வைசியர்களுக்குச் செய்ய நீண்டகாலமாக மறுத்து வந்தனர். அப்போது வேளாண்மையே வைசியர்களின் முதன்மையான தொழிலாக இருந்தது. அதன்பின்னர்தான் வாணிகம் அவர்களின் முதன்மையான தொழிலாக மாறியது. வைசியர்கள் பெரும் செல்வர்களான பிறகு, தம்மை முன்பு மதிக்க மறுத்த பிராமணியத்துக்கு எதிராகச் சமணத்தையும், பவுத்தத்தையும் மதமாக ஏற்றனர். வணிகத் தொழில் காரணமாக இவ்விரு மதங்களும் இந்தியா முழுவதும் பரவிட வைசியர்கள் துணை புரிந்தனர். அரசர்களும் பவுத்த, சமண மதங்களைப் புரந்தனர். எனவே கி.மு.300 முதல் கி.பி.600 வரை இந்தியாவில் பவுத்தமும் சமணமும் செல்வாக்குடன் திகழ்ந்தன. 'வைதிக பிராமண மதம்' பின்னுக்குத் தள்ளப்பட்டது.

**அதனால், காலத்திற்கேற்பத் தம்மைத் தகவமைத்துக் கொண்டு தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதில் கைதேர்ந்தவர்களான ஆரியப் பார்ப்பனர்கள் மாட்டிறைச்சியை மட்டுமின்றி எல்லா வகையான இறைச்சியையும் உண்பதைக் கைவிட்டு, பவுத்தமும், சமணமும் கூறும் கொல்லாமை, அகிம்சைக் கோட்பாட்டைப் பின்பற்றுவதில் தாங்களே சிறந்தவர்கள் என்று காட்டிக் கொண்டனர். பவுத்த, சமணச் செல்வாக்கை வீழ்த்துவதற்காக, பசுவைப் புனிதமாகப் போற்றத் தலைப்பட்டனர்.**

இது குறித்து அம்பேத்கர், ''மாட்டுக்கறி சாப்பிடுவதை நிறுத்தியதும் பசுவைக் கும்பிடத் துவங்கியதும் பிராமணர்கள் மேற்கொண்ட ஒரு தந்திரமாகும். பவுத்தத்திற்கும் பிராமணியத்திற்கும் இடையில் நடந்த போராட்டத்திலும், அதில் பவுத்தத்திற்கு மேலாக பிராமணியம் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முயன்றதிலும் பசு வழிபாட்டுக்கான காரணம் கிடக்கிறது'' என்று எழுதியுள்ளார்.

பவுத்தத்தை வீழ்த்திட பார்ப்பனர் செய்த மற்றொரு சூழ்ச்சியை அம்பேத்கர் ''சூத்திரர் யார்''? என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். ''இந்தியாவின் மீது படையெடுத்து வந்த ஹூணர்களைப் பார்ப்பனர்கள், மத்திய இந்தியாவில் பரவிவந்த புத்தமதத்தைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, அக்கினி முன் அமரவைத்து யாகம் நடத்தி, சத்திரியர்களாக்கி, இராஜபுதானா என்ற இராஜ்யத்தினை ஆளும்படிச் செய்து, அக்கினிகுல சத்திரியர் என்று அவர்களை அழைத்தனர். பல ஆராய்ச்சியாளர்கள் இந்தக் கருத்தினை வலியுறுத்தி எழுதி வருகின்றனர்'' என்று அம்பேத்கர், ''சூத்திரர் யார்'' நூலில் கூறியுள்ளார்.

இந்தச் சூழலில் பிறந்த ஆதிசங்கரர் (கி.பி.788-820) தன்னுடைய தத்துவ அறிவாற்றலால், வாதத் திறமையால், இந்தியா முழுவதும் பயணம் செய்து பவுத்த-சமண அறிஞர்களை அரசர்கள் ஆதரவுடன் வாதப்போரில் வெற்றி கொண்டார். அதன் வழியாக அரசர்களைத் தன் பக்கம் ஈர்த்தார். மீண்டும் 'வேத பிராமணியம்' புதிய வடிவில் எழுச்சி பெற்று மீண்டும் தன் மேலாதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டது. அதன் பின் பவுத்தம் இந்தியாவில் அடியோடு அழிந்தது. சமணம், பெயரளவில், வைசியர்களிடம் ஒட்டிக் கொண்டிருந்தது. அரசர்கள் மனுஸ்மிருதி போன்ற சட்ட வடிவம் கொண்ட சாத்திரங்களின் அடிப்படையில் ஆட்சி செய்தனர். புலாலை மறுத்து சைவ உணவே மரியாதைக்குரியது என்று பார்ப்பனர்கள் ஆக்கினர். பசுவின் உடலை எல்லாத் தெய்வங்களும் உறைவிடமாகக் கொண்டுள்ளன எனும் பொய்யான-புனிதப் போர்வையைப் பார்ப்பனர் போத்தினர். பிறப்பால் உயர்ந்த பார்ப்பனர் மேற்கொண்ட சைவ உணவு முறையை, பசுவைப் புனிதமாகக் கருதும் சிந்தனையைப்

பார்ப்பனர் அல்லாதாவர்களும் பின்பற்றத் தொடங்கினர். **"பார்ப்பனரைப் போலச் செய்தலே உயர்வு" என்கிற சுயசிந்தனையும், சுயமரியாதையும் அற்ற போக்கு இன்றுவரை நீடிப்பதால்தான் பார்ப்பனியம் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது.**

### அரசமைப்புச் சட்டத்தில் புனிதப்பசு நுழைந்த வரலாறு

பார்ப்பனர்கள் மாட்டிறைச்சி உள்ளிட்ட பிற விலங்குகளின் இறைச்சியை உண்பதைக் கைவிட்டு, சைவ உணவுக்கு மாறிய போதிலும், தாழ்த்தப்பட்ட-பழங்குடி வகுப்பு மக்கள், பார்ப்பனரல்லாதவர்களில் உழைக்கும் சாதியினர் மற்றும் இசுலாமியர், கிறித்துவர் மாட்டிறைச்சியை உண்டு வந்தனர்.

1885இல் இந்திய தேசிய காங்கிரசுக் கட்சி நிறுவப்பட்டது. இதன் நோக்கம் பார்ப்பன-பனியா மேல் சாதியினர் பிரிட்டிஷ் ஆட்சியிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதே ஆகும். அப்போது 25 விழுக்காடு மக்களாக இருந்த இசுலாமியரில் மேல் தட்டுப் பிரிவினரும் ஆட்சி அதிகாரத்துக்குப் போட்டியாக நின்றனர். எனவே முசுலீம்களுக்கு எதிராக அனைத்துப் பிரிவு இந்துக்களையும் ஒரணியில் திரட்டவேண்டிய தேவை மேல் சாதியினரின் கட்டுப்பாட்டில் இருந்த காங்கிரசுக்கு ஏற்பட்டது. மாட்டுக்கறி உண்ணும் முசுலீம்களுக்கு எதிராக, 'பசுவைப் பாதுகாப்போம்' - 'பசுவை உணவுக்காகக் கொல்லக்கூடாது' என்ற முழக்கங்கள் ஆதிக்கச் சாதி இந்துக்களால் எழுப்பப்பட்டன. ஆரிய சமாஜத்தவர் இதில் முதல்வரிசையில் நின்றனர். 1890களில் வடஇந்தியாவில் பசுப்பாதுகாப்புத் தொடர்பான மோதல்களில் சிலநூறு பேர் மாண்டனர்.

பசுவை அரசியல் ஆதிக்கத்திற்கான ஆயுதமாகப் பயன்படுத்தியவர் காந்தியே! இதில் வேடிக்கை என்னவெனில் இந்து-முசுலீம் ஒற்றுமைக்காகப் பாடுபடுவதாகச் சொல்லிக்கொண்டே, பசுவின் புனிதத்தின் காவலராககவும் காந்தி விளங்கினார். 1909 இல் காந்தி எழுதிய 'இந்திய சுயராஜ்யம்' என்ற நூலில், "பசுவைப் பாதுகாப்பதற்கு எனக்குத் தெரிந்த ஒரே வழி நாட்டின் நன்மையை முன்னிட்டுப் பசுவைப் பாதுகாப்பதற்கு என்னுடன் ஒத்துழைக்கும்படி என் முசுலீம் சகோதரர்களைக் கேட்டுக் கொள்கிறேன்" என்று எழுதியிருக்கிறார். அதாவது முசுலீம்கள் மாட்டுக்கறி உண்பதை விட்டுவிட வேண்டுமாம். சங்பரிவாரங்களும் இதைத் தானே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் காந்தி, "இந்து மதத்தின் சாரமே பசுவைப் பாதுகாப்பது தான்... பால் வளத்தைப் பெருக்குவதற்காகப் பண்ணைகளை அமைப்பது என்ற மேற்கு நாடுகளின் இலட்சியங்களிலிருந்து வேறுபட்டதாகவும், அதைவிட மேலானதாகவும் இருப்பது பசுவைப் பாதுகாப்பது என்ற நமது இலட்சியம்தான்" என்று கூறியுள்ளார். ('பசுவுக்கு எப்படிப் பணிவிடை செய்வது' என்கிற நூல், நவஜீவன் வெளியீடு, ஆமதாபாத் 1954, பக்.60)

**இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னரே, 9-12-1946இல் அரசமைப்புச்சட்ட அவை தொடங்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது. அரசமைப்புச் சட்ட அவையின் ஆலோசகராக இருந்த பெனகல் நரசிங்கராவ் (பி.என்.ராவ்) என்கிற பார்ப்பனர் முதலாவது அரசமைப்புச் சட்ட வரைவை எழுதினார். அரசமைப்புச் சட்ட வரைவுக்குழுவின் தலைவராக அம்பேத்கர் ஆன பின், பி.என்.ராவ் உருவாக்கிய வரைவு அம்பேத்கரிடம் 18-10-1947இல் அளிக்கப்பட்டது. அதை அடிப்படையாகக் கொண்டு அம்பேத்கர் எழுதிய அரசமைப்புச் சட்ட வரைவு மக்களின் கருத்தையும், ஆலோசனைகளையும் அறிவதற்காக 1947 பிப்ரவரி 21 அன்று வெளியிடப்பட்டது. பி.என்.ராவின் வரைவிலும் அம்பேத்கரின் வரைவிலும் பசுப்பாதுகாப்புப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.**

எனவே பசுப்புனித வெறியர்கள் வெகுண்டெழுந்தனர். இந்துத்துவ வெறியர்களான பண்டித தாக்கூர்தாஸ் பார்கவா, சேத் கோவிந்ததாஸ் ஆகிய இருவரும் அரசமைப்புச் சட்டத்தில பசுப்பாதுகாப்பு குறித்து விதி 38ஏ என்கிற பிரிவைச் சேர்க்கவேண்டும் என்று ஒரு திருத்தத்தை முன்மொழிந்தனர். அவர்கள் கொடுத்த திருத்தம்; "வேளாண்மையையும் கால்நடை வளர்ப்பையும் நவீனமாக்கவும், அறிவியல் அடிப்படையில் மேம்படுத்தவும் குறிப்பாக, பயன்பாட்டில் உள்ள கால் நடைகளின் இனவகைகளைப் பேணவும், பாதுகாக்கவும், மேம்படுத்தவும், பால்தரும் மாடுகளையும், கன்று ஈனும் அகவையில் உள்ள மாடுகளையும், இளம் கன்றுகளையும், உழைக்கும் வலிமையுடன் உள்ள காளைகளையும் கொல்லப்படுவதைத் தடுக்கவும் அரசு கட்டாயம் (shall) நடவடிக்கை எடுக்க வேண்டும்."

பசுப்பாதுகாப்பு விதியை அரசமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் உள்ள பகுதி III இல் சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்தினர். அடிப்படை உரிமைகள் பகுதியில் சேர்த்த பிறகு இது குறித்து உயர் நீதித்துறை மாறுபட்ட கருத்தைக் கூறமுடியாது.

**இதற்கு ஏழு மாதங்களுக்கு முன்பே-இந்தியாவுக்குச் சுதந்தரம் கிடைப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்-1947 ஆகத்து 7 அன்று அரசமைப்பு அவையின் தலைவராக இருந்த இராசேந்திர பிரசாத், பிரதமராக இருந்த நேருவுக்குப் பசுப் பாதுகாப்பின் முதன்மை குறித்து ஒரு மடல் எழுதினார். "நேற்று நாம் சந்தித்தபோது பசுக்கள் கொல்லப்படுவதைத் தடுக்க வேண்டும் என்கிற கோரிக்கை வேகமாகப் பரவி வருவது பற்றி நான் உங்களிடம் கூறினேன். சட்டத்தின் மூலம் பசுக்கள் கொல்லப்படுவதைத் தடுக்க வேண்டும் என்று நாள்தோறும் எண்ணற்ற மடல்களும் தந்திகளும் வந்து கொண்டே இருக்**

**கின்றன. பசுப்பாதுகாப்பு என்பது இந்துக்களின் உள்ளங்களில் நெடுங்காலமாக வேரூன்றியுள்ள மத நம்பிக்கையாகும். எனவே இதைப்பற்றி நாம் விரைவில் முடிவெடுக்க வேண்டும். பாக்கிஸ்தான் பிரிவினையால் இந்துக்கள் கொந்தளிப்பான மனநிலையில் இருக்கின்றனர். இந்தி மொழிக்கு எந்த அளவுக்கு ஆதரவு பெருகி வருகிறதோ அதேபோன்று பசுவதைத் தடுப்புக் கோரிக்கையும் வலுப்பெற்று வருகிறது'' என்று எழுதி நேருவுக்கு நெருக்குதல் கொடுத்தார்.**

பார்ப்பனர் இரண்டாயிரமாண்டுகளுக்கும் மேலாக மதத்தின் அடிப்படையில் ஸ்மிருதிகள் சட்டப் பாதுகாப்புடன் அனுபவித்து வந்த சிறப்புரிமைகளையும் அதிகாரங்களையும் ஒழித்திடும் வகையில், அரசமைப்பு அவையில் அம்பேத்கர் முன்மொழிந்த இந்துச் சட்டத்திருத்த மசோதா இரண்டு ஆண்டுகள் இழுத்தடிக்கப்பட்டு, இறுதியில் இராசேந்திரபிரசாத் தான் வகிக்கும் அவைத்தலைவர் பதவியைவிட்டு விலகுவேன் என்று நேருவிடம் மிரட்டியதால், கைவிடப்பட்டது. இந்துச் சட்டத்திருத்த மசோதா கைவிடப்பட்டதால் வெறுப்புற்ற அம்பேத்கர் 1951இல் அக்டோபரில் அமைச்சர் பதவியைத் தூக்கி எறிந்தார்.

பசுவதைத் தடுப்புச் சட்டப்பிரிவை அரசமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் பகுதியில் சேர்க்க வேண்டும் என்று பழமைவாதிகள் பலராலும் கடுமையான அழுத்தம் தரப்பட்டது. பசுவதைத் தடுப்புச் சட்டத்துக்கு முற்றிலும் எதிரான கருத்தை அம்பேத்கர் கொண்டிருந்த போதிலும், அடிப்படை உரிமைகள் பகுதியில் இடம் பெறுவதால் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய பேராபத்தைக் கருத்தில் கொண்டு, அரசுக் கொள்கை வழிகாட்டுநெறிகள் (Directive Principles of State Policy) பகுதியில் வைத்திட முடிவு செய்தார். தீவிரவாதிகளுடன் பேசி அவர்களை இதற்கு இணங்க வைத்தார். அதனால் வழிகாட்டு நெறிகள் பகுதியில் 48ஆவது பிரிவாகப் பசுவதைத் தடைச்சட்டம் சேர்க்கப்பட்டது. இதன் மீதான விவாதம் நடந்தபோது, தாக்கூர் தாஸ் பார்கவே பேசும்போது, ''அம்பேத்கர் நயமாகப் பேசி இப்பிரிவு வழிகாட்டும் நெறிகள் பகுதியில் சேர்த்திட எங்களை இணங்கச் செய்துவிட்டார். இது நல்லெண்ணத்தின் பேரில் நாங்கள் செய்த தியாகம்'' என்று கூறினார்.

அரசமைப்பு அவையில் பசுவதைத் தடைச் சட்டம் நிறைவேறியபோது நடந்த விவாதத்தில், அரசமைப்புச் சட்ட வரைவுக்குழுவின் ஆறு உறுப்பினர்களுள் ஒருவராக இருந்த முகமது சாதுல்லா, ''எனக்கு முன் பேசிய தாக்கூர்தாஸ் பார்கவா பொருளாதாரக் காரணியை முதன்மைப்படுத்திப் பேசினார். ஆனால் அவருடைய பேச்சு மூலம் பசுவதைக்கு எதிராக இந்துக்கள் கொண்டுள்ள உணர்வுக்குப் பின்புற வாயில் வழியாகச் சட்டவடிவம் கொடுக்கப்பட்டுவிட்டது'' என்று கூறித் தன் எதிர்ப்பைப் பதிவு செய்தார்.

இப்போது அரசமைப்புச் சட்டத்தில் வழிகாட்டு நெறிகள் பகுதியில் 48ஆவது விதியாக உள்ள பகுதி : ''நவீன மற்றும் அறிவியல் அடிப்படையில் வேளாண்மையையும், கால்நடை வளர்ப்பையும் அமைக்கவும், குறிப்பாக, கால்நடை இனங்களைப் பேணவும், மேம்படுத்தவும், மற்றும் பசுக்களையும் கன்றுகளையும் மற்ற பால்தரும் மாடுகளையும், உழைப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ள காளைகளையும் இறைச்சிக்காக வெட்டப்படுவதைத் தடுக்கவும் அரசு முயற்சிக்க வேண்டும்.''

வேளாண்மை மற்றும் கால்நடை மேம்பாடு என்கிற போர்வையில் நிறைவேற்றப்பட்ட இச்சட்டம் அம்பேத்கரின் முயற்சியால் மாநிலங்களின் அதிகாரப் பட்டியலில் சேர்க்கப்பட்டது. அதனால் இன்று பல மாநிலங்களில் பால்மடிவற்றிய பசுக்களையும், உழைப்புக்குப் பயன்படுத்த முடியாத காளைகளையும் இறைச்சிக்காக வெட்டமுடிகிறது. ''எத்தகைய கெடுபிடியோ கட்டாயப் படுத்தலோ இல்லாத தன்மையில்'' (without any sort of coercion) பசுவதைத் தடுப்பைச் செயல்படுத்த வேண்டும் என்பது அரசமைப்புச் சட்ட அவையில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் கடந்த பத்தாண்டுகளாக பா.ச.க. ஆட்சி செய்யும் மாநிலங்களிலும், இந்துத்துவத்திற்குச் செல்வாக்குள்ள உ.பி. போன்ற இந்தி பேசும் மாநிலங்களிலும் பசுவதைத் தடைச் சட்டத்தின் பேரால் முசுலீம்கள் மிரட்டப்படுகின்றனர்; கொல்லப்படுகின்றனர்.

சுதந்தர இந்தியாவில் உத்தரப்பிரதேச மாநிலத்தில் இந்துமத வெறி உணர்ச்சி கொண்ட சம்பூர்ணானந்த் முதலமைச்சராக இருந்தபோது, 1955இல் பசுவதைத் தடுப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தார். ''இது ஒரு தவறான நடவடிக்கை'' என்று பிரதமராக இருந்த நேரு கூறினாரே தவிர, இதைத் தடுக்கவில்லை. உ.பி. வழியில் அப்போது காங்கிரசின் ஆட்சியின்கீழ் இருந்த இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களிலும் பசுவதைத் தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டது. ஆயினும் பால்மடிவற்றிய பசுக்கள், வேலைக்குப் பயன்படாத காளைகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டன. மேலும் இதுவரை எருமைகளை இறைச்சிக்காக வெட்டுவதை இவர்கள் எதிர்ப்பதில்லை.

1958இல் உச்சநீதிமன்றம் ஒரு வழக்கில், ''பசுவதைத் தடைச்சட்டம் கறவை மாடுகளுக்கு மட்டுமே பொருந்தும். மடிவற்றிய மாடுகளுக்குப் பொருந்தாது'' என்று தீர்ப்பளித்தது. இப்போதுள்ள பாரதியசனதாக் கட்சி 1951இல் ஜனசங்கம் என்ற பெயரில் தொடங்கப்பட்டதாகும். 1962 பொதுத் தேர்தலின் போது ஜனசங்கம், ''ஜனசங்கத்துக்குப் போடும் வாக்கு பசுவைக் காக்கும் வாக்கு ஆகும்'' என்று பரப்புரை செய்தது.

1964இல் ''பாரத் கோ சேவக் சமாஜ்'' (பாரத பசுப் பாதுகாப்புச் சங்கம்) என்ற பெயரில் ஆர்.எஸ்.எஸ்.

மாபெரும் மாநாட்டைத் தில்லியில் அதன் தலைவர் கோல்வால்கர் தலைமையில் நடத்தியது (கோல்வால்கர் 33 ஆண்டுகள் (1940-1973) ஆர்.எஸ்,எஸ். இன் தலைவராக இருந்தார். இதன் தத்துவத் தந்தையாக அவர் கருதப்படுகிறார். ஜனசங்கத்தின் நிறுவனத் தலைவர் தீனதயாள் உபாத்யாயா இம்மாநாட்டில் சிறப்புரை ஆற்றினார். பசுப்பாதுகாப்பு என்கிற பெயரில் இந்துமத வெறி ஊட்டப்பட்டது.

இதையடுத்து, 1966 நவம்பர் 7 அன்று பசுவதைத் தடைச் சட்டத்தை நடுவண் அரசு இயற்றக் கோரி, ஆர்.எஸ்.எஸ். தில்லியில் மாபெரும் பேரணியையும் பொதுக்கூட்டத்தையும் நடத்தியது. இதில் பல ஆயிரக்கணக்கில் நிர்வாண சாமியார்கள் கலந்து கொண்டனர். இப்பாசிசக்கும்பல் தில்லியில் பெரும் கலவரம் நடத்தியது. அப்போது அகில இந்திய காங்கிரசுக் கட்சியின் தலைவராக இருந்த காமராசரின் வீட்டினுள் புகுந்து, தீவைத்து, அவரைக் கொல்ல முயன்றது.

1979இல் மொரார்ஜி தேசாய் தலைமை அமைச்சராக இருந்தபோது, (அந்த அமைச்சரவையில் வாஜ்பாய், அத்வானி ஆகியோர் அமைச்சர்களாக இருந்தனர்) பசுவதைத் தடைச்சட்டம் இந்தியா முழுமைக்கும் பொருந்தும் வகையில் 'பொது அதிகாரப் பட்டியலில் சேர்த்திட நாடாளுமன்றத்தில் சட்டவரைவு கொண்டு வரப்பட்டது. அது நிறைவேறுவதற்கு முன் மொரார்ஜி தேசாய் அரசு கவிழ்ந்துவிட்டது.

2003ஆம் ஆண்டு வாஜ்பாய் ஆட்சியில் பசுவதைத் தடைச்சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. கூட்டணிக் கட்சிகளும், இடதுசாரிக் கட்சிகளும் இதைக் கடுமையாக எதிர்த்ததால், இது கைவிடப்பட்டது. ஆயினும் இப்போது பா.ச.க. ஆட்சி செய்யும் மாநிலங்களில்-மாநில பசுவதைத் தடுப்புச் சட்டத்தின் பேரால் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர், இசுலாமியர், கிறித்தவர், நீண்டகாலமாக மாட்டிறைச்சி உண்ணும் வழக்கம் உள்ள இந்துக்கள் ஆகியோருக்கு மாட்டிறைச்சி கிடைக்காத வகையில் பலவகையான மிரட்டல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. "கோசாலைகள்" என்ற பெயரில் பணம் சுருட்டல் நடந்து வருகிறது.

மடிவற்றிய பசுக்கள், உழைப்புக்குத் தகுதியற்ற காளைகளை இறைச்சிக்கு விற்க இயலாத நிலையில், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்; பயனற்ற மாடுகளுக்குத் தீவனம் போடுவதால், பால்தரும் மாடுகளுக்கும், உழைக்கும் காளைகளுக்கும் போதிய தீவனம் கிடைக்கவில்லை. பயிர் விளைச்சல் இழப்பு ஒருபுறம் உழவர்களைத் தற்கொலைக்குத் தள்ளிக் கொண்டிருக்கிறது; மறுபுறம் பயனற்ற மாடுகளை இறைச்சிக்கு விற்க முடியாமல் அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

1995ஆம் ஆண்டில் மகாராட்டிர அரசு விலங்குகள் காப்புச் சட்டத்திருத்தத்தை இயற்றியது. குடியரசுத் தலைவர்களாக இருந்த கியானி ஜெயில் சிங், பார்ப்பனரான ஆர்.வெங்கட்ராமன், ஆர்.கே.நாராயணன் முதலானவர்கள் இச்சட்டத்திற்கு ஒப்புதல் தரவில்லை. ஆனால் பிராணப் முகர்ஜி 2015 மார்ச்சு 4 அன்று இதற்கு ஒப்புதல் அளித்துள்ளார். இதை எதிர்த்துத் தொடுக்கப்பட்ட வழக்கில் மும்பாய் உயர்நீதிமன்றம் மகாராட்டிர மாநிலத்தின் பசுப்பாதுகாப்புச் சட்டத்தின் முதன்மையான மிகவும் கேடான பிரிவுகளான பிரிவு 5 D(1) மற்றும் பிரிவு 9B ஆகியவை செல்லாது என்று 2016 மே 6 அன்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

**அரசமைப்புச் சட்டம் விதி 21இல் தனி ஒருவரின் வாழ்வுரிமைக்கு அளிக்கப்பட்டுள்ள-எதை உண்பது, எதை நம்புவது, எதை நம்ப மறுப்பது போன்ற தனிநபர் சார்ந்த உரிமைகளைப் பறிக்கும் மகாராட்டிர அரசின் சட்டத்துக்குக் கண்ணை மூடிக் கொண்டு கையொப்பம் இடும் அளவுக்கு குடியரசுத் தலைவருக்குக்கூட இந்துத்துவ வெறி தலைக்கேறிவிட்டிருக்கிறது.**

**2005ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் வழங்கிய ஒரு தீர்ப்பில், "பெரும்பான்மை மக்கள் புலால் உணவை உண்பவர்களாக உள்ளனர். அவர்களைச் சைவ உணவை உண்ணுமாறு கட்டாயப்படுத்த முடியாது. எதை உண்பது என்பது ஒருவரின் தனிப்பட்ட உரிமை. அரசமைப்புச் சட்ட விதி 21இல் இந்தத் தனிஉரிமை வழங்கப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றத்தின் பல வழக்குகளில் இந்த நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது" என்று கூறப்பட்டுள்ளது.**

**பசுவதைத் தடுப்பு என்பது இந்துத்துவப் பாசிசத்தின் ஆயுதமாகும். இந்த ஆயுதத்தைக் கொண்டு இசுலாமியர்களைத் தனிமைப்படுத்தி ஒடுக்க முயல்கிறது. அதேசமயம் இந்துக்களை இந்துத்துவ அணியில் திரட்டுவதற்கான ஒரு கருவியாகவும் பயன்படுத்துகிறது. மோடி ஆட்சி அம்பேத்கருக்குப் புகழ்மாலை சூட்டிக்கொண்டே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மாட்டிறைச்சி கிடைக்காமல் செய்கிறது.**

**எதை உண்பது என்பது தனி ஒருவரின் விருப்ப உரிமை; இது, அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமை. இந்த உரிமையைக் காப்பாற்றிட பசுவதைத் தடுப்புச் சட்டம் என்பதை அடியோடு அகற்றிடப் போராடுவது ஒன்றே தீர்வாகும். இந்துத்துவவாதிகளே! உங்களுக்குப் பிடிக்கவில்லை எனில் தின்னாதீர்!; உங்களை யாரும் உண்ணுமாறு கட்டாயப்படுத்தவில்லை. அதுபோல் மாட்டிறைச்சி உண்ணும் உரிமையைப் பறித்திட உங்களுக்கு உரிமை இல்லை. பசுவின் மீதான புனிதத்தை ஒழிப்பதன் மூலமே இந்த உரிமையை முழுமையாக வென்றெடுக்க முடியும்.** ❖

# கடத்தப்படும் கடவுள்களும் காரல் மார்க்சும்

- குட்டுவன்

இந்திய நாட்டின் கோயில்களில் இருந்து கடவுள்கள் அடிக்கடி காணமல் போகிறார்கள். உள்நாட்டுக் காவல் துறைக்கு மட்டுமல்ல, பன்னாட்டுக் காவல் துறைக்கும் இந்தக் கடவுள்களால் ஏற்படுகிற தொல்லைகள் ஏராளம். தடையற்ற வணிகத்தை ஊக்குவிக்க உலகமயமாதல் திட்டத்தை ஏற்றால் எல்லா நாடுகளும் சமநிலையில் வளர்ச்சி பெறும் என்று உறுதி கூறப்பட்டது. ஆனால் வளர்ந்த நாடுகளுக்கும் வளர்கின்ற நாடுகளுக்கும் உள்ள ஏற்றத்தாழ்வுகள் சிறிதளவும் குறையவில்லை. மாறாக வளர்ந்த நாடுகளுக்குள்ளே பொருளாதாரத் தேக்க நிலையால் வேலைவாய்ப்பின்மையும் ஏற்றத் தாழ்வுகளும் பெருகி வருகின்றன. இதன் காரணமாக குற்றவியல் நடவடிக்கைகள் 1990க்குப் பிறகு பெருகி வருகின்றன. ஐக்கிய நாடுகள் வளர்ச்சி மன்றத்தின் 1999ஆம் ஆண்டு மானுட மேம்பாட்டு அறிக்கையில், குற்றவாளிகள்தான் உலகமயமாதலின் பயன்களைப் பெருமளவில் அனுபவித்து வருகின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. போதைப் பொருள் கடத்தல், கருப்புப் பணத்தை எடுத்துச் செல்லுதல் ஆயுதங்களைப் பரிமாற்றம் செய்தல், பெண்களைப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தல் போன்ற குற்ற நடவடிக்கைகளைச் சந்தை வணிகம் ஊக்குவிக்கிறது எனச் சுட்டப்பட்டுள்ளது. இரும்பு எஃகு தொழில், மோட்டார் வாகனத் தொழில் களைவிட 1995ஆம்ஆண்டில் மட்டும் உலக வணிகத் தில் 8 விழுக்காடு அளவிற்கு மேற்கூறிய சட்டவிரோத வணிகத்தின் பங்கு உயர்ந்துள்ளது. இவ்விதக் குற்ற நடவடிக்கைகளின் வழியாக வரும் வருமானம் ஆண்டிற்கு 67இலட்சம் கோடியைக் கடந்து குற்றவாளிகளின் ஆதிக்கம் ஒரு சக்தி வாய்ந்த மையமாக வளர்ந்து வருகிறது. பன்னாட்டு அளவில் இத்தகைய கும்பல்கள் அரசியலை, வணிகத்தை, காவல் துறையை, இணையத் தளத்தைத் திறன்மிக்க வகையில் குற்ற அமைப்பாக மாற்றி, தங்களின் குற்ற நடவடிக்கைகளின் எல்லை களை மிக ஆழமாக விரிவுப்படுத்தி வருகின்றனர் என்றும் மானுட மேம்பாட்டு அறிக்கையில் சுட்டப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் சுட்டப்பட்டுள்ள கருத்து வெளி வந்து 20 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் சமூக விரோதச் செயல்களும் குற்ற இயல் நடவடிக்கைகளும் கருப்புப் பணப் பதுக்கல்களின் தொகை அளவும் உயர்ந்து வருகின்றன.

மேற்கூறிய அறிக்கையில் காணப்படாத மற்றொரு குற்றவியல் நடவடிக்கையின் தன்மையையும் அதன் வழியாகப் பன்னாட்டு அளவில் கடத்தப்படும் கடவுள் களின் சிலைகளின் எண்ணிக்கையும் கணக்கிட்டால், இன்னும் பல இலட்சம் கோடியைக் கருப்புப் பணத்தில் சேர்க்க வேண்டும்.

கடவுள்களைக் கோயில்களில் இருந்து அகற்றுவது, திருடுவது இந்தியாவில் 14ஆம் நூற்றாண்டில் இருந்து தொடர் நடவடிக்கையாகவே இருந்து வருகிறது. 1323ஆம் ஆண்டு வைகாசித் திங்களில் டெல்லி சுல்தான். சீரங்கம் அரங்கநாதர் கோயிலைக் கொள்ளை யடித்து அதில் இருந்த மதிப்பிட முடியாத தங்க வைர நகைகளை எடுத்துச் சென்றான். மேலும் அரங்க நாதரையே டெல்லிக்கு எடுத்துச் சென்றுவிட்டான். இந்த நடவடிக்கையின்போது 12 ஆயிரம் பேர் திருவரங்கத்தில் உயிரிழந்தனர் என்றும் குறிப்பிடப்படுகிறது. இந்த நடவடிக்கைக்குப் பிறகு திருவரங்கத்தில் இருந்து பத்து வைதிகப் பார்ப்பனர்கள் நடந்தே சென்று டெல்லி சுல்தானைச் சந்தித்து வழிபடுவதற்காக கடவுளைத் திரும்பக் கேட்டனர். டெல்லி சுல்தானும் அவர்களின் வேண்டுகோளைச் செவிமடுத்துக் கடவுளைத் திருப்பிக் கொடுத்தார். பல ஆண்டுகள் நடந்தே எடுத்து வந்த வர்கள் உண்மையான அரங்கநாதனைக் கருவறை யில் மீண்டும் வைக்க வேண்டும் என்று வேண்டினர். ஆனால் மற்றொரு வைதிகப் பார்ப்பனர் கூட்டம், இது உண்மையான கடவுள் இல்லை என்றும், புதிதாக வைக்கப்பட்ட அரங்கநாதர்தான் உண்மையானவர் என்றும் வாதிட்டனர். பிறகு ஊர் மக்கள் கூடி கோயிலில் பணியாற்றி வயது முதிர்ந்து கண்ணிழந்த சலவைத் தொழிலாளியை அழைத்து, எது உண்மையான அரங்கநாதர் என்பதைக் கண்டறியும்படிக் கேட்டனர். சலவைத் தொழிலாளர் கண் தெரியாத காரணத்தினால் இரண்டு கடவுள்களிடமும் இருந்து துணிகளை நீரில் நனைத்து, முகர்ந்து நாக்கில் தொட்டுப் பார்த்து, டெல்லிக்குக் கடத்தப்பட்ட அரங்கநாதர்தான் உண்மை யானவர் என்று கூறினார். சலவைத் தொழிலாளியின் முடிவே வென்றது.

1950களில் சபரிமலை ஐயப்பனும் கடத்தப்பட்டார். 2008இல் மேற்குவங்கத்தில் இருந்த ஐயப்பன் கடத்தப்பட்டார். இவ்வாறு கோயில் கடவுள்கள் மட்டு மல்ல. கடவுளே இல்லை என்று உலகில் முதன் முதலில் கூறிய மகாவீரரின் சிலை 10ஆம் நூற்றாண் டில் மங்களூரில் இருந்து கடத்தப்பட்டது.

சென்னையில் தற்போது தொடர்ந்து ஊடகங்களில் கடவுள்களை வணிகத்திற்காகக் கடத்தியவர்களைக் கைது செய்து நடவடிக்கை எடுத்துள்ளனர். காவல் துறையின் அறிவிப்பின்படி 46 கடவுள்கள் கோயில் களில் இருந்து காணவில்லை என்று தற்போது செய்தி வெளியாகி உள்ளது. 2010 முதல் 2016 வரை இந்தியா வில் இருந்து 4015 புகழ்மிக்க கடவுள்களும், பாது காப்பின்றி உள்ள கோயில்களில் இருந்து 5 இலட்சம் கடவுள்களும் கடத்தப்பட்டதாகப் புள்ளிவிவரங்கள் சுட்டுகின்றன. இதுவரை பன்னாட்டுக் கடவுள் கடத்தல் வணிகத்தின் தொகை மதிப்பு 6 இலட்சத்து 50 ஆயிரம் கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் திருப்பதி மற்றும் கேரளாவில் உள்ள பத்மநாபசாமி கோயில் களில் பல இலட்சங்கோடி மதிப்பிலான தங்கங்கள், வெள்ளிகள் உள்ளன. ஆனால். இவைகள் எல்லாம் பயன்பாடின்றி **இறந்த மூலதனமாகவே (Dead Capital)** இருக்கின்றன. பெரும் பணக்காரர்களிடம் இருக்கும் தங்கத்தையும் வைரம் வெள்ளி இவற்றையும் கணக் கிட்டால், இந்தியா செல்வத்தில் முன்னணியில் இருக் கும் என்பதில் ஐயமில்லை.

காரல் மார்க்சு, தனது ''மூலதன'' நூலில் 19ஆம் நூற்றாண்டில் மற்ற நாடுகளில் இருந்து இந்தியாவிற்குத் தங்கமும் வெள்ளியும் இறக்குமதியாகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆதம் ஸ்மித்துக்குப் பின்னால் இங்கிலாந்தில் புகழ்பெற்ற பொருளாதார அறிஞர் டேவிட் ரிக்கார்டோ பயன்மதிப்பு, பரிமாற்ற மதிப்பு என்று பொருட்களை வகைப்படுத்தினார். குடிநீருக்குப் பயன்மதிப்பு அதிகமாக இருக்கிறது. ஆனால் அதற்கு விலையில்லை; வைரத்தை மனிதன் உட்கொள்வ தில்லை; ஆனால் அதன் பயன்மதிப்பு அதிக அளவில் உள்ளது என்று குறிப்பிட்டார். சுபா' சந்திர கபூர் என்பவர் உலக அளவில் கடவுள்களைக் கடத்திப் பல இலட்சம் கோடி பணம் ஈட்டியுள்ளார் என்று ஊடகங்கள் தெரிவித்தன. ஆழ்வார்பேட்டையில் கைதுசெய்யப்பட்ட தீனதயாளனின் சொகுசு குடியிருப்பில் பல கோடி ரூபாய் மதிப்பிலான கடவுள்கள் கைப்பற்றப்பட்டன. ஆனால் ஊடகங்கள் சிலை கடத்தல்கள் என்றுதான் குறிப்பிடுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் இந்தக் கடவுள்களுக்குப் பிறந்தநாளும், திருமண நாளும் மற்ற சடங்குகளும் நடைபெறும்போது, சக்தி மிக்க கடவுள்கள் என்று வர்ணனை செய்கின்றனர். கற்சிலைகளைத் தான் பல ஆகமங்களின்படி மிக சக்திவாய்ந்த கடவுள் களாக்கி பக்தர்களிடமிருந்து காணிக்கைகள் பெற்றுக் கோடிக் கணக்கில் வருமானம் ஈட்டுகின்றனர்.

அண்மையில் ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு மக்களிடம் தீய செயல்களும் பாவச் செயல்களும் பெருகி வருவதால், கோயில்களின் வருமானம் ஆண்டிற்கு 17 விழுக்காடு பெருகி வருகிறது என்று குறிப்பிட்டுள்ளார். தகவல் தொழில்நுட்பப் புரட்சி ஏற்பட்டு ஒவ்வொரு இல்லத்திலும் தொலைக்காட்சிப் பெட்டியும் ஒவ்வொருவர் பையிலும் கைப்பேசியும் வந்த பின்னரும் மூடநம்பிக்கைகளை ஊட்டி வளர்த்து நிரந்தர பக்திப்போதையில் மக்களை ஊடக முதலாளி களும் மதத் தலைவர்களும் இட்டுச் செல்கின்றனர். பகுத்தறிவுக்குப் புறம்பான ஆன்மிகமும் சோதிடம் நாள் நட்சத்திரம் ஆகியவையும் நாள்தோறும் அச்சு, ஒளி ஊடகங்களால் போற்றப்படுகின்றன. அதே நேரத்தில் இந்த சக்தி வாய்ந்த கடவுகள்கள் என்று போற்றப்படுகிற இந்தக் கற்சிலைகள் அழகிற்காகவும் கலையுணர்ச்சிக் காகவும் வெளிநாடுகளில் வணிகப் பொருளாகப் பயன் படுத்தப்படுகின்றன. கடவுளும் ஒரு சரக்காக மாறி விட்டார்.

காரல் மார்க்சின் மூலதனம் முதல் தொகுதியில் க.ரா.ஜமதக்னி மொழிபெயர்ப்பு (பக்.49) பகுதி நான்கில் சரக்குகளின் கடவுள் சிலை இயல்பு. அதனில் அடங்கியுள்ள மறைபொருள் (The Fetishism of Commodities and Secret thereof) என்ற தலைப்பில் ஒரு அருமையான ஆய்வினை மேற்கொண்டுள்ளார். 'இந்தப் பகுதியில் உழைப்பைச் செலுத்திச் சரக்கு உற்பத்தியில் ஈடுபடுகின்ற பாட்டாளி' பரிமாற்ற நடவடிக்கைகளால் முதலாளிகளிடம் சென்று அவனது உழைப்பு சுரண்டப்படுகிறது. ஆதனைப் பகுத்தாய்ந் தால் அது ஒரு விந்தையான தனிப்போக்குடைய பொரு ளாகக் காண்கிறது. அதனில் பொருள் உலகத்தைச் சாரா. கற்பனை நுண்மைகள் கடவுள் இயல் அழகு களும் செறிந்துள்ளதாகக் காண்கிறது. அது உபயோகத் தில் உள்ள மதிப்பாக இருக்கும் வரை, அதில் எந்தப் புரியாத இரகசியமும் இருப்பதாகத் தென்படவில்லை (பக்.50) என்று மார்க்சு குறிப்பிடுவதை அறிஞர் க.ரா.ஜமதக்னி அடைக்குறிப்பில் வாசகர்கள் புரிந்து கொள்வதற்காக சரக்குகளின் கடவுள்சிலை இயல்பைப் பற்றி அவரின் விளக்கத்தை அளித்துள்ளார். இந்தப் பகுதியைப் புரிந்துகொள்ளுதல் சிறிது கடினம். குவளை களை என்றால் உயிரற்ற உருவ வழிபாடு விக்கிரக வழிபாடு கடவுள் சிலை வழிபாடு எனக் கூறலாம். ஆதிகாலத்தில் சமுதாயத்தில் தாயத்தைப் போன்ற உயிரற்ற பொருட்கள் ஒரு தெய்வத்திற்கு, பூதத்திற்குப் பிரதிநிதியாக இருந்தது. அதன் உதவி கொண்டே அந்தத் தெய்வத்தையோ பூதத்தையோ வரவழைத்து அற்புதக் காரியங்களைச் செய்கின்றனர் என்ற கதைகள் வழங்கு கின்றன. அல்லாவுதினும் அதிசய விளக்கும் என்ற கதை அனைவரும் அறிந்த ஒன்றாகும். அல்லாவுதின்

என்பவன் விளக்கைக் கையால் தேய்த்தும் அந்த பூதம் அவன் முன் வந்து காட்சியளித்து அவன் விரும்பிய பணிகளை நிறைவேற்றி வைத்ததாம். கதையில் ஒருவனிடம் உள்ள தாயம், விளக்கு போன்றவற்றிற்கு அதிசய ஆற்றல் இருந்தது போலச் சரக்குகளுக்கும் உள்ளன.

முற்காலத்தில் மனிதன் கற்படிமம் வெண்கலப் படிமம் செப்புப்படிமம் படைத்தான். அதற்கு அதிசய சக்தி உள்ளது என்று நம்பினான். அதனைப் போன்று சரக்குகளுக்கும் அதிசய சக்தி உள்ளது. அந்தச் சிலை களை மனிதனே முதலில் ஆண்டான். ஆனால் அவை வரவர மனிதன் மீதே ஏறி உலா வரத் தொடங்கின. அது போல மனிதன் முதலில் தான் உற்பத்தி செய்த சரக்குகளைத் தானே ஆண்டான். பரிமாற்றம் செய்து நுகரத் தொடங்கினான். ஆனால் வரவர சரக்கு உற்பத்தி முதலாளித்துவ உற்பத்தியாகிவிட்ட பின்னர், பாட்டாளிகள் தாம் உற்பத்தி செய்யும் சரக்குகளைத் தாமே ஆள்வதில்லை. அந்தச் சரக்குகளே அவனை ஆள்கின்றன. அடிமைப்படுத்துகின்றன. கடவுள் சிலை களுக்கு அற்புத ஆற்றல் இருத்தல் போன்று, சரக்கு களுக்கும் அற்புத ஆற்றல் உள்ளது என்று பாட்டாளி மயங்குகின்றான். கடவுள் சிலை ஒரு தெய்வத்தைக் குறித்து நிறுவப் பெறுகின்றது. அத்தெய்வம் பற்றிய கருத்துகள் அடங்கிய கருத்துகள் உருவாயின. அந்தத் தெய்வத்திற்கு மனித சமுதாயத்தில் மனிதனுக்கு உறவினர் இருத்தல் போலவே அத்தெய்வத்திற்கு மனைவிகள் அண்ணன் தம்பிகள் தந்தை தாய் பிள்ளைகுட்டிகள் எனக் கருத்துகள் உருவாகிவிட்டன. மாந்தர்தம் அரசனுக்கு மந்திரி படைத்தலைவன் பணி யாட்கள் பரிவாரங்கள் இருப்பது போல, கருத்து லகத்திலே தெய்வத்திற்கும் சபை, மந்திரி பிரதானிகள் எல்லாம் ஏற்றிக் கூறப்பட்டன. பின்னர் அந்தத் தெய்வ உருப்படிகள் வந்து மனித சமுதாயத்தில் கருத்து அடிப்படையில் தொடர்பு கொள்கின்றன. அது போலவே உற்பத்தியாளர்கள் என்ற நிலையில் உற்பத்தியாளர் களுடன் தொடர்பு கொள்வதாகக் காண்பதில்லை. சரக்குகளே வந்து உற்பத்தியாளர்களுடன் தொடர்புறு தல் போலவும், சரக்குகள் சரக்குகளுடன் தொடர்புறுதல் போலவும் போலிக்காட்சி ஏற்படுகின்றது. ஆதலின் Fetishism of Commodities என்று வருமிடங்களில் கடவுள்சிலை இயல்பு என வழங்கி வருவோம் என்று எனது மாமனார் க.ரா.ஜமதக்னி அளித்த விளக்கம், தற்போது நடைபெறும் கடவுள் கடத்தல்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் பல உண்மைகள் வெளிவரும்.

**மனிதன் தனக்காகவே உற்பத்தி செய்த பொருட் களை நுகர்ந்து வாழ்ந்தான். முதலாளித்துவ சமூகம் உருவான பிறகு, உழைப்பாளி உருவாக்கிய சரக்கைப் பரிமாற்ற முறையில் விலையை உயர்த்தி உழைப்பாளிக்குச் சேர வேண்டிய கூலியைக் குறைத்து, கொள்ளை இலாபம் ஈட்டி, முதலாளி, சமுதாயத்தை உழைப்பாளர்களைச் சுரண்டினான். தான் உற்பத்தி செய்த பொருளே கற்பனையில் இருக்கும் கடவுளைப் போல அவன் மீது ஆதிக்கம் செய்யத் தொடங்கியது.**

இவ்வகையில் முதலாளியும் கடவுளைத் திணிக் கின்ற பார்ப்பனர்களும் ஒரே நிலையில் நின்று சாமானிய மக்களை மதமயக்கத்தில் ஆழ்த்திச் சுரண்டல் முறைக்கு அடித்தளம் அமைக்கின்றனர். உயர் வகுப்பினர் என்று அடையாளப்படுத்திக் கொண்டு உலா வருபவர்களுக்குக், கடவுள் என்பது ஒரு கற்சிலை தான் என்பது நன்றாகப் புரியும். ஆனால் பூசை, யாகம் போன்ற போதை தரும் நடவடிக்கைகளை மேற் கொண்டு படித்த பாமரர்களை அறியாமை யில் வீழ்த்திச் சுரண்டுகின்றனர். எனவேதான் மகாவீரர், புத்தர் தொடங்கி, தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் போன்ற மானுடப் போராளிகள் சடங்குகள் அடிப்படை யில் இயங்கி மக்களை ஆட்டிப் படைக்கும் இந்தக் கற்பனைக் கடவுள்களையும் அதை வலியுறுத்திய மதக் கருத்துகளையும் சாடினர்.

இன்றைய முதலாளியும் வணிகத் தரகர்களும் கடவுள்களைக் கடத்தி, சரக்காக மாற்றி, பன்னாட்டு வணிகச்சந்தையில் பணம் ஈட்டுகின்றனர். இந்த உள்ளு ணர்வைத் தமது பகுத்தறிவால் உணர்ந்த காரல் மார்க்சும் ஜென்னி மார்க்சும் நாத்திகர்களாகவே வாழ்ந்து மறைந்தனர். இதன் காரணமாகத்தான் ''மதம் மக்களுக்கு ஒரு அபின் போன்ற போதைப் பொருள்'' என்று விளக்கமளித்தார் மார்க்சு.


தந்தை பெரியார் இதை முற்றிலும் உணர்ந்து ''கடவுள் இல்லை! இல்லவே இல்லை'' என்று வலி யுறுத்திக் கூறினார்.

❖

## குறள்மொழி தோற்றம்

*திருவண்ணாமலை மாவட்டம் கீழ்ப்பென்னாத்தூர், சுப்புலட்சுமி அரிசி ஆலை, திண்டிவனம் சாலை எண்.133ல் வசித்துவரும் மா.பெ.பொ.கட்சித் தோழர் க.ஆதிமூலம்-சுப்புலட்சுமி இணையரின் இளையமகள் தமிழ்ச்செல்வி-இலட்சுமி நாராயணன் இவர்களின் இணை ஏற்புவிழா 5-6-2011ல் அய்யா வே.ஆனைமுத்து தலை மையில் நடந்தது. இந்த இணையருக்கு 24-6-2016 வெள்ளிக்கிழமை இரவு 2.30 மணியளவில் இரண்டாவது பெண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு ''குறள்மொழி'' என்று பெயர் சூட்டியதன் மகிழ்வாக தாத்தா க.ஆதிமூலம்-பாட்டி சுப்புலட்சுமி இணையர் சிந்தனையாளன் வளர்ச்சிக்கு ரூ.1000/- அளித்தனர்.*

# நாளைய உலகம் இவர்வழி நடக்கும் !



தந்தை பெரியாரின் எழுத்தையும் பேச்சையும் பொருள்வாரியாகக் காலமுறைப்படுத்திப் 'பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்' எனப் பெரியார் வாழ்ந்த காலத்திலேயே அவரின் ஒப்புதலைப் பெற்று 1974 இல் வெளியிட்ட பேருழைப்பாளர் திருச்சி வே.ஆனைமுத்து.

மார்க்சிய-பெரியாரிய-அம்பேத்காரியக் கொள்கை விளக்க ஏடாக 'சிந்தனையாளன்' இதழை நாற்பது ஆண்டுகளாகக் கடும் நெருக்கடிக்கிடையே தொடர்ந்து நடத்தி வருபவர்.
பெரியாரை முழுமையாக அறிவதற்கும் வளர்ப்பதற்குமான ஓராண்டுகாலத் தொடர்வகுப்பைப் பொருளியல் சுமையோடு ,அம்பத்தூரில் நடத்திக் கொண்டிருப்பவர்.

மண்டல்குழுப் பரிந்துரை நாடாளுமன்றத்தில் வைக்கப்படவும் நடுவணரசில் பிற்படுத்தப்பட்டோர் ஒதுக்கீட்டுரிமை பெறவும் - வடமாநிலங்களில் வகுப்புரிமைச்சுடர் ஏற்றப்படவும் முதன்மைப் பங்காற்றியவர் இவர்!
தமிழக அரசு பிற்படுத்தப்பட்டோர் ஒதுக்கீட்டை 50 விழுக்காடாக உயர்த்தக் காரணமானவர் இவர்!
விளம்பர வெளிச்சம் பெறாத சாதனையாளர் இவர்!
செயலூக்கம் மிக்க பெரியாரியல் அறிஞர் இவர்!

விவாத அரட்டைகளில் போதையேறிக் கிடப்போர் பெரியாரை எதிரியாகக் காட்டி, உண்மையான எதிரிகளைப் பாதுகாக்கும் வேலையைச் செய்து கொண்டிருப்பது-நெடுங்காலமாய் நடப்பதுதான்!

அருட்பாவை மருட்பாவாகக் காட்டி, வள்ளலாரை வழக்குமன்றம் வரை இழுத்தடித்த நாடுதானே இது!

தமிழ்ச்சமூகத்தை மாற்றியமைக்க விரும்பும் ஒவ்வொருவருக்கும், ஆனைமுத்து நூல்களை ஆழ்ந்துபடிக்கும் எண்ணம் எழ வேண்டும்.

பெரியார் வரலாற்றை- அரிய ஆய்வு நோக்குடன்- நூலாக்கும் பணியில், எவர் துணையும் இன்றி இவர் ஈடுபட்டுள்ளார்.அய்ந்து பாகங்களாக அந்த வரலாற்றுப் பெட்டகம் வெளிவர இருக்கிறது.

தோழர் வே ஆனைமுத்து அவர்களுக்கு 21.6.2016 இல் 92ஆம் அகவை தொடங்குகிறது!இவர் முழுநலத்துடன் பல்லாண்டு வாழ வாழ்த்துவோம்!
வாழும் காலத்திலேயே இவரின் அறிவுச்சேகரிப்பு அனைத்தும் தமிழினத்தின் கைகளை எட்ட வேண்டும். அதற்கு அறிவுலகம் கைகொடுக்க வேண்டும் அறிவாளர்களைப் போற்றும் சமூகத்தில் மட்டுமே, அறிவாளர்கள் தொடர்ந்து உருவாக முடியும்.

**சூலூர் செந்தலை ந. கவுதமன்**

# ஜி-7 நாடுகள் ஜப்பானில் கூடிப் பேசின! எவை பற்றியெல்லாம் அந்நாடுகள், கலந்துரையாடின?

- வே.ஆனைமுத்து

ஜப்பான், பிரான்சு, பிரிட்டன், கனடா, இத்தாலி, ஜெர்மனி, அமெரிக்க அய்க்கிய நாடுகள் ஆகிய ஏழு நாடுகளும் வளர்ந்த செல்வந்த நாடுகள் என அழைக்கப்படுகின்றன.

ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே, பிரெஞ்சு நாட்டு அதிபர் ஃபிராங்கய்ஸ் ஹாலண்டே, பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கேமரூன், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ருடுவு, இத்தாலி பிரதமர் மட்டூரென்சி, ஜெர்மனியின் அதிபர் அங்கெலா மெர்க்கெலா, அமெரிக்க அய்க்கிய நாடுகள் தலைவர் பாரக் ஒபாமா ஆகிய ஏழு நாடுகளின் தலைவர்களும்-ஜப்பான் பிரதமரின் அழைப் பின் பேரில், மத்திய ஜப்பானில் உள்ள அய்சே-ஷிமா என்னும் இடத்தில் 26-5-2016 வியாழன்று கூடி விவாதித்தனர்.

எவை பற்றியெல்லாம் அந்நாடுகளின் தலைவர்கள் கலந்து ரையாடினார்கள் என்பதை எல்லா நாடுகளும்-குறிப்பாக வளரும் நாடுகளும் கவலையோடு சிந்திக்க வேண்டும்.

ஜப்பான் பிரதமர் இப்போது, உலக நாடுகள், 2008 இல் எதிர் கொண்ட பொருளாதாரச் சிக்கல் போன்ற நிலையை எதிர் கொண்டிருப்பதாக முதலில் கூறினார். அதனை, பங்கேற்ற மற்ற நாடுகளின் தலைவர்கள் எல்லோரும் ஒத்துக்கொள்ளவில்லை.

ஆனால் எல்லா நாடுகளின் தலைவர்களும் உலக நாடுகளின் வளர்ச்சியை விசைப்படுத்திட வேண்டும் என்றும், எந்நேரத்தில் எந்நாட்டுக்கு உதவிட வேண்டும் என்றும் ஜப்பான் நாட்டுத் தலைமைச் செயலாளர் ஹிராஷிகே செகோ கருத்துக் கூறினார்.

**சில நாடுகள் அப்படிப்பட்ட பொருளாதார உதவி செய்வது தேவை இல்லை எனத் தெரிவித்தன. உலகப் பொருளா தார வளர்ச்சியை வேகப்படுத்த உதவக்கூடாது என்று பிரிட்டனும், ஜெர்மனியும் தொடர்ந்து எதிர்த்து வருகின்றன.**

**அதனை ஒட்டி அடுத்துப் பேசப்பட்ட செய்திகள் என்ன?**

**பயங்கரவாதம், அந்தந்த நாட்டின் பாதுகாப்பு, அந்தந்த நாட்டின் கடல் எல்லைப் பாதுகாப்பு-குறிப்பாக சீனநாடு கிழக்கு மற்றும் தெற்கு சீனப் பெருங்கடலில் ஜப்பான் கடல் எல்லைகளிலும், தென்கிழக்கு ஆசிய நாடுகள் பலவற்றின் கடல் எல்லைகளிலும் மேலும் உரிமை கொண்டாடும் போக்கு முதலான அச்சுறுத்தல்கள் உள்ளன என்பது பற்றிக் கவலை தெரிவித்தனர். இது பற்றி சீனாவை எச்சரிக்கை செய்ய வேண்டும் என்றும் பேசினர்.**

தெற்கு சீனப் பெருங்கடல் சிக்கலுக்கும், ஜி-7 நாடுகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என, சீன அயலுறவு அமைச்சகப் பேச்சாளர் பெண்மணி ஹுவா சுனிங் செய்தியாளர்களிடம் அன்றே தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் ஒபாமா, வடகொரியா அணு குண்டையும், ஏவுகணையையும் பயன்படுத்துவதில் பிடிவாதமாக உள்ளதைச் சுட்டிப் பேசினார்.

**உலக வளர்ந்த நாடுகள் எவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்படுகின்றன என்பதை எல்லா நாடுகளும் குறிப்பாக இந்தியாவும் கவனிக்கவேண்டும்.**

இந்த ஜி-7 நாடுகள் மாநாட்டை ஒட்டி ஜப்பானுக்குச் சென்ற பாரக் ஒபாமா, இரண்டாம் உலகப்போரின் போது, அமெரிக்கா 6-8-1945 அன்று ஜப்பானிலுள்ள ஹிரோஷிமா மீது வீசிய அணுகுண்டில் மாண்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகை யில் 25-5-2016 வெள்ளி அன்று மலர்வளையம் வைத்து மரியாதை செய்தார்.



ஆனால் அப்படி அணுகுண்டு வீசியதற்காக வருத்தம் (Apology) தெரிவிக்க முடியாது என, முன்கூட்டியே அவர் தெரிவித்துவிட்டார்.

ஹிரோஷிமா மீது அணுகுண்டு வீசப்பட்டதில் 1,40,000 பேருக்கு மேல் அக்கணமே கொல்லப்பட்டனர். அணுகுண்டினால் பற்றியெரிந்த நெருப்புக் கோளங்களுக்கு, மேலும் பல இலக்கம் பேர் இரையாயினர்.

தெற்கு ஜப்பானிலுள்ள நாகசாகி மீது 9-8-1945 அன்று அமெக்கா வீசிய இரண்டாவது அணுகுண்டுக்கு 74,000 மக்கள் இரையாயினர். ஜப்பானியரால் கைது செய்யப்பட்ட அமெரிக்க வீரர்களின் பிறங்கடைகள் இன்றும் அங்கு உள்ளனர்.

அணுகுண்டு வீச்சின்போது உயிர்பிழைத்த 91 அகவை உள்ள ட்சுபாய் (Tsuboi) என்கிற கிழவரைக் கட்டிப்பிடித்து ஆறுதல் கூறினார், ஒபாமா. 2016க்கும் 1945க்கும் இடையில் 71 ஆண்டு நெடிய ஆண்டுகள் இடைவெளி!

இன்றும் ஹிரோஷிமாவிலும், நாகசாகியிலும் அணுவீச்சின் தாக்குதல் இருக்கிறது. ஊனமான குழந்தைகள் பிறக்கிறார்கள்.

தமிழகத்தில் கூடங்குளத்தில் இரண்டாவது அணு உலை 2015லேயே தொடங்கப்பட்டுவிட்டது, அணு உலைகளின் கழிவுகளை அழிப்பது யாருடைய பொறுப்பு என்பதுபற்றி, மடு முழுங்கி மன்மோகன் சிங் அரசு வாய்திறக்கவில்லை.

நரேந்திர தாமோதரதாஸ் மோடி அரசுக்கு, பாக்கித்தான் அணுகுண்டு அறிஞர் அறைகூவல் விடுத்துள்ளார். ''அய்ந்தே நிமிடங்களில் இந்தியாவைத் தாக்குவோம்'' என்கிறார்.

சீனா, இந்தியாவின் வடக்கு எல்லையில் நிரந்தர மான சாலை அமைக்கிறது. அருணாசலப் பிரதேசத்தின் மீது உரிமை கொண்டாடுகிறது.

மோடி அரசு யோகா, ஓம், இராமர் கோவில் கட்டுவது, சமற்கிருதம், இந்தி இவற்றைக் கல்வித் திட்டத்தில் திணிப்பது இவற்றில் முழு மூச்சாக இருக்கிறது.

**நாம் எதற்காகக் காங்கிரசை நம்பவேண்டும்? எதற்காக மோடி அரசை நம்பவேண்டும்? இக்கட்சிகளை நாம் நம்பக்கூடாது.**

# புனிதப்படுத்துவதை விடச் சுத்தம் செய்வதே மேல்

- இராமியா

2014 நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்று, 26.5.2014 அன்று பிரதமராகப் பதவி ஏற்றவுடன், திரு.நரேந்திர மேடி கங்கை ஆற்றைத் தூய்மைப்படுத்தப் பேவதாக மிகவும் ஆடம்பரமாக அறிவித்தார். அப்படி அறிவித்த பின் அதைச் செய்வ தற்குச் சுதேசிகளின் அறிவுத் திறன் போதாது என்று புரிந்து கெண்ட அரசு "இஸ்ரேலின் உதவியை நாடு வேம்" என்றும், "தேம்ஸ் ஆற்றைத் தூய்மைப்படுத்திய ஆங்கிலேயர்களின் உதவியை நாடுவோம்" என்றும்; "எப்படியும் கங்கை ஆற்றைச் சுத்தப்படுத்தியே தீருவோம்" என்றும் வீராவேசமாக பா.ஜ.க.அரசு சூளுரைத்தது. அப்படிச் சூளுரைப்பதின் மூலம் சனாதன (இந்து) மதத்தவர்களின் அறிவுத் திறன் போதவில்லை என்றும், இந்து மதப் புனிதத்துவத்தைக் காக்க யூத, கிருத்துவ மதத்தவர்களின் மேலான அறிவுத்திறன் தேவைப்படுகிறது என்றும் ஒப்புதல் வாக்கு மூலம் கொடுக்க நேர்கிறது என்பதை பா.ஜ.க.வினர் மறந்து விட்டனர். இவர்களின் கூத்தைக் கண்ட நியூயார்க் டைம்ஸ் பத்திரிக்கை, தனது 13.7.2014 இதழில், கங்கை ஆற்றைத் தூய்மைப்படுத்துவதற்கு எதிராக உள்ள தடைகளை விளக்கி ஒரு கட்டுரையை வெளியிட்டிருந் தது. அதில் கங்கை ஆற்றங் கரையில் வாமும் மக்களில் மிகப் பலர் மிகக் கெடூரமான ஏழ்மையில் வாழ்வதும், அவர்களுக்குக் கழிப்பறை வசதி இல்லாததால் கங்கை ஆற்றின் கரையில், திறந்த வெளியில் மலங்கழிப்பதும், கங்கை ஆற்றிலேயே சுத்தம் செய்து கொள்வதும் எடுத்துக் காட்டப்பட்டு இருக்கிறது. உள்ளூர் மக்கள்தான் இப்படி என்றால், யாத்திரிகர்கள் இதற்குச் சற்றும் சளைத் தவர்கள் அல்லர். "பாவம்" தொலையும்-"புண்ணி யம்" கிடைக்கும் என்ற நம்பிக்கையில், கங்கை ஆற்றில் குளிக்க வரும் யாத்திரிகர்கள் அனைவரும் கழிப்பறை வசதி உள்ள விடுதிகளில் தங்கும் அளவிற்கு வசதி படைத்தவர்கள் அல்லர். இலவசமாகத் தங்கும் சத்திரங்கள் உயர் சாதியினருக்கும் சத்சூத்திரர்களுக்கும் தான் இருக்கிறதே ஒழிய, மற்ற சூத்திரர்களும் பஞ்ச மர்களும் அங்கு அனுமதிக்கப்படுவது இல்லை. ஆகவே அவர்கள் உள்ளூர் மக்களின் வழியைப் பின்பற்றும்படி கட்டாயப் படுத்தப்படுகிறார்கள்.

இதனால் கங்கை ஆறு கிட்டத் தட்ட, கழிவு நீர் கொண்டு செல்லும் சாக்கடை போல் ஆகி வருகிறது. இதை மாற்ற வேண்டுமானால் முதலில் திறந்த வெளியில் மலங் கழிப்பதை நிறுத்த வேண்டும். அது முடிவது இல்லை. ஏன்? மக்களுடைய பெருளாதார நிலைமை சுகாதார மான வழியைப் கைக்கொள்ளும் அளவிற்கு ஊக்கம் அளிப்பதாக இல்லை. ஆனால் அரசு ஏழைகளின் பொருளாதார நிலைமை மாறுவதற்கு ஒரு நடவடிக் கையும் எடுக்காமல், கழிப்பறை கட்டுவதற்கு மானியம் தருவதாகக் கூறுகிறது. இம்மக்களின் பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படாமல், சுகாதாரப் பழக்க வழக்கங்களில் மட்டும் மாற்றத்தை ஏற்படுத்த முனை வது பயன் தருமா? இதை அரசு புரிந்து கொள்ளாமல் அடாவடியாய் மறுத்து வருகிறது. இதனால் கங்கை ஆற்றைத் தூய்மைப்படுத்தும் வழியில் ஒரு தப்படி யைக் கூட எடுத்து வைக்க முடியாமல் திணறுகிறது.

இந்நிலையில் கங்கை ஆற்றைப் பற்றிய புனிதத்துவ நம்பிக்கை மக்களின் மனதில் வேரூன்றியே இருக்க வேண்டும் என்பதற்காக, ஏமாற்று வித்தைகளைக் கையாளும்படி இந்திய அரசு தன் பிடியில் உள்ள அறிவியல் துறைகளை ஏவி விட்டு இருக்கிறது. அதன் பேரில் மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி நிறுவனம் பிற ஆற்று நீர்களில் இல்லாத சிறப்புத் தன்மைகள் கங்கை ஆற்று நீரில் உண்டு என்று "ஆராய்ச்சி" செய்து கூறும்படி, 11.6.2016 அன்று தன் கீழ்ச் செயல்படும், தேசிய சுற்றுச் சூழல் பொறியி யல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ஆணையிட்டு உள்ளது. இதற்கு அடியெடுத்துக் கொடுக்கும் விதமாக, கங்கை ஆறு உருவாகும் இடமான கங்கோத்திரிக்கு அருகில் உள்ள நீர் மற்ற ஆற்று நீர்களை விட அதிக காலம் கெட்டுப் போகாமல் இருக்கிறது என்று சுட்டிக் காட்டி உள்ளது. இத்திசை வழியிலேயே ஆராய்ச்சி செய்து இம்முடிவைக் "கண்டறிந்து" நிலைநிறுத்தும்படி பணித்துள்ளது. இது நகைப்புக்கு இடமான கூத்து. கங்கை ஆற்று நீரின் அரிய ஆற்றலை விளக்குவதற்கு இவ்வளவு தொல்லை களை மேற்கொள்ள வேண்டியது இல்லை. ஆங்கிலேயர் கள் இதை மிகச் சிறப்பாகவே பதிவு செய்து உள்ளனர். அவர்கள் இங்கிலாந்தில் இருந்து புறப்படும் போது கொண்டு வரும் தேம்ஸ் ஆற்று நீர், கல்கத்தா வந்து சேரும் போது கெட்டுப் பேயிருக்குமாம். ஆனால் கல்கத் தாவில் இருந்து கொண்டு செல்லும் கங்கை ஆற்று நீர் இங்கிலாந்து சென்ற பிறகும் - ஆறு மாதம் வரையிலும் - கெடாமல் இருக்குமாம். கங்கை ஆற்று நீரின் சிறப்புத் தன்மைக்கு இது மிகப் பெரிய சான்று. ஆனால் இன்றைய பிரச்சினை என்ன? கங்கை ஆற்றின் மிகப் பெரும்பா லான இடங்களில் அப்பேர்ப்பட்ட அரிய ஆற்றல் இல்லை என்பதுதான். அங்கு கங்கை நீரை முகந்து எடுக்கும் போதே கெட்டுப் போன நீராய் இருக்கிறது. (இந்த உண் மையை நன்றாகப் புரிந்து கொண்டு உள்ளதால் தான்,

மக்கள் நடமாட்டம் இல்லாத கங்கோத்திரியில் இருந்து நீரை எடுத்துச் சோதனை செய்யச் செல்லி இருக்கிறார் களோ?) இவ்வாறு மிகப் பெரும் பகுதி கெட்டுப் போயுள்ள கங்கை நீருக்கு அரிய ஆற்றல் உள்ளது என்று மக்களிடையே உண்மைக்கு மாறான பொதுக் கருத்தை உருவாக்கத் துடிப்பது ஏன்? சரி! அரிய ஆற்றல் என்பது கங்கை நீருக்கு மட்டும் தான் உள்ளதா? தாமிரபரணி ஆற்று நீரில் உள்ள அரிய ஆற்றல் தான் மற்ற ஊர்களில் சமைக்கப்படும் கோதுமை அல்வாவைவிட, திருநெல் வேலியில் சமைக்கப்படும் கோதுமை அல்வா மிகுந்த சுவையாக இருப்பதற்குக் காரணம். மதுரை, அழகர் மலை ஊற்று நீரைப் பருகினால், சில வகைப்பட்ட வயிற்று நோவுகள் குணமாவதற்கு அந்நீருக்கு உள்ள அரிய ஆற்றல்தான் காரணம். மற்ற ஊர்களில் பதப் படுத்தப்படும் பட்டு நூலை விட காஞ்சிபுரத்தில் பதப் படுத்தப்படும் பட்டு நூலால் நெய்யப் பட்ட துணிகள் மிகுந்த பளபளப்பாக இருக்க, அவ்வூரின் தண்ணீர் தான் காரணம். இது போல் ஒவ்வொரு ஊரில் உள்ள நீரிலும் ஒவ்வொரு அரிய ஆற்றல் உள்ளது என்பது கண் கூடான உண்மை. அப்படி இருக்கையில் கங்கை நீருக்கு மட்டும் அரிய ஆற்றல் உள்ளது என்று ஒரு பொதுக் கருத்தை உண்மைக்கு மாறாக உருவாக்க முயல்வது ஏன்? அதுவும் ஏற்கெனவே இருந்த அரிய ஆற்றல் முற்றிலும் மறைந்து போய், மாசுபட்ட நீராக மாறி இருக்கும் இந்த வேளையில் அதைச் சுத்தப் படுத்துவதை விட்டுவிட்டு இது போன்ற முயற்சிகளை ஏன் மேற்கொள்ள வேண்டும்? இதற்காக மக்களின் வரிப் பணத்தை ஏன் வீணடிக்க வேண்டும்?

உண்மைக்கு மாறாக இப்படிச் செய்வதன் மூலம் அரசு சாதிக்க நினைப்பது எதுவாக இருந்தாலும், அது மக்கள் நலனுக்கு எதிரானதே. மக்களே! சிந்தியுங்கள். மூட நம்பிக்கைகளை வளர்க்கவும், நிலைநிறுத்தவும் முயலும் அரசின் நடவடிக்கைகளை முறியடியுங்கள். உங்கள் குழந்தைகள் மீது உங்களுக்குத் தீராத வெறுப்பு இருந்தால், அவர்களைக் கடுமையாகத் தண்டிக்க விரும்பினால், இப்பொறுப்பை அடுத்த தலைமுறை யினருக்குத் தள்ளி விடுங்கள்.

## திருக்குறள் உயராய்வு மாநாடு

*உலகத் திருக்குறள் மையத்தின் சார்பில் திருக்குறள் உயராய்வு மாநாடு 11.6.2016 சனி காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் சிறப்பாக நடைபெற்றது. முனைவர் கு.மோகனராசு அவர் களின் 5 நூல்கள் வெளியீட்டு விழா நடைபெற்றது. இராம. குருநாதன் தலைமை தாங்கினார். பல அறிஞர் பெரு மக்கள் கலந்து கொண்டு ஆய்வுரை வழங்கினர்.*

## பாவலரேறு பெருஞ்சித்திரனார் - வாழ்க்கைச் சுவடுகள் - தமிழ்த்தேச அரசியல் போராட்டம் - த.பொ.க. (மா.இலெ)வும் தமிழரசன் உள்ளிட்ட தோழர்களும் 5 நகரங்களில் இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வுகள்:




*தோழர் பொழிலன் பெரும் உழைப்பை நல்கி உருவாக்கியுள்ள "பாவலரேறு பெருஞ்சித்திரனார் வாழ்க்கைச் சுவடுகள்" நூல் மற்றும் தமிழ்த்தேச அரசியல் போராட்டம் த.பொ.க. (மா.இல.)வும் தமிழரசன் உள்ளிட்ட தோழர்களும் எனும் நூல் ஆகிய நூல்களின் வெளி யீட்டு நிகழ்ச்சிகள், 21-5-2016 சென்னை, 22-5-2016 தஞ்சை, 28-5-2016 வேலூர், 5-6-2016 கோவை, 19-6-2016 திண்டுக்கல் ஆகிய நகரங்களில் சிறப்பான நடைபெற்றன.*

*28-5-2016 அன்று வேலூர் சத்துவாச்சாரியில் சோலை அரங்கில் இவ்விரு நூல்கள் வெளியீட்டு நிகழ்ச்சி கி.குணத்தொகையன் தலைமையில் நடை பெற்றது. மா.பிறைநுதல் வரவேற்புரையாற்றினார். பாவலரேறு பெருஞ்சித்திரனார் வாழ்க்கைச் சுவடுகள் நூலை தோழர் வே.ஆனைமுத்து வெளியிட்டு உரையாற்றினார். இந்நூலின் படிகளை புலவர் குமரத்தன்னொளியன், க.முகிலன், சிங்கராயர், ச.ந.ச.மார்த்தாண்டன் ஆகிய தோழர்கள் பெற்றுக் கொண்டு உரையாற்றினர்.*

*தமிழ்த்தேச அரசியல் போராட்டம் தா.பொ.க. (மா.இல)பும் தமிழரசன் உள்ளிட்ட தோழர்களும் எனும் நூலை தோழர் தமிழ்வாணன் வெளியிட்டு உரையாற்றினார். தமிழ்முகிலன், காஞ்சி அமுதன் உள்ளிட்ட தோழர்கள் உரையாற்றினர். வேலூர் நகர மா.பெ.பொ.க. தோழர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இறுதியாக தோழர் பொழிலன் இவ்விரு நூல்களின் உருவாக்கம், இவற்றின் முதன்மை குறித்து உரையாற்றினார்.*

பகுதி-II

## காஷ்மீரைப் பாருங்கள்

# ஜம்மு-காஷ்மீர் அரசமைப்புச் சட்டத்தை எல்லோரும் அறிந்து கொள்வோம்!

வெள்ளையர் இந்தியா, பாக்கித்தான் இரண்டையும் தனிச் சுதந்தர நாடுகளாக 15-8-1947 அன்று பிரித்துவிட்டனர்.

சுதந்தர இந்தியாவுக்கான அரசமைப்புச் சட்டத்தை, 1946இல் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்டு, 9-12-1946 இலேயே எழுதத் தொடங்கி விட்டனர். அது எழுதி முடிக்கப்பட்டு 26-11-1949இல் நிறைவேற்றப்பட்டது.

ஜம்மு-காஷ்மீர், அரிசிங் என்கிற தோக்ரா வம்சத்து அரசனால் ஆளப்பட்டுக் கொண்டிருந்தது. அரிசிங் ஓர் இந்து, ஜம்மு-காஷ்மீரில் வாழும் மக்களில் 100க்கு 80 பேர் இஸ்லாமியர்; மீதிப் பேர் இந்துக்களும் பௌத்தர்களும், சீக்கியர்களும் ஆவர்.

ஜம்மு-காஷ்மீரின் வடக்கு எல்லை பாக்கித்தான் முரட்டுக் கும்பலின் தாக்குதலுக்கு உள்ளாயிற்று; அரிசிங்கைக் கொலை செய்யவும் அவர்கள் முயன்றார்கள்.

இந்தச் சூழலில் தன் குடும்பத்துக்கு, உரிமையாக விலைக்கு வாங்கப்பட்ட சொத்தாகிய ஜம்மு-காஷ்மீர் நாட்டை, 26-10-1947இல், இந்திய அரசோடு இணைத்தார், அரிசிங்.

**அரசமைப்புச் சட்டம் எழுதப்படுவதை, தனி ஜம்மு-காஷ்மீர் அரசமைப்புச்சட்ட அவையில், குலாம் முகமது சாதிக் தலைமையில், 30-4-1951 இல் தொடங்கினர். 17-11-1956ல், அதன் இறுதி வடிவம் நிறைவேற்றப்பட்டது.**

**"ஜம்மு-காஷ்மீர் அரசமைப்புச் சட்டம்" 26-1-1957இல் நடப்புக்கு வந்தது.**

ஜம்மு-காஷ்மீர் அரசமைப்புச் சட்டத்தின் உள்ளடக்கம் பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது.

**முகவுரை (Preamble): "ஜம்மு-காஷ்மீர் குடிமக்களாகிய நாங்கள்,** இந்த மாநிலம் இந்தியாவுடன் 1947 அக்டோபர் 26இல் இணைக்கப்பட்ட நிலையில், இந்திய ஒன்றியத்துடன் எங்களுக்குள்ள உறவை வரையறை செய்வதற்காக (to define)வும், அதன் பிரிக்கமுடியாத பகுதியாக இயங்கவும் உளமார உறுதி பூண்டு, எங்களுக்கு: சமுதாயம், பொருளியல், அரசியல் துறைகளில் நீதி வந்து சேரவும்; எண்ணம், கருத்து, நம்பிக்கை, விசுவாசம், கடவுள் வணக்க உரிமை காக்கப்பட சுதந்தரமும்; அந்தஸ்திலும், வாய்ப்பிலும் சம உரிமை நிலவவும்; எங்களிடையே சமத்துவம் வரவும்; தனிமனித கவுரமும் நாட்டின் ஒற்றுமையும் உறுதி செய்யப்படவும்; எங்களுடைய அரசமைப்புச் சட்ட அவையில், 1956 நவம்பர் 17 ஆகிய இன்று நிறைவேற்றி நடைமுறைப்படுத்த எங்களுக்கான இந்த அரசமைப்பை உருவாக்கிக் கொண்டோம்" என்று முகவுரை கூறுகிறது.

### பகுதி I - Part I

### புகுமுகம் - Preliminary

**(1) சுருக்கமான பெயர்**

இந்த அரசமைப்புச் சட்டம், ஜம்மு-காஷ்மீர் அரசமைப்புச் சட்டம் என அழைக்கப்படும்.

(2) இந்தப் பிரிவும் மற்றும் 2, 3, 4, 5, 6, 7, 8 மற்றும் 158 ஆகிய பிரிவுகளும் உடனடியாக நடப்புக்கு வருகின்றன; மற்றுமுள்ள எல்லாப் பிரிவுகளும்-இந்த அரசமைப்புச் சட்டம் செலாவணிக்கு வரும் நாள் என்று இதில் குறிக்கப்பட்டள்ள 1957 சனவரி 26 முதல் நடப்புக்கு வரும்.

**(2) வரையறை (Definition)**

1. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறு வகையாக இருந்தாலன்றி:

(அ) "இந்திய அரசமைப்புச் சட்டம்" என்பதன் பொருள் இந்த மாநிலத்துடன் ஆன உறவு பற்றிய இந்திய அரசமைப்புச் சட்டப்பகுதி என்பதைக் குறிக்கும்;

(ஆ) "நடப்பிலுள்ள சட்டம்" என்பது, இந்தச் சட்டம் நடப்புக்கு வருவதற்கு முன்னால் எந்த ஒரு சட்டம், அவசரச் சட்டம், ஆணை, உள்விதி, விதி, அறிவிக்கை, ஒழுங்குமுறை ஆணை முதலானவை எந்த ஒரு சட்ட அவையாலோ அல்லது தகுதிவாய்ந்த அதிகார அமைப்பினாலோ, அப்படிப்பட்ட சட்டங்களைச் செய்ய அதிகாரம் வாய்ந்த ஒருவராலோ செய்யப்பட்ட சட்டம், அவசரச் சட்டம், ஆணை, உள்விதி, அறிவிக்கை, ஒழுங்குமுறை ஆணை என்றே பொருள்படும்.

(இ) "பகுதி" என்பது இந்தச் சட்டத்தின் பகுதி என்று பொருள்படும்;

(ஈ) "அட்டவணை" என்பது இந்தச் சட்டத்திலுள்ள ஒரு அட்டவணையைக் குறிக்கும்;

(உ) "வரிவிதிப்பு" என்பது பொது வரி, உள்ளூர் வரி, சிறப்பு வரி எனத் தனிதனி வரியைக் குறிப்பதாகும்.

2. இந்தச் சட்டத்தில் இம்மாநிலச் சட்டத்தினால் இயற்றப்பட்ட சட்டம் அல்லது விதி என்பது, இம்மாநில ஆளுநரால் (Governor) வெளியிடப்பட்ட அவசரச் சட்டத்தையும் (Ordinance) உள்ளடக்கியதாகும்.

3. இந்த அரசமைப்புச் சட்டத்தில், சதர்-இ-ரியாசத் குடிஅரசுத் தலைவர்-ஜனாதிபதி எனக் குறிக்கப்படுபவர், "மாநில ஆளுநர் (கவர்னர்)" என்று பொருள் கொள்ளப்படவேண்டும்.

மேலே கண்ட பகுதியிலுள்ள "முகவுரை"யின் ஆங்கில வடிவத்தை நாம் அறிவதும் முதன்மையாகும்.

அது பின்வருமாறு அமைந்துள்ளது:

**Preamble : We, the people of the State of Jammu and Kashmir,** having solemnly resolved, in pursuance of the accession of this State to India which took place on the twenty-sixty day of October, 1947, to further define the existing relationship of the Sate with the Union of India as an integral part thereof, and to secure to ourselves -

Justice, social, economic and political, liberty; of thought, expression, belief, faith and worship;

Equality of status, and of opportunity; and to promote among us all;

Fraternity assuring the dignity of the individual and the unity of the Nation;

In our Constituent Assembly this Seventeeth day of November, 1956, do hereby Adopt, Enact and give to ourselves this Constitution.

**தமிழில், "ஜம்மு-காஷ்மீர் குடிமக்களாகிய நாங்கள்" என்றும், ஆங்கிலத்தில், "We, the people of the State of Jammu and Kashmir" என்றும் சொல்லப்பட்டிருப்பது ஒரு செய்தியை நமக்கு உணர்த்துகிறது.**

**அதாவது இன்றைய ஜம்மு-காஷ்மீரில் வாழும் மக்கள் எல்லோரும் முதலாவதாக ஜம்மு-காஷ்மீரின் குடிமக்கள் என்பதே அது.**

**இந்த உரிமை, தமிழ்மாநிலத்து மக்களுக்கோ, வேறு எந்த மொழி மாநிலத்து மக்களுக்கோ இல்லை.**

**- தொடரும்**

---

* அடிக்குறிப்பு : ஜம்மு-காஷ்மீர் அரசமைப்புச் சட்டத்தின் 1965 ஆண்டைய திருத்தச் சட்டத்தின் பிரிவு 2 இன்படி, 'குடிஅரசுத் தலைவர்' 'சதர்-இ-ரியாசத்' என்கிற பெயர் நீக்கப்பட்டு, 'Governor' ஆளுநர் என்ற சொல் அமைக்கப்பட்டது.

மேற்படி சட்டத்திருத்தத்தின் பிரிவு 3 (Section 3) படி, "Governor" என்ற சொல் இடம் பெற்றது.

## பேராசிரியர் முனைவர் இரா.இளவரசு நூல்கள், நினைவுமலர் வெளியீட்டு விழா




பேராசிரியர் முனைவர் இரா.இளவரசு நூல்கள், நினைவு மலர் வெளியீட்டு விழா, 29-5-2016 ஞாயிறு அன்று சென்னை இணையக் கல்வி கலையரங்கில் நடைபெற்றது.

காலை 10.30 மணிக்கு நூல்கள் வெளியீடு நடைபெற்றது. முனைவர் மா.ரா.அரசு தலைமை தாங்கினார். கோ.இளவழகன் வரவேற்புரையாற்றினார். 'முரசின் முழக்கம்' (புதுவை முரசு கட்டுரைகளின் தொகுப்பு) நூலை, முனைவர் சா.சு.இளங்கோ வெளியிட்டார். இரா.செம்மல் பெற்றுக் கொண்டார். 'அலைகள்' என்ற நூலை பேராசிரியர் சரசுவதி வெளியிட்டார். சி.அறிவுறுவோன் பெற்றுக்கொண்டார். 'நிறைந்த அன்புடன்' அணிந்துரைகள் என்ற நூலை செந்தலை ந.கவுதமன் வெளியிட்டார். முனைவர் சித்திரபுத்திரன் பெற்றுக் கொண்டார். 'வரும்புயல் நாங்கள்' என்ற நூலை மறைமலை இலக்குவனார் வெளியிட்டார். முனைவர் மு.இளமுருகன் பெற்றுக் கொண்டார். 'நண்பகல் ஞாயிறு' என்ற நூலை முனைவர் யா.மணிகண்டன் வெளியிட்டார். தங்கவயல் கி.வெற்றிச்செல்வன் பெற்றுக்கொண்டார். கோ.மணிவாசகம் நன்றியுரையாற்றினார்.

பிற்பகல் அமர்வு 'நினைவரங்கம்' நிகழ்ச்சிக்கு முனைவர் பொற்கோ தலைமை தாங்கினார். முனைவர் கு.திருமாறன் வரவேற்புரையாற்றினார். முனைவர் இரா.இளவரசின் இலக்கிய ஆளுமை முனைவர் இரா.சேது; ஆய்வு ஆளுமை, முனைவர் இ.சுந்தரமூர்த்தி; இயக்க ஆளுமை, தோழர் பெ.மணியரசன் ஆகியோர் நினைவுரையாற்றினர்.

நினைவு மலரை பழ.நெடுமாறன் வெளியிட்டார். வ.ஆழகுமுத்து, துரை.கலியரெத்தினம், முனைவர் த.கனகசபை, திருவாட்டி அறைபொற்கொடி ஆகியோர் பெற்றுக் கொண்டனர். பி.தமிழ்மகள் நன்றியுரை யாற்றினார்.

பேராசிரியர் இரா.இளவரசு நினைவு அறக்கட்டளையினர் விழாவினைச் சிறப்புற ஏற்பாடு செய்திருந்தனர்.

# பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இ.ஆ.ப., இ.கா.ப. போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றும் வேலை கொடுக்கப் படாத அநீதி!

**கலசம்**

இ.ஆ.ப., இ.கா.ப., முதலான பதவிகளுக்கான 2015ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டித் தேர்வில் 1035 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். அவர்களுள் 902 பேருக்குத்தான் பணி நியமன ஆணை கொடுக்கப்பட்டிருக்கிறது. பணி நியமன ஆணை கொடுக்கப்படாமல் இருக்கிறவர்களுள் 120 பேர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்களுள் 35 பேர் மய்ய அரசிலும், மாநில அரசிலும் பொதுத்துறை நிறுவனங்களிலும் பணிபுரிகின்ற ஊழியர்களின் பிள்ளைகள் ஆவர். அவர்களுக்கு வேலை கொடுக்கப்படாத காரணத்தை இந்திய ஒன்றியப் பணியாளர் தேர்வாணையம் இதுவரை தெரிவிக்கவில்லை. விணணப்பத்துடன் அளிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.6 லட்சத்துக்கு மேல் உள்ளது. வகுப்புக்கான சாதிச் சான்றிதழ் தேர்வாணையத்தால் ஏற்கப்படாமல் மறுக்கப்பட்டுள்ளது என்பதும், இதற்குக் காரணங்களாகச் சொல்லப்படுகின்றன என்று, 25.6.2016 தி இந்து ஆங்கில நாளேட்டில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தேர்ச்சி பெற்றும் வேலை கொடுக்கப்படாத அநீதி-அவலம்-பெருங்கேடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஏன் ஏற்பட்டது?**

பிற்படுத்தப்பட்ட தன்மை என்பது ஒரு சமுதாய நோய்; சமுதாய இயலாமை. அந்த நோய்க்கு ஆட்பட்டிருப்பவர்கள் சமுதாயத்தில் அத்தகைய நோய்க்கு ஆட்படாமலும் நலமாகவும் வளமாகவும் வலிமையாவும் இருக்கிற உயர் சாதிக்காரர்களுடன் போட்டியிட்டுக் கல்வியிலும் வேலையிலும் தங்களுக்கு உரிய பங்கு இடங்களைப் பெற முடியாது; பெற முடியவில்லை. அந்த நோய்க்கு ஆளாகி இயலாமையில் உள்ள வகுப்புகளின் மக்களுக்கு அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 15(4) மற்றும் 16(4) இடங்களை ஒதுக்கீடு செய்துள்ளது.

அத்தகைய சமுதாய நோய்க்கு-இயலாமைக்கு ஆட்பட்டுள்ள வகுப்புகளின் மக்கள் யார்? யார்?

முதலாவது பட்டியல் பழங்குடிகள். இரண்டாவது தீண்டாமைக்கு ஆட்பட்ட பட்டியல் வகுப்புகள். மூன்றாவது உழைக்கும் கீழ்ச்சாதி மக்களாகிய பிற்படுத்தப்பட்ட வகுப்புகள். இந்த மூன்று பிரிவு மக்களும் அத்தகைய சமுதாய நோய்க்கு-இயலாமைக்கு ஆட்பட்டுள்ள மக்களாவர்.

இந்த மூன்று பிரிவினரில் பட்டியல் வகுப்புகளுக்கு 1943ஆம் ஆண்டிலிருந்தும், பட்டியல் பழங்குடிகளுக்கு 1950ஆம் ஆண்டிலிருந்தும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு 1990ஆம் ஆண்டில் ஆணை பிறப்பிக்கப்பட்டு 1994ஆம் ஆண்டிலிருந்தும் மய்ய அரசின் வேலையில் இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த மூன்று பிரிவினரில் முதலிரண்டு பிரிவினரான பட்டியல் பழங்குடிகள், பட்டியல் வகுப்புகள் ஆகிய வகுப்புகளிலிருந்து வேலைக்கு விண்ணப்பிக்கிற ஒருவர் தான் பட்டியலில் உள்ள இன்ன சாதியைச் சேர்ந்தவர் என்று குறிப்பிட்டுச் சாதிச் சான்றிதழ் பெற்றளித்தால் போதும்; இடஒதுக்கீன்படி இடம் கிடைக்கும், ஆனால் இப்படிப்பட்ட ஒரு சான்றிதழைப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் கொடுத்தால் செல்லாது. அவருக்கு வேறு வகையான சாதிச் சான்றிதழ் வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த வேற்றுமை ஏன்?

**பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மய்ய அரசின் வேலைக்கு எப்படிப்பட்ட சாதிச் சான்றிதழ் பெற்றளிக்க வேண்டும்?**

விண்ணப்பிக்கின்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் தான் வளர்ந்த குடும்பத்துப் பெற்றோரின் பிள்ளை அல்ல என்று சாதிச் சான்றிதழ் பெற்றுத் தர வேண்டும் என்று மய்ய அரசின் ஆணை சொல்கிறது.

**அப்படிப்பட்ட அரசாணை பிறப்பிக்கப்படக் காரணம் என்ன?**

பிரதமர் வி.பி. சிங் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு மய்ய அரசின் வேலையில் 1990இல் இடஒதுக்கீடு அளித்து பிறப்பித்த ஆணையை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கில், இந்திய உச்ச நீதிமன்றம் 16.11.1992இல் தீர்ப்புக் கூறியது. **அந்தத் தீர்ப்பில், உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது என்ன?**

பிற்படுத்தப்பட்ட மக்களுள் வளர்ந்த குடும்பங்களை பிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் பட்டியலிலிருந்து நீக்கிவிட வேண்டும். அவர்களுடைய பிள்ளைகளுக்கு இடஒதுக்கீடு கொடுக்கக்கூடாது. அவர்களுடைய பிள்ளைகள் முன்னேறிய வகுப்பினரின் பிள்ளைகளுடன் அதாவது உயர்சாதியினரின் பிள்ளைகளுடன் பொதுப் போட்டியில் போட்டியிட்டுத் தேர்ச்சி பெற்று வேலை பெற வேண்டும். வளர்ந்த குடும்பம் எது என்பதை முடிவு செய்திட அதற்கான வரையறைகளை மய்ய அரசு முடிவு செய்ய வேண்டும். அந்த வரையறைகளின்படி உள்ள குடும்பங்களை வளர்ந்த குடும்பங்களாக முடிவு செய்து அவர்களைப் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் பட்டியலிலிருந்து நீக்கிவிட வேண்டும். இந்தத் தீர்ப்பு பிற்படுத்தப்பட்ட வகுப்பு

களுக்கு மட்டுமே பொருந்தும். பட்டியல் வகுப்புகளுக்கும் பட்டியல் பழங்குடிகளுக்கும் இந்தத் தீர்ப்பு பொருந்தாது என்று கூறப்பட்டுள்ளது. இதுதான் உச்சநீதிமன்றத்தின் அநீதியான தீர்ப்பு.

**வளர்ந்த குடும்பம் என்பதற்கான மய்ய அரசின் வரையறைகள் என்ன?**

மய்ய அரசின் எண் 36012/22/93 பணியமைப்பு **(ஷிசிஜி)** 8.9.1993ஆம் நாளிட்ட அலுவலகக் குறிப்பாணை வளர்ந்த குடும்பம் எது என்பதற்கான வரையறைகளைச் சொல்கிறது.

அதன்படி, பெற்றோரில் இருவரும் அல்லது ஒருவர் மய்ய அரசில் அல்லது மாநில அரசில் அல்லது பொதுத் துறை நிறுவனத்தில் முதல் நிலை அலுவலராகவோ அல்லது பெற்றோர் இருவரும் இரண்டாம் நிலை அலுவலராகவோ அல்லது இன்றைய நிலையில் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ 6லட்சமும் அதற்கு மேலும் இருந்தாலோ அந்தக் குடும்பம் வளர்ந்த குடும்பம் ஆகும்.

**அந்த ஆணையின் VI Income / Wealth Test வருமானம்/ செல்வம் சோதனை என்னும் பிரிவின் இறுதியில் விளக்கம் என்னும் சிறுதலைப்பின் கீழ், சம்பளத்திலிருந்து அல்லது விவசாயத் திலிருந்து கிடைக்கின்ற வருமானத்தை இதில் சேர்க்கக்கூடாது என்று உள்ளது.**

மய்ய அரசுப் பணியில் சேருவதற்கு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் கோருகின்ற இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புச் சான்றிதழ் (OBC) வழங்கும்போது பெற்றோருடைய வருமானத்தை அறிய அவர்களுடைய மொத்த ஆண்டுச் சம்பளம், விவசாய வருமானம் ஆகியவற்றைக் கணக் கில் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று தமிழக அரசு தன்னுடைய அதிகாரிகளுக்கு Lr.No. 627 / BCC / 07-33 Dt. 24.4.2000 கடிதத்தில் தெளிவுரை வழங்கப்பட்டு உள்ளது.

போட்டித் தேர்வில் தேர்ச்சி பெற்ற பின்னரும் பிற்படுத்தப் பட்ட வகுப்புகளைச் சேர்ந்த 120 பேருக்கு வேலை கொடுக்கப் படாத அநீதிக்கும் பெருங்கேட்டி னுக்கும் அவலத்துக்கும் காரணம். மய்ய அரசின் இந்த ஆணையும் உச்சநீதிமன்றத் தீர்ப்புமே காரணங்கள் ஆகும்.

மய்ய அரசின் கேடான இந்த ஆணையும் உச்சநீதி மன்றத் தீர்ப்பும் உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைக்காகப் பாடு படுகின்ற அமைப்புகளும் சாதிச்சங்களும் மெத்தனமாக இல்லாமல் துடிப்புடன் செயல்பட்டால் மட்டுமே இப்பெருங்கேட்டினை, அநீதியை ஒழிக்க முடியும்.

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அரசு 1979இல் பிறப்பித்த ரூ.9 ஆயிரம் வருமான வரம்பு ஆணையை அனை வரும் எதிர்த்துப் போராடி நீக்கியது போன்று இதற்கும் அத்தகைய போராட்டம் நடத்தப்பட வேண்டும். ❖

**பெரியார் ஈ.வெ.இராமசாமி-நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு நிதி அளிக்க வங்கி கணக்கு எண்.06780200000274**
**BANK OF BARODA, Triplicane Branch CHENNAI-5.**
**IFSC Code : BARB0TIRUVA - MICR No.6001201７**

எண்.273/2, சென்னை-திருவள்ளுவர் நெடுஞ்சாலை,
அம்பத்தூர், சென்னை - 600 098.

## அறிவிப்பு

தமிழகத்தின் மிகச்சிறந்த அரசியல் மாத இதழ் சிந்தனை யாளன் 40 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டுள்ளது. இதழ் நடத்த இதுவரை ஆதரவு அளித்த அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இப்பொழுது நிதிநிலை மிகவும் சரியில்லாமல் உள்ளது.

அன்புகூர்ந்து சிந்தனையாளன் ஆண்டுக் கட்டணம் கட்டி புதுப்பிக்காதவர்கள் கட்டணத் தொகையை செலுத்திப் புதுப் பித்துக் கொள்ளவும். புதுப்பிக்காதவர்களுக்கு செப்டம்பர் 2016 முதல் இதழ் நிறுத்தப்படும். பத்தாண்டு சந்தா (வாழ்நாள் கட்டணம்) செலுத்தி பத்தாண்டு கடந்தவர்கள் இப்பொழுதுள்ள கட்டணத் தொகைப்படி ரூ.1,500 செலுத்திப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுகிறோம்.

தொகையைச் செலுத்த கீழ்க்கண்ட முறையினைப் பயன் படுத்தவும். (1) அஞ்சல் பணவிடை, (2) வங்கிக் காசோலை (அ) வங்கி முறி, (3) நேரடியாக வங்கியில் கட்டுதல், (4) சிந்தனையாளன் என்ற பெயரில் வங்கிக் கணக்கு எண் : 232007660, TNSCB Ltd. (தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்) திருவல்லிக்கேணி, சென்னை-5. IFSC Code TNSC0000001, MICR No.600091032 பயன்படுத்தி அனுப்பவும். உறுப்பினரின் தெளிவான முகவரியினை கடிதத்தில் எழுதி சந்தா எண் குறிப்பிட்டு அனுப்பவும்.

- ஆசிரியர் குழு

## த.அறிவுச்செல்வன் நான்காம் ஆண்டு நினைவு நாள்



அரியலூர் தமிழ்மணி-கமலம் இணை யரின் மகன் த.அறிவுச்செல்வன்- (பா.ம.க. மாணவர் அணி முன்னாள் தலைவர்) நான்காம் ஆண்டு நினை வேந்தல் நிகழ்வு 10.7.2016 ஞாயிறு 12 மணிக்கு அரியலூரில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. 10ஆம் வகுப்பு மாணவர்களுக்குப் பரிசு அளிப் பும், அன்னதானமும் நடைபெற உள்ளது.


நினைவில் வாடும் பெற்றோர் தமிழ்மணி, கமலம் மகன்கள் : அபராசிதவர்மன், அ.ஆளவந்தான்; மாமா : த.சாமிதுரை, அக்கா : தமிழரசி.

அரியலூர் த.அறிவுச்செல்வன் கல்வி மற்றும் விளை யாட்டு அறக்கட்டளை விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய் துள்ளது. அனைவரும் கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

# குல்பர்க் குடியிருப்பு வழக்கின் தீர்ப்பும் தொடரும் இந்துத்துவ வெறித்தாக்குதல்களும்

- க.முகிலன்

குசராத் மாநிலத்தில் நரேந்திர மோடி முதலமைச்சராக இருந்தபோது, 2002 பிப்பிரவரி 27 அன்று, கோத்ரா தொடர்வண்டி நிலையத்தில், சபர்மதி விரைவுத் தொடர் வண்டியின் பெட்டி ஒன்று தீப்பிடித்து எரிந்தது. இந்த இரயில் பெட்டியில் இருந்தவர்களில் 59 பேர் தீயில் கருகி மாண்டனர். இவர்கள் அயோத்தியில் இராமனுக்குக் கோயில் கட்டுவதற்கான பணியில் ஈடுபட்டபின் தத்தம் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்த கரசேவகர் கள் என்று கூறப்பட்டது.



2002 பிப்ரவரி 28 அன்று இந்துமத வெறியர்களால் தாக்கப்பட்ட குல்பர்க் முசுலீம்கள் குடியிருப்பு இன்றும் அதேநிலையில் இருக்கிறது.

கோத்ரா நிலையத்தில் சபர்மதி இரயில் பெட்டியில் இருந்த கரசேவகர்களை முசுலீம்கள் கொன்றார்கள் என்கிற வதந்தி பரவியதும், இந்துத்துவ வெறியர்கள் கொடிய ஆயுதங்களுடன் பல இடங்களில் முசுலீம்களைத் தாக்கினர். அவர்களின் வணிக நிறுவனங்களைச் சூறையாடினர்; தீயிட்டுக் கொளுத்தினர். முசுலீம்கள் வாழும் பகுதிகளில் அவர்களின் வீடுகளுக்குள் புகுந்து அவர்களை வெட்டிச் சாய்த்தனர். உடைமைளை அடித்து நொறுக்கினர்.

இம்மதவெறித் தாக்குதல் 2002 பிப்ரவரி 28, மார்ச்சு 1, 2 என மூன்று நாள்கள் தொடர்ந்து நடந்தது. மோடி அரசு, இந்துத்துவவாதிகளின் சினம் தணியும் வரை முசுலீம்களைத் தாக்கட்டும், மூன்று நாள் களுக்குக் காவல்துறை இத்தாக்குதலைத் தடுக்க வேண்டாம் என்று வாய்மொழி ஆணையைப் பிறப் பித்தது. அதனால் சங்பரிவாரத்தின் குண்டர் தலைவர் கள் காவல்துறையின் கட்டுப்பாட்டு அலுவலகத்தைத் தம் சொந்த அலுவலகம் போல் கைப்பற்றிக் கொண்டு, முசுலீம்கள் வாழும் எந்தெந்தப் பகுதிகளில் தாக்குதல் நடத்தவேண்டும் என்று தம் குண்டர் படைக்கு ஆணையிட்டுக் கொண்டிருந்தனர். மூன்று நாள்கள் முசுலீம்கள் மீது சங்பரிவாரங்கள் நடத்திய தாக்குதலில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட முசுலீம்கள்-பெண்கள், குழந்தைகள் என்றும் பாராமல் கொலை செய்யப்பட்ட னர். ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட முசுலீம்கள் தங்கள் உயிருக்கு அஞ்சி வீடுகளை விட்டு ஓடினர். ஓராண் டிற்கும் மேலாக இவர்கள் அகதிகள் முகாம்களில் அடிப்படை வசதிகள் இல்லாமல் பல துன்பங்களுக்கு ஆளாயினர்.

அப்போது தலைமை அமைச்சராக இருந்த வாஜ்பாய், ''இராஜ தர்மத்தைக் காக்கவேண்டும்'' என்று மோடிக்கு அறிவுரை வழங்கியதுடன், இராஜ அமைதியாகிவிட்டார். உள்துறை அமைச்சராக இருந்த அத்வானி இத்தன்மை யில் கூட எதையும் கூறவில்லை. முசுலீம் கள் மீதான கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்ட தைக் கண்டித்து இந்தியா முழுவதும் கடுமையான கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன.

ஆனால் மோடி அரசு, முசுலீம்களைக் கொன்றவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்காமல் தவிர்த்தது. கொலையாளிகள் சுதந்தரமாக நடமாடிக் கொண்டிருந்த னர். ஒரு சட்டமன்ற உறுப்பினராகக் கூட இல்லாமல் - ஆர்.எஸ்.எஸ்.இல் முழுநேரத் தொண்டராக இருந்த நரேந்திர மோடி 2001 ஆம் ஆண்டு நேராக குசராத்தின் முதலமைச்சர் பதவியில் பா.ச.க.வால் அமர்த்தப்பட்டவர். அதனால் அவர் இறுக்கமான தீவிர ஆர்.எஸ்.எஸ். காரரைப் போலவே முதலமைச்சராக இருந்தபோது நடந்துகொண்டார்.

கொலைவெறித் தாண்டவமாடிய இந்துத்துவக் கும்பல்மீது, மோடி அரசு உரிய நடவடிக்கை எடுக்கா ததை எல்லாத் தரப்பினரும் கடுமையாகக் கண்டித்த னர். மோடி ஆட்சியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காது; குற்றவாளிகள் மீதான வழக்குகளை வேறு

மாநில நீதிமன்றங்களில் விசாரிக்கவேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டன. அதன்படி பெஸ்ட்பேக்கரி தாக்குதல் உள்ளிட்ட சில வழக்குகள் மகாராட்டிர மாநில நீதித்துறைக்கு மாற்றப் பட்டன.

உச்சநீதிமன்றத்தில் குசராத் அரசின் நம்பகத்தன் மையைக் குறித்துக் கேள்விகள் எழுப்பி, பல பொதுநல வழக்குகள் தொடரப்பட்டன. இதன் விளைவாக உச்சநீதிமன்றம் 2008இல் புலனாய்வுத் துறையின் தலைவராக இருந்து ஓய்வுபெற்ற ஆர்.கே.இராகவன் தலைமையில் முசுலீம்கள் தாக்கப்பட்ட ஒன்பது நிகழ்ச்சிகள் குறித்து ஆராய ஒரு சிறப்புப் புலனாய்வுக் குழுவை அமைத்தது. குசராத் முதலமைச்சர் நரேந்திர மோடி, அவரின் அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் மீது வழக்குத் தொடுப்பதற்கான ஆதாரங்கள் உள்ளனவா என்பதையும் ஆராயுமாறு உச்சநீதிமன்றம் அறிவுறுத்தி யது. ஆர்.கே.இராகவன் தலைமையிலான இக்குழு முதலமைச்சர் நரேந்திர மோடி மீது குற்றநடவடிக்கை எடுப்பதற்கான ஆதாரம் இல்லை என்று கூறிவிட்டது - முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போல்!

சிறப்புப் புலனாய்வுக்குழு திரட்டிய ஆதாரங்களின் அடிப்படையில் நடைபெற்ற வழக்குகளில் ஒன்று, 2002 பிப்ரவரி 28 அன்று அகமதாபாத்தில் காவல்துறை ஆணையர் அலுவலகத்திலிருந்து ஒன்றரை கி.மீ. தொலைவில் அமைந்துள்ள குல்பர்க் சங்கக் குடியிருப் பில் 69 முசுலீம்கள் கொல்லப்பட்டதாகும். 2002 பிப்ரவரி 28 அன்று 300 பேர் கொண்ட இந்துத்துவ வெறிக்கும்பல் குல்பர்க் குடியிருப்பில் இருந்த முசுலீம்களை ஆறுமணி நேரம் தொடர்ந்து தாக்கியது. குல்பர்க் குடியிருப்பில் இருந்த காங்கிரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இஷான் ஜாப்ரி முதலமைச்சர் மோடிக்கும் அமைச்சர்களுக்கும், அருகில் இருந்த காவல்துறை ஆணையர் அலுவலகத்துக்கும் குடியிருப்பில் உள்ள முசுலீம்களைக் காப்பாற்றுமாறு தன் வீட்டில் உள்ள தரைவழித் தொலைபேசி வாயி லாகப் பலதடவைகள் வேண்டுகோள் விடுத்தார். இந்தத் தகவல்கள் தொலைப்பேசி அலுவலகத்தில் பதிவாகி உள்ளன. ஆனால் மோடி அரசின் நிர்வாகம் உதவ வில்லை. இஷான் ஜாப்ரி வீட்டில் இருந்தால் தாக்கப்பட மாட்டோம் எனக்கருதி முப்பது நாற்பது முசுலீம்கள் அவர் வீட்டில் அடைக்கலம் புகுந்தனர். அவர்களின் நம்பிக்கை பொய்யானது. இஷான் ஜாப்ரி, அவருடைய மனைவி ஜாகியா கண்ணெதிரிலேயே கொல்லப்பட்டு எரிக்கப்பட்டார்.



*குல்பர்க் குடியிருப்பில் கொல்லப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இஷான் ஜாப்ரி - இந்த வழக்கு தீவிரமாக விசாரிக்கப்பட கடும் முயற்சி எடுத்த அவரின் மனைவி ஜாகியா.*

குல்பர்க் படுகொலை வழக்குச் சிறப்பு விசாரணை நீதிமன்றத்தில் 2009 செப்டம்பர் முதல் 2011 சனவரி வரை நடந்தது. 330 பேர் சாட்சியங்களாக விசாரிக்கப் பட்டனர். ஆனால் சிறப்பு நீதிமன்றத்தின் நீதிபதிகள் குறுகிய காலத்திலேயே அடுத்தடுத்து ஓய்வு பெற்றதால், இந்த வழக்கில் தீர்ப்பு வழங்குவது தள்ளிப் போடப்பட்டு வந்தது. இந்நிலையில் உச்சநீதிமன்றம் குல்பர்க் வழக்கில் 2016 மே 31க்குள் தீர்ப்பை வழங்க வேண்டும் என்று சிறப்பு விசாரணை நீதிமன்றத்துக்கு ஆணை யிட்டது.

இதன் அடிப்படையில் சிறப்பு விசாரணை நீதி மன்றத்தின் நீதிபதி பி.பி.தேசாய் 2-6-2016 அன்று குல்பர்க் குடியிருப்பு தாக்குதல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த 66 பேரில் 24 பேர் குற்றவாளிகள் என்றும் மற்ற 42 பேர் குற்றவாளிகள் என்பதற்குப் போதிய சான்றுகள் இல்லை என்பதால் அவர்கள் குற்றமற்றவர்கள் என்றும் தீர்ப்பு வழங்கினார்.

குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்ட 24 பேருக் கான தண்டனை விவரத்தை 17-6-2016 அன்று நீதிபதி தேசாய் அறிவித்தார். 11 பேருக்கு வாழ்நாள் தண்டனை யும், ஒருவருக்கு 10 ஆண்டுகள் தண்டனையும் மற்ற 12 பேருக்கு 7 ஆண்டுகள் தண்டனையும் விதித்தார். மாநில அரசு தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தித் தண்டனையைக் குறைத்தாலன்றி, வாழ்நாள் தண்டனை பெற்ற 11 பேரும் தங்கள் வாழ்நாள் முழுவதும் சிறையில் இருக்கவேண்டும் என்று நீதிபதி கூறினார். 2002 குசராத் கலவரத்தில ஆயிரத்துக்கு மேற்பட்ட

முசுலீம்கள் கொல்லப்பட்டதில், இதுவரை 173 பேருக்கு மட்டுமே தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் பலர் உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளனர். சிலர் பிணையில் வெளியில் வந்துள்ளனர். நரோடி பாட்டியா வழக்கில் மோடியின் அமைச்சரவையில் இருந்த பெண் அமைச்சர் - மோடியின் வலது கை என்று கருதப்பட்ட மாயா கொதானிக்கு 28 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. ஆனால் அவர் பிணையில் வெளிவந்து இயல்பான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

2002 இல் குசராத்தில் முசுலீம்கள் மீது எந்த அளவுக்குக் கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டது என்பதை அறிவதற்கான முதன்மையான எட்டு வழக்குகள் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.


| வ. எண் | தாக்குதல் நடந்த இடம், நாள் | கொல்லப்பட்ட முசுலீம்கள் எண்ணிக்கை | தீர்ப்பு வழங்கப்-பட்ட நாள் | தீர்ப்பு விவரம் |
|---|---|---|---|---|
| 1. | சர்தார் புரா<br>2002 மார்ச்சு 1 | 33 பேர் உயிருடன் எரிக்கப்பட்டனர் | 2011 நவம்பர் 9 | 31 பேருக்கு ஆயுள் தண்டனை<br>42 பேர் விடுவிப்பு |
| 2. | குல்பர்க் குடியிருப்பு<br>2002 பிப்ரவரி 28 | 69 | 2016 சூன் 17 | 11 பேர் - ஆயுள் தண்டனை<br>ஒருவர் - பத்தாண்டு சிறை<br>12 பேர்கள் - 7 ஆண்டு சிறை |
| 3. | ஓதே (இரண்டு வழக்கு)<br>2002 மார்ச்சு 1 | 23 பேர் எரிப்பு<br>3 பேர் எரிப்பு | - | 18 பேருக்கு வாழ்நாள் சிறை<br>23 பேர் விடுவிப்பு<br>9 பேருக்கு மரண தண்டனை<br>31 பேர் விடுவிப்பு<br>மேல் முறையீட்டு வழக்கு குசராத் உயர்நீதிமன்றத்தில் உள்ளது |
| 4. | நரோடா பாட்டியா<br>2002 பிப்ரவரி 28 | 97 பேர்<br>அகமதாபாத்தில் | 2012<br>ஆகஸ்ட் 31 | 32 பேர் வாழ்நாள் தண்டனை |
| 5. | நரோட காம்<br>2002 பிப்ரவரி 28 | 11 | தீர்ப்பு இன்னும் வழங்கப்படவில்லை | --- |
| 6. | தப்தா தர்வாசா<br>2002 பிப்ரவரி 28 | ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11 பேர் (4 குழந்தைகள் உட்பட) | 2012<br>சூலை 31 | 21 பேருக்கு வாழ்நாள் தண்டனை<br>61 பேர் விடுவிப்பு |
| 7. | பெஸ்ட் பேக்கரி<br>2002 மார்ச்சு 1 | வதோராவில் பெஸ்ட் பேக்கரி எரிப்பு - 14 பேர் கொல்லப்பட்டனர் | 2006<br>பிப்ரவரி 24 | 9 பேருக்கு ஆயுள், 8 பேர் விடுவிப்பு<br>9 பேரில் 4 பேரை 2012 சூலை 9 இல் பம்பாய் உயர்நீதிமன்றம் விடுதலை செய்தது. |
| 8. | பில்கிஸ் பானோ<br>2002 மார்ச்சு 3 | 4 பெண்கள்<br>4 சிறுவர்கள் | 2008<br>சனவரி 22 | 11 பேருக்கு ஆயுள், 7 பேர் விடுதலை<br>பம்பாய் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு - நிலுவை |

மேலே உள்ள விவரத்தின் மூலம் இந்துத்துவ சக்திகள் எந்த அளவுக்கு முசுலீம்கள் மீது கொலை வெறியுடன் இருக்கின்றனர் என்பதைப் புரிந்து கொள்ளலாம். நரேந்திர மோடி தலைமை அமைச்சரான பிறகு இந்துத்துவக் கும்பல் அதன் கொள்கைகளை விமர்சிப்பவர்கள், இந்து மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் கொல்லத் தயங்குவதில்லை என்பதை தபோல்கர், பன்சாரே, கல்புர்கி ஆகிய பகுத்தறிவாளர்கள் கொல்லப்பட்டமை காட்டுகிறது. எனவே இந்துத்துவ ஆதிக்கத்தை முறியடிப்பதே நம்முன் உள்ள முதன்மையான கடமையாகும்.

❖

# பண்ருட்டியில் எழுச்சியுடன் நடைபெற்ற
# விகிதாசார வகுப்புவாரிப் பங்கீடு மாநாடும் ஜெயில்சிங் நூற்றாண்டு விழாவும்

கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் ரங்கா மகாலில் 2016 சூன் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் மாலை வரை அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், மதச் சிறுபான்மையினர் பேரவையின் சார்பில் அனைத்திந்திய விகிதாசார வகுப்புவாரிப் பங்கீடு மாநாடும், கியானி ஜெயில் சிங் நூற்றாண்டு விழாவும், அவரைப் பற்றி வே. ஆனைமுத்து எழுதிய ஆங்கில நூல் வெளியீட்டு விழாவும் எழுச்சியுடனும் சிறப்புடனும் நடைபெற்றன.




*ஜெயில்சிங் பற்றிய நூலை சீனந்தல் அடிகளார் வெளியிட, மாம்பலம் ஆ.சந்திரசேகர் பெற்றுக் கொண்டார்.*

முற்பகல் 10 மணியளவில் பேரவையின் கொடியினை மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் இளைஞர்-மாணவர் அணி மாநிலச் செயலாளர் முனைவர் ஆ. முத்தமிழ்ச் செல்வன் ஏற்றினார். மா.பெ.பொ.க. வேலூர் மாவட்டச் செயலாளர் மோ.சி. சங்கர் மா.பெ.பொ.க.வின் கொடியினை ஏற்றினார்.

முற்பகலில் இரண்டு நிகழ்ச்சிகளும், பிற்பகல் உணவு இடைவேளையின் போது, புரட்சியாளர் அம்பேத்கர் இசைக் குழுவின் நிகழ்ச்சியைத் தொடர்ந்து, மூன்றாம் நிகழ்ச்சியும் நடைபெற்றன.

முதல் நிகழ்வாக, **பிற்படுத்தப்பட்டோருக்குப் பதவி உயர்வில் இடஒதுக்கீடு கொடு! பிற்படுத்தப்பட்டோரில் வளர்ந்த பிரிவினருக்கு இடஒதுக்கீடு கூடாது (கிரிமிலேயர்) என்கிற ஆணையை நீக்கிடு,** என்னும் தலைப்பில் மாநாடு நடைபெற்றது. பேரவையின் புரலவர்-தலைவர் வே. ஆனைமுத்து தலைமையில் நிகழ்ச்சி தொடங்கியது. மா.பெ.பொ.க.வின் காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் சி. நடராசன் வரவேற்புரை நிகழ்த்தினார். பேரவையின் துணைத் தலைவரும் உத்தரப் பிரதேசம் லக்னோ மாநகர முன்னாள் மேயருமான டாக்டர் தாவூஜி குப்தா மாநாட்டினைத் தொடங்கிவைத்து, ஆங்கிலத்தில் உரையாற்றினார். அவரின் உரையை கலசம் தமிழில் மொழிபெயர்த்தார்.அனைத்திந்திய மய்ய அரசு ஊழியர் நலச் சங்கங்கள் பேரமைப்பின் பொதுச் செயலாளர் கு. தனசேகரன், அனைத்திந்திய எண்ணெய் எரிவாயு நிறுவனம் பிற்படுத்தப்பட்ட ஊழியர் நலச் சங்கத்தின் தலைவர் அ. இராசாமுத்து, மறைமலைநகர் பெரியார் சமூக நீதிப் பேரவையின் செயலாளர் மு.பிச்சைமுத்து, வருமான வரித்துறை பி.வ. ஊழியர் நலச் சங்கத் தலைவர் கி. குமார், மா.பெ.பொ.க.வின் நாகை மாவட்டச் செயலாளர் சீர்காழி முத்து. அன்பழகன், மா.பெ.பொ.க.வின் கடலூர் மாவட்டச் செயலாளர் பா.மோகன் ஆகியோர் மாநாட்டின் கோரிக்கைகளை விளக்கியும் வலியுறுத்தியும் உரையாற்றினார்கள். மா.பெ.பொ.கவின் விழுப்புரம் மாவட்டச் செயலாளர் ஆ.கு. ஆறுமுகம் நன்றி கூறினார்.

தொடர்ந்து இரண்டாம் நிகழ்வாக **கியானி ஜெயில்சிங் நூற்றாண்டு விழாவும் பிற்படுத்தப்பட்டோரின் உரிமைக் காவலர் கியானி ஜெயில்சிங் எனும் தலைப்பில் (Giani Zail Singh the Saviour of Backward Classes). வே. ஆனைமுத்து** எழுதிய **ஆங்கில நூல் வெளியீடும்** வே.ஆனைமுத்து தலைமையில் நடைபெற்றன. பேரவையின் பொதுச் செயலாளர் கலசு. இராமலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார். ஆதி சிவலிங்காச்சாரிய பீடத்தின் 64வது குரு சிவசிவசண்முக ஞானாச்சாரிய சுவாமிகள் எனும்

சீனந்தல் அடிகளார், ஜெயல்சிங் பற்றிய நூலை வெளியிட்டார். சென்னை மேற்கு மாம்பலம் ஆ.சந்திரசேகர் திருமண மண்டபத்தின் நிறுவுநர் ஆ. சந்திரசேகர் நூலின் முதற் படியினைப் பெற்றுச் சிறப்பித்தார்.

அடிகளாரின் அன்புக்குப் பாத்திரமானவராகவும் பண்ருட்டியில் ரங்கா தங்கும் விடுதி, பி.எஸ்.ஆர். நகைக்கடை, ரங்கா மகால் ஆகியவற்றின் நிறுவுநராக விளங்குகின்றவரும் இந்த மாநாடு இங்கே நடைபெறுவதற்கு இந்த ரங்கா மகாலை இலவசமாக அளித்தும் மண்டபத்தில் உடனிருந்து எங்களுடைய பணிகளுக்கு ஒத்துழைப்பு அளித்து வருகின்ற வருமான தமிழ்நாடு நகை வியாபாரிகள் சங்கத்தின் சட்ட ஆலோசகர் பி.எஸ். அரங்கநாதன் என்கிற பி.எஸ்.ஆர். அவர்களுக்கு என் சார்பிலும் எங்கள் பேரவையின் சார்பிலும் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று கூறி, அவருக்கு ஆனைமுத்து சால்வை அணிவத்துச் சிறப் பித்தார்.

தொடர்ந்து தமிழ்நாடு அனைத்து நகை வியாபாரிகள் சங்கத்தின் சட்ட ஆலோசகர் பி.எஸ்.அரங்கநாதன் எனும் பி.எஸ்.ஆர்., சென்னை தெலுங்கு தேவாங்கர் சங்கத்தைச் சேர்ந்தவரும் சேகர் பதிப்பக உரிமையாளருமான வெள்ளையாம்பட்டு சுந்தரம், அஞ்சல்துறை பி.வ. ஊழியர் நலச் சங்கத்தைச் சேர்ந்த சென்னை அரிகரன், தொலைத் தொடர்புத் துறை பி.வ.ஊழியர் நலச் சங்கத்தைச் சேர்ந்த சென்னைத் தோழர்கள் ஜெ.பிரசாத், பாண்டியன்; வள்ளுவர் மன்றத்தின் செயலாளர் மா.சமத்துவமணி, மா.பெ.பொ.க. வின் இளைஞர்-மாணவர் அணி மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் பொறிஞர் தி. துரைசித்தார்த்தன், சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகம் பி.வ.ஊழியர் நலச்சங்கத்தின் பொதுச் செயலாளர் கே.எம். முகம்மது அலி, ஆவடி இன்ஜின் தொழிற்சாலை பி.வ.ஊழியர் நலச் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆர்.செந்தாமரைக் கண்ணன் ஆகியோர் அவரவர் விருப்பத்துக்கேற்பத், தொகை கொடுத்து நூலின் படியைப் பெற்றுச் சிறப்பித்தனர். சென்னை திருவல்லிக் கேணியில் இருந்து வெளியிடப்பட்டு வருகின்ற விசுவகர்ம சமுதாய மேம்பாட்டு மாத இதழ் ''பஞ்சசக்தி'' ஆசிரியர் கோ. விசுவநாதன் நன்றி கூறினார்.

மதிய உணவு இடைவேளையின்போது, வேலூர் புரட்சியாளர் அம்பேத்கர் இசைக் குழுவின் நிகழ்ச்சி நடைபெற்றது. தோழர்கள் பாவலர் முகில்-தங்கவேலு ஆகியோர் பெரியார், அம்பேத்கர் ஆகியோரின் தொண்டினைப் போற்றியும் வகுப்புரிமையைப் பரப்பும் பாடல்களைப் பாடியும் மக்களுக்கு எழுச்சியூட்டினர். அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவையின் திருச்சி மாவட்டத் தோழர் திருச்சி ந.கருணாகரன் மாநாட்டின் தீர்மானங்களை முன்மொழிந்து பேசினார்.

பிற்பகல் 3.15 மணிக்கு மாநாட்டின் மூன்றாம் மற்றும் இறுதி நிகழ்வு தொடங்கியது. ''அனைத்து வகுப்புகளுக்கும் விகிதாசார வகுப்புவாரி இடப் பங்கீடு கொடு! பிரதி நிதித்துவம் பெறாத வகுப்புகளுக்கு உள் ஒதுக்கீடு கொடு!'' என்னும் தலைப்பிலான மாநாடு, வே. ஆனைமுத்து தலைமையில் நடைபெற்றது. மா.பெ.பொ.க.வின் வேலூர் மாவட்டச் செயலாளர் மோ.சி.சங்கர் வரவேற்புரை நிகழ்த்தினார். தமிழ்நாடு மருத்துவச் சமூகப் பாதுகாப்புச் சங்கத்தின் மாநிலத் தலைவர் விழுப்புரம் அ.தண்டபாணி, மீனவர் விடுதலை வேங்கைகள் அமைப்பின் நிறுவுநர் இரா.மங்கையர்செல்வன், மா.பொ.பொ.க.வின் பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் மா. நாராயணசாமி, மா.பெ.பொ.க.வின் திருவண்ணாமலை மாவட்டச்செயலாளர் பொ.சுப்பிரமணியன், காஞ்சிபுரம் முற்போக்கு சமூக நீதிப் பேரவையின் நிறுவுநர் டாக்டர் விமுனாமூர்த்தி, தமிழக இளைஞர் எழுச்சி இயக்கத்தின் தோழர் அழகுஒளி, புதுதில்லி பெரியார் - அம்பேத்கர் தொண்டு நிறுவனத்தின் சார்பில் உச்ச நீதிமன்ற வழக்குரைஞர் க. லெனின் வினோபர், மா.பெ.பொ.க.வின் வாணியம்பாடி நகரச் செயலாளர் நா. மதனகவி ஆகியோர் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு விகிதாசாரப் பங்கீடு கொடுக்கப்பட வேண்டும் என்றும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள பிரதிநிதித்துவம் பெறாமல் இருக்கிற வண்ணார், மருத்துவர், குயவர், மீனவர், வலையர், ஒட்டர், குறும்பர், அம்பலக்காரர் ஆகிய வகுப்புகளுக்கும்; பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள பிரதிநிதித்துவம் பெறாத வகுப்புகளான முத்தரையர், கம்மாளர், யாதவர் ஆகிய வகுப்புகளுக்கும் அந்தந்தப் பட்டியலில் உள்ஒதுக்கீடு கொடுக்கப்பட வேண்டும் என்பதனை விளக்கியும் உரையாற்றினார்கள். சிந்தனையாளன் மாத ஏட்டின் மேலாளர் ப.வடிவேலு நன்றி கூறினார்.

**கலசு. இராமலிங்கம் தம் வரவேற்புரையில் பேசியது:** இந்திய அரசமைப்புச் சட்டம் நடப்புக்கு வந்த 1950ஆம் ஆண்டு முதல் 1994ஆம் ஆண்டு வரையிலான காலம் இந்தியப் பிற்படுத்தப்பட்டோர் இயக்க வரலாற்றில் இருண்ட காலமாகும். இருண்ட காலத்துக்கு முடிவுகட்ட மய்ய அரசின் கல்வியிலும் வேலையிலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு கொடு! என்னும் ஒற்றைக் கோரிக்கையுடன் 1978ஆம் ஆண்டில் புதுதில்லிக்குச் சென்று தன் தோழர்களின் துணையுடனும் நாடாளுமன்ற உறுப்பினர் இராம் அவதேஷ்சிங் அவர்களுடைய ஒத்துழைப்புடனும், ஆனைமுத்து இந்தியாவின் பல பகுதிகளுக்கும் சென்றார். அவருடைய கோரிக்கைக்கு உரிய பலன் 1994இல் தான் கிடைத்தது. இடைப்பட்ட காலத்தில் அவர் தன் கோரிக்கையின் வெற்றிக்காக ஆறு நிலைகளில் பாடுபட்டார்.

இந்திய அரசுக்குக் கோரிக்கை ஆவணங்களைக் கொடுத்தது முதல் நிலை. குடிஅரசுத் தலைவரையும் தலைமை அமைச்சர்களையும் மய்ய அரசின் பிற அமைச்சர்களையும் நேரில் சந்தித்து அவர்களுக்குக் கோரிக்கையைப் புரிய வைத்தது இரண்டாம் நிலை. அவர்கள் அக் கோரிக்கையை நிறைவேற்றாதபோது அதற்காக மக்களைக் கூட்டி மாநாடுகள் நடத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றியது மூன்றாம் நிலை. அந்தத் தீர்மானங்களை இந்தியா முழுவதும் சென்று விளக்கிப் பரப்புரை செய்தது நான்காம் நிலை. பரப்புரைக்காகத்

தமிழிலும் ஆங்கிலத்திலும் தாமே நூல்களை எழுதி வெளியிட்டும் இந்தியில் அறிக்கைளையும் நூலையும் வெளியிட்டும் இந்தி பேசும் மக்களிடம் ஆதரவைத் திரட்டியது அய்ந்தாம் நிலை. பரப்புரையின் மூலம் மக்களிடம் கிடைத்த ஆரதரவைக் கொண்டு கிளர்ச்சிகளை பீகாரிலும், தில்லியிலும், தமிழ்நாட்டிலும் நடத்தியது ஆறாம் நிலை. இப்படித் தாம் ஒருவரே சிந்தித்துத் தம் தோழர்களின் துணையைக் கொண்டு ஆறுநிலைகளிலும் இடைவிடாது பாடுபட்டதால்தான், மண்டல் குழு அமைக்கப்பட்டது; அதன் அறிக்கை நாடாளு மன்றத்தில் வெளியிடப்பட்டது. பின்னர் வி.பி. சிங் பிற்படுத் தப்பட்ட மக்களுக்கு 1990இல் மய்ய அரசின் வேலையில் 27 இட ஒதுக்கீடு அளிப்பது சாத்தியமாயிற்று.

மய்யஅரசில் பிற்படுத்தப்பட்ட மக்கள் இடஒதுக்கீடு பெறுவதற்கு நால்வரின் பணி அடிப்படையாக அமைந்தது.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மய்ய அரசில் இடஒதுக்கீடு பெறுவது என்பது சட்டப்படியான, நிறைவேற்றப்படக் கூடிய கோரிக்கை என்பதை ஆவணமாக்கி அதை 1978இல் இந்திய அரசுக்கு அளித்து அதற்கான பணியைத் தொடக்கி வைத்தவர் வே.ஆனைமுத்து.

மய்ய அரசில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீடு குறித்து பரிந்துரை செய்து அறிக்கை தயாரித்து 1980ஆம் ஆண்டில் பிரதமர் இந்திராகாந்தியிடம் அளித்தவர் பிந்தேசுவரி பிரசாத் மண்டல்.

மண்டல் குழு அறிக்கை எனப்படும் அந்த அறிக்கையை 1982இல் நாடாளுமன்றத்தில் வெளியிட்டு அதன் பரிந்துரை களை நாட்டு மக்கள் அறியுமாறு செய்தவர் இந்திய அரசின் அன்றைய உள்துறை அமைச்சர் கியானி ஜெயில்சிங்.

மண்டல் குழு அறிக்கையின் பல பரிந்துரைகளுள் மய்ய அரசின் வேலையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு என்னும் ஒரு பரிந்துரையை மட்டும் 1990 ஆம் ஆண்டில் அரசாணை பிறப்பித்து நடைமுறைப்படுத்தியவர் அன்றைய பிரதமர் வி.பி.சிங். கோரிக்கையை அரசுக்கு அளித்து அப்பணியைத் தொடக்கி வைத்துத் தொடர்ந்து பாடுபட்ட வே.ஆனைமுத்து, அறிக்க தயாரித்து அளித்த பி.பி.மண்டல், அந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் வெளியிட்ட கியானி ஜெயில்சிங், அதற்கான அரசாணை பிறப்பித்த பிரதமர் வி.பி.சிங் ஆகிய நால்வரின் சாதனைகளும் பிற்படுத்தப்பட்ட மக்களால் என்றும் நினைக்கப்படவேண்டியவை ஆகும். இவ்வாறு கலசம் பேசினார்.

**சீனந்தல் அடிகளாரைப் பற்றிய அறிமுக உரையை நிகழ்த்திய வே.ஆனைமுத்து, கூறியதாவது:** அடிகளாரும் நானும் புறத்தோற்றத்தில் வேறுபட்டிருந்தாலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வகுப்புவாரி விகிதாசாரப் பங்கீடு பெற்றுத் தருவதில் நாங்கள் இருவரும் ஒன்றாகப் பாடுபடு கிறோம். விசுவகருமச் சமுதாயம் என்பது பார்ப்பனர்களை உயர்வாக மதிக்காதவர்கள். அவர்களைத் தங்களுடைய குடும்ப இன்பதுன்ப நிகழ்ச்சிகளை நடத்திக் கொடுக்க அழைக் காதவர்கள். தங்கள் வீட்டு நிகழச்சிகளைத் தங்களுடைய வகுப்பாரைக் கொண்டே வடமொழி மந்திரங்களை ஓதி நடத்திக் கொள்வார்கள். வடமொழியில் ஓதி நடத்தாமல் தமிழில் விசுவகர்ம வீட்டுத் திருமணத்தை முதலில் நடத்தி வைத்தவர் அடிகளார். வேலூரில் எங்கள் கட்சித் தோழர் லோ. இரத்தினக்குமார் மகள் திருமணத்தை அடிகளார் என் முன்னிலையில் 2005ஆம் ஆண்டு தமிழில் நடத்தி வைத்தார். இது அடிகளார் தன் சமுதாயத்தில் செய்த பெரிய மாற்றம். அடுத்ததாக 2010ஆம் ஆண்டில் பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் தொகுப்பின் இரண்டாம் பதிப்புக்கு அடிகளார் விசுவகரும வகுப்பினரிடம் ரூ. 3500 வீதம் 86படிகளுக்கு உரூபா மூன்று லட்சத்து ஓர் ஆயிரம் முன் பதிவுத் தொகை திரட்டித் தந்தார். அடிகளாரின் இப்படிப்பட்ட சுயமரியாதை-வகுப்புரிமைச் செயல்பாடுகள்தான் எங்களை ஒன்றுபடுத்தியிருக்கிறது. தம்முடைய 95ஆம் வயதிலும் அடிகளார் பயணம் மேற்கொண்டு இங்கு வந்து இந்த நூலை வெளியிடுவது நமக்கு ஊக்கத்தைக் தருகிறது. ஆ. சந்திரசேகர் அவர்கள் சென்னையில் எங்களுடைய பணிகளுக்குத் துணையாக இருப்பவர். தன்னுடைய திருமண மண்டபத்தை எங்களுக்குத் தேவைப்படும்போதெல்லாம் இலவசமாக அளித்து உதவுகின்றவர். சென்னை மேற்கு மாம்பலத்தில் உள்ள சந்திரசேகர் திருமணமண்டபத்தின் நிறுவுநர் மாம்பலம் ஆ. சந்திரசேகர் அவர்கள் ஜெயில்சிங் பற்றிய இந்த நூலின் முதன் படியைப் பெற்றுச் சிறப்பிப்பதும் எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. இவ்வாறு வே. ஆனைமுத்து பேசினார்.

**நூலை வெளியிட்டுப் பேசிய சீனந்தல் அடிகளார் தம் உரையில் கூறியதாவது:**

அறிவு, ஆற்றல் நிறைந்த என் அருமைத் தோழர் வே. ஆனைமுத்து, சில ஆண்டுகளுக்கு முன் மாமனிதர் கியானி ஜெயில்சிங் புகழ் ஓங்குக என்று தமிழில் ஒரு நூலை எழுதி வெளியிட்டார். அதில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு கியானி ஜெயில்சிங் என்ன செய்தார்? என்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். இன்று ஆனைமுத்து கியானி ஜெயில்சிங் பிறந்தநாள் நூற்றாண்டு விழவையொட்டி பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு கியானி ஜெயில்சிங் செய்த இன்றியமையாத செயல்களை எல்லாம் எழுதி ஆங்கிலத்தில் நூலாக்கியுள்ளார். அவர் எழுதிய அந்த ஆங்கில நூலினை இன்று உங்கள் முன் மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறேன்.

நவரத்தினங்களுக்கு மெருகு தீட்டுவார்கள். ஆனால் முத்துவுக்கு மட்டும் மெருகு தீட்ட மாட்டார்கள். மெருகு தீட்டாமலேயே ஒளிர்வது முத்து. என் அருமைத் தோழர் ஆனைமுத்துவும் அப்படிப்பட்ட முத்துதான். கியானி ஜெயில்சிங் அவர்கள் ஒத்துழைப்பு அளித்தது போலவே, நாங்களும் ஆனைமுத்து அவர்களுக்குத் தொடர்ந்து ஒத்துழைப்பு அளித்து வருவோம். இவ்வாறு அடிகளார் பேசினார்.

**- கலசம்**

அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் மதச்சிறுபான்மையினர் பேரவையின் சார்பில், 12.06.2016, ஞாயிற்றுக்கிழமை,

கடலூர் மாவட்டம் – பண்ருட்டி, இரங்கா திருமண மண்டபத்தில் நடைபெற்ற

## எல்லா வகுப்பினருக்கும் கல்வியிலும் வேலையிலும் விகிதாசார இடப்பங்கீடு கோரி நடைபெற்ற

# விகிதாசார வகுப்புவாரி இடப்பங்கீடு மாநாட்டில்

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

தீர்மானம் 1 :

உச்சநீதிமன்றம் 1963ஆம் ஆண்டு அளித்த ஒரு தீர்ப்பில்தான், முதன்முதலாக, பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் ஆகியோருக்கான மொத்த இடஒதுக்கீடு எப்போதும் 50 விழுக்காட்டுக்குக் குறைவாகவே இருக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதற்கு, விதி 16 (4), விதி 15 (4) இவற்றில் கிஞ்சிற்றும் இடமில்லை. ஆயினும், அதே தீர்ப்பை மண்டல் பரிந்துரையின் பேரிலான வழக்கின் தீர்ப்பிலும், 16.11.1992இல் உச்சநீதி மன்றம் உறுதி செய்தது. இது மிகப்பெரிய அநீதியாகும்.

ஏனெனில், உச்சநீதிமன்றமும் பல்வேறு உயர்நீதி மன்றங்களும் அப்போதும் இப்போதும், மேல்சாதி - படித்த - சாதி ஆதிக்க உணர்வுள்ள நீதிபதிகளையே அதிகமாகக் கொண்டு இயங்கி வருகின்றன. அவர்களின் ஆதிக்கம் எந்தத் துறையிலும் குலையக் கூடாது என்பதால்தான் மொத்தம் 85% உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் ஆகியோரின் அனுபவிப்புக்கு 49.5% இடங்களை ஒதுக்கீடு செய்துவிட்டு, 51.5% இடங்களைத் தகுதி, திறமை என்கின்ற பொய்யான கற்பனைகளைக் காட்டித் தொடர்ந்து மேல்சாதியினரின் ஆதிக்கம் நிலைப்பதற்கு வழி செய்துள்ளது உள்நோக்கம் கொண்டதாகும். இது பற்றி, “கேரள அரசு - என்.எம்.தாமஸ்” என்கின்ற வழக்கில் 1976இல் நீதிபதி மூர்த்துசா பசல் அலி (Justice Murtuza Fazal Ali) குறிப்பிட்டுள்ள கருத்து எல்லோராலும் ஆய்வு செய்யப்பட ஏற்றதாகும். அத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது பின்வருமாறு :

“ஒரு மாநிலத்தில் பிற்படுத்தப்பட்டோர் 80% இருப்பார்களானால் அவர்களுக்கு அம் மாநில அரசு 80% அரசுப் பணிகளை ஒதுக்கீடு செய்தால், அந்த ஒதுக்கீடு விதி 16(4)இல் சொல்லப்பட்டுள்ளதற்கு எதிரானதாகுமா? ஆகாது” என்பதே அத் தீர்ப்பில் காணப் பட்டுள்ளதாகும்.

இடஒதுக்கீடு பற்றி அக்கறை உள்ள எல்லோரும் நேர்மையாகச் சிந்தித்து 100% இடங்களையும் கீழ்க்காணுமாறு நான்கு வகுப்புகளுக்கும் பங்கு போட்டுத் தர ஆவன செய்யுங்கள் என்கிற கோரிக்கையை மய்ய அரசிடமும் எல்லா மாநில அரசுகளிடமும் வற்புறுத்துங்கள் என எல்லா வகுப்பினரையும் எல்லாக் கட்சியினரையும் இம்மாநாடு வேண்டிக் கொள்கிறது.

| | | |
|---|---|---|
| 1. | எல்லா மதங்களிலும் உள்ள முற்பட்ட வகுப்புகள் | 17.5 % |
| 2. | எல்லா மதங்களிலும் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் | 57.0 % |
| 3. | பட்டியல் வகுப்புகள் | 17.0 % |
| 4. | பழங்குடி வகுப்புகள் | 8.5 % |
| | **மொத்தம்** | **100 %** |

தீர்மானம் 2 :

பெரும்பாலான மாநில அரசுகளிலும் உள்ளது போன்று இந்திய அரசிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் சமுதாய, கல்வி, பொருளாதார நலன்களை மேம்படுத்தும் திட்டங்களை வகுக்கவும், அதற்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்து பெறவும் ஏதுவாகப் பிற்படுத்தப்பட்டோர் அமைச்சகம் (Ministry of Backward Classes) என்னும் பெயரில் தனியாக ஓர் அமைச்சகத்தை உடனடியாக இந்திய அரசினர் ஏற்படுத்த வேண்டும் என்று இம்மாநாடு கோருகிறது.

தீர்மானம் 3 :

1980இல் மண்டல் குழு பரிந்துரை செய்தபடி எல்லா அரசுத் துறைகளிலும் எல்லா அரசுப் பொதுத்துறை நிறுவனங்களிலும் கல்வியிலும் வேலையிலும் மற்றும் பெட்ரோல், டீசல் முகவர் நியமனங்களிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கீடு தரப்படுவது போலவே, வணிகம், வங்கிக்கடன், தொழில் முதலான எல்லாத் துறைகளிலும் பிற்படுத்தப்பட்டோருக்குத் தனி இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என இம்மாநாடு இந்திய அரசினரை வேண்டிக் கொள்கிறது.

தீர்மானம் 4 :

ஆங்கிலம் எல்லா இந்தியருக்கும் அந்நிய மொழி. நம் முன்னேற்றத்திற்குப் பயன்படும் என்பதால் எல்லா

இந்தியரும் ஆங்கிலம் கற்கிறார்கள். இந்தி பேசாத எல்லா மக்களுக்கும் இந்தி அந்நிய மொழி. இரண்டாவதாக இன்னொரு அந்நிய மொழியைக் கற்பது இந்தி பேசாத மக்களுக்குக் கூடுதலான சுமையாகும்.

எனவே, இந்திய அரசுப் பணிகளுக்கான தேர்வுகளை நடத்துவதற்கான அதிகாரம் படைத்த இந்திய அரசுப் பணிகளுக்கான தேர்வு ஆணையம் (Union Public Service Commission) நடத்தும் எல்லா வகைப் பணிகளுக்கான முதல்நிலைத் தேர்வு, இறுதித் தேர்வு இரண்டையும் எப்போதும் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ள 22 மொழிகளிலும் தேர்வர்கள் (Candidates) தேர்வு எழுதுவதற்கு முழு உரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும், இதற்கான நெறிமுறைகளை உடனடியாக வகுத்து இந்திய அரசுப் பணிகளுக்கான தேர்வு ஆணையம் வெளியிட வேண்டும் என்றும் இம்மாநாடு வலியுறுத்தி வேண்டிக் கொள்கிறது.

தீர்மானம் 5 :

இந்தியா முழுவதிலும் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள், பட்டியல் வகுப்பு மக்கள், பழங்குடி மக்கள் ஆகியோர் தங்களுடைய சொந்த மாநிலத்தை விட்டு வேறு மாநிலங்களில் குடி பெயர்ந்து வாழுகின்றனர். குடிபெயர்ந்து வாழுகின்ற மாநிலத்தின் இட ஒதுக்கீட்டுக்கான சாதிகளின் பட்டியலில் அவர்களுடைய சாதி இடம் பெற்றிராத காரணத்தால் அவர்கள் தங்களுக்குரிய சாதிச் சான்றிதழ் பெறமுடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

மேலும், சொந்த மாநிலத்திலும் அவர்களுக்குப் பங்கீட்டு அட்டை, வாக்காளர் அடையாள அட்டை போன்ற ஆவணங்கள் இல்லாததால் அங்கிருந்தும் அவர்களால் சாதிச் சான்றிதழ் பெற முடிவதில்லை. ஆதனால் அவர்கள் இட ஒதுக்கீட்டின் பலன்களைப் பெறமுடியாமல் பின்னுக்குத் தள்ளப்படுகின்றனர். இடம்பெயர்ந்து வாழ்வதால் அவர்களுடைய சமுதாயப் பிற்படுத்தப்பட்ட தன்மை மாறுவதில்லை.

எனவே, இட ஒதுக்கீட்டின் பட்டியல்களில் இடம் பெற்றுள்ள எந்த ஒரு உள்சாதிக்காரரும் அவர் வேறு எந்த ஒரு மாநிலத்துக்குக் குடிபெயர்ந்து வாழ்ந்தாலும் சொந்த மாநிலத்தில் அவர் எந்தப் பட்டியலில் இடம்பெற்று இருக்கிறாரோ அதே பட்டியலுக்குரிய சாதிச் சான்றிதழ், அவர் இடம் பெயர்ந்துள்ள மாநில அரசினராலும் மய்ய அரசினராலும் வழங்கப்பட்டு அதற்குரிய பலன்கள் கிடைத்திட மய்ய அரசு ஆவன செய்ய வேண்டும். இது நிறைவேற ஒவ்வொரு மாநில அரசும் தங்கள் தங்கள் மாநில மக்களின் இன்னல் களைய மய்ய அரசுக்கு இது குறித்து எழுதி உரிய நட வடிக்கை எடுக்கப்பட ஆவன செய்ய வேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

தீர்மானம் 6 :

பிற்படுத்தப்பட்டோராக உள்ளவர்கள் ஏறக்குறைய 57 விழுக்காட்டினர் ஆவர். இவ் வகுப்பினர் பெரியார் ஈ.வெ.இராமசாமி, டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர், டாக்டர் ராம் மனோகர் லோகியா ஆகியோரின் வழிநின்று இம்மா நாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள எல்லாத் தீர்மானங்களையும் எல்லா வகுப்பு மக்களிடமும் விளக்கிக் கூறி விழிப்புணர்வை உண்டாக்கிட ஆர்வத்துடன் முன்வர வேண்டுமென்றும், பிற்படுத்தப்பட்டோர் எல்லோரும் ஒன்று திரண்டு கோரிக்கைகள் நிறை வேற்றப்படும் வரையில் போராடவேண்டுமென்றும் முற்பட்ட வகுப்பினர் எல்லோரும் இம் மாநாட்டின் கோரிக்கைகளில் உள்ள நியாயங்களை உணர்ந்து அவர்கள் எல்லோரும் இக் கோரிக்கைகள் முழுவதுமாக நிறைவேற்றப்பட மனமுவந்து ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் இம்மாநாடு வேண்டிக் கொள்கிறது.

தீர்மானம் 7 :

தமிழ்நாட்டுப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள உள்சாதிகளுக்கு இப்போது 30% இடஒதுக்கீடு அளிக்கப் படுகிறது. இந்த உள்சாதிகளில் போதிய பிரதிநிதித்துவம் பெறாமல் உள்ள முத்தரையர், கம்மாளர், யாதவர் ஆகிய மூன்று உள்சாதிகளையும் தனித்தொகுப்பாக ஆக்கி அவர்களின் மக்கள் தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப அவர்களுக்கு உள் ஒதுக்கீடு அளிக்க வேண்டு மென்று தமிழ்நாட்டு அரசை இம்மாநாடு வேண்டிக் கொள்கிறது.

மேலும், தமிழ்நாட்டு மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள உள்சாதிகளுக்கு இப்போது 20% இடஒதுக்கீடு அளிக்கப்படுகிறது. இந்த உள்சாதிகளில் இதுவரையில் போதிய பிரதிநிதித்துவம் பெறாமல் உள்ள வண்ணார், மருத்துவர், குலாலர், மீனவர், வலையர், ஒட்டர், அம்பலக்காரர், குரும்பர் ஆகிய 8 உள்சாதிகளை ஒரு தொகுப்பாக ஆக்கி அவர்களின் மக்கள் தொகை விகிதாசாரத்திற்கேற்ப அவர்களுக்கு உள் ஒதுக்கீடு அளிக்க வேண்டுமென்று தமிழ்நாட்டு அரசை இம் மாநாடு வேண்டிக் கொள்கிறது.

தீர்மானம் 8 :

“இந்தியா முழுவதிலுமுள்ள 412 பொது மருத்துவக் கல்லூரிகளிலும் உள்ள பொது மருத்துவம் என்கிற MBBS மற்றும் 309 பல் மருத்துவக் கல்லூரிகளிலும் உள்ள பல் மருத்துவம் என்கிற BDS ஆகிய படிப்புகளில்

சேர அனைத்திந்திய அளவில் பொது நுழைவுத் தேர்வு" என்கிற பாரதிய சனதா அரசின் முடிவை ஏற்று, இந்திய உச்சநீமன்றத்தின் 5 நீதிபதிகளைக் கொண்ட அரசியல் சட்ட அமர்வு, பொது மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் படிக்க விரும்புகிற இந்தியாவிலுள்ள எல்லா மாணவர்களும் கட்டாயம் அனைத்திந்திய அளவிலான பொதுநுழைவுத் தேர்வு எழுதித் தீரவேண்டும்; அதனடிப்படையில் மட்டுமே இந்தியா முழுக்க இந்த மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கை நடைபெற வேண்டும் என 09-05-2016 அன்று அதன் இறுதித் தீர்ப்பாகக் கூறிவிட்டது.

இந்தத் தீர்ப்பு இந்தியா முழுவதிலுமுள்ள 85% பேராக இருக்கிற எல்லா மதங்களையும் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் ஆகிய எல்லோருக்கும் எதிரானதாகும். எப்படி எனில், 12ஆம் வகுப்பு மதிப்பெண் தரவரிசைப் பட்டியல் அடிப்படையில் சேர்ப்பதை அடியோடு விடுத்து நுழைவுத் தேர்வில் பெறுகிற மதிப்பெண்ணை மட்டும் கொண்டு தரவரிசைப்படுத்தி மாணவர் சேர்க்கை நடைபெறும்போது அனைத்திந்திய அளவிலான இடஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றினாலும்கூட, பொதுப்போட்டிக்கான 50 இடங்களில் ஏறக்குறைய முழுவதுமாக மக்கள் தொகையில் 15% பேராக உள்ள மேல்சாதியினருக்கே கிடைத்துவிட இந்தத் தீர்ப்பு வழி செய்துவிட்டது. இது சமூக நீதிக்கும் மனித உரிமைக்கும் எதிரான கொள்கையை நிறைவேற்றிக்கொள்ளவும் மருத்துவத்துறையில் மேல்சாதி ஆதிக்கத்தினைத் தொடர்ந்து நிலைநிறுத்திக் கொள்ளவும் தீய உள்நோக்கத்துடன் வழங்கப்பட்ட தீர்ப்பாகும் என்று அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவை திடமாகக் கருதுகிறது.

தமிழகத்தில் உள்ள ஒடுக்கப்பட்டோர் உரிமைக் காப்பில் அக்கறை கொண்ட ஒவ்வொரு அமைப்பும், மருத்துவக் கல்விக்கான பொதுநுழைவுத் தேர்வை எதிர்ப்பது என்பதில் தனித்தனியாகச் செயல்பட்டு பரப்புரை செய்வது, கிளர்ச்சிகள் செய்வது என்பதை அன்புகூர்ந்து தவிர்த்து, இதில் அக்கறை உள்ள எல்லாப் பெரிய, சிறிய அமைப்புகளும் மற்றும் மாணவர் இளையோர் அமைப்புகளும் குறிப்பிட்ட ஓர் நாளில் குறிப்பிட்ட ஓர் இடத்தில் கூடி விவாதித்து, மத்திய அரசு சட்டத் திருத்தம் கொண்டுவந்து இந் நுழைவுத்தேர்வு முறையை இரத்து செய்கிறவரை தொடர்ந்து போராட முன்வரவேண்டும் என இம் மாநாடு கோருகிறது.

❖

## மேனாள் பிரதமர் வி.பி.சிங் பிறந்தநாள் விழா



மேனாள் பிரதமர் வி.பி.சிங் பிறந்தநாள் விழா முற்போக்கு சமூக நீதிப்பேரவை சார்பாக 26-6-2016 ஞாயிறு காலை 10 மணிக்கு, காஞ்சிபுரம் அடுத்த அப்துல்லாபுரத்தில் ரிஸ்க் உரையரங்கில் க.கோதண்டன் தலைமையில் நடைபெற்றது.

வான்மதி முருகன் வரவேற்புரையாற்றினார். டாக்டர் விமுனாமூர்த்தி தொடக்கவுரையாற்றினார். திராவிடர் இயக்கம் ஒளிவிளக்கா? ஊன்றுகோலா? என்ற தலைப்பில் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி நடைபெற்றது. பேச்சுப் போட்டியின் நடுவர்களாக புஞ்சை வில்லவன், வழக்குரைஞர் இரா.இராசு ஆகியோர் மதிப்பெண் வழங்கினர்.

மாணவர்களுக்குப் பரிசினை வழங்கி வாலாசா வல்லவன் சிறப்புரையாற்றினார். இறுதியாக தோழர் துர்க்காதாஸ் நன்றியுரைடன் விழா இனிதே முடிவுற்றது.


**தலைநகர் சென்னையில்**
**உங்கள் வீட்டிற்கப்பால் இன்னொரு வீடு..!**

**NEW ERA WOMEN'S HOSTEL**
**புதுயுகம் மகளிர் விடுதி**

72/40, ஓ.வி.எம். தெரு, சேப்பாக்கம், சென்னை–5.

தங்கும் வசதி :
**நாள்-வார-மாத அடிப்படையில்..!**

இடவசதி :
**நால்வர் - மூவர் - இருவர் - தனியறை**

உணவு : **சைவம் /அசைவம்**

**தொடர்பிற்கு : 044 28 51 50 51,**
**08122 821 595, 90 940 155 00.**

காண்க :
Facebook.com / Chennai New Era Hostel
மின்னஞ்சல் : newerabava@gmail.com

**வெற்றிகரமான 14வது ஆண்டில் உங்களை அன்புடன் வரவேற்கிறோம்.**

கட்டுரைத் தொடர்-41

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்

**இந்தி எதிர்ப்பு :**
**பெண்கள் மறியல்போர்!**

சென்னை, (1938) நவ.11, இன்று காலை 10 மணிக்கு சென்னை இந்து தி லாஜிகல் பள்ளி முன் மறியல் செய்த தோழர்கள், டாக்டர் எஸ்.தருமாம்பாள், மூவலூர் இராமாமிர்தத்தமையார், மலர்முகத்தம்மை யார், சீதாம்மாள் (தருமாம்பாள் அவர்களின் மருமாள் தனது மூன்று வயது, 1 வயது உடைய மங்கையர்க் கரசி, நச்சிநார்க்கினியன் ஆகிய இரு குழந்தைகளுடன்), பட்டு அம்மாள் (திருவாரூர் பாவலர் பாலசுந்தரம் மனைவி) ஆகிய தாய்மார்களும், பல்லடம் தோழர் களான பழனியப்பா, பிஸ்மில்லா சாகிப் ஆகியவர் களும் கைது செய்யப்பட்டனர்.

தாய்மார்கள் மறியல் செய்வதற்கு முன் பெத்து நாயக்கன்பேட்டை காசி விசுவநாதர் கோயில் முன் பிருந்து 9 மணிக்கு ஊர்வலமாகப் புறப்பட்டனர். ஊர்வலம் புறப்படுமுன் தாய்மார்கட்கும், தொண்டர்களுக்கும் ஏராளமான மாலைகள் சூட்டப்பட்டன. அங்கிருந்து 'இந்தி ஒழிக', 'தமிழ் வாழ்க' 'தாய்மார்கள் வாழ்க' 'பெண்ணுலகுதழைக்க' என்ற பேரொலிகளினிடையே 10000 மக்கள் சூழ, தங்கசாலைத் தெரு வழியே ஊர்வ லமாக வந்தனர். தாய்மார்கள் அனைவரும் தமிழ்க் கொடி சேலை அணிந்து, செந்தமிழைக் காப்பதற்குச் சேனை', 'வாரீர் தமிழ்ப்பெண்காள் இந்தியை எதிர்க்க' என்ற தமிழ்ப் பாடல்களைப் பாடிக்கொண்டு வந்தனர். வழிநெடுகத் தாய்மார்களை நிறுத்தி மாலைகளிடப் பட்டன. தாய்மார்கள் பள்ளிக்கூடத்தின் முன் வருகை யில் மக்கள் கூட்டம் சமாளிக்க முடியாததாயிற்று. போக்கு வரத்துகள் தடைப்பட்டன. ஒரு 5 நிமிடம் 'தமிழ் வாழ்க', 'இந்தி ஒழிக' என்று கூறிக்கொண்டு தமிழ்ப் பாடல் களையும் பாடிக்கொண்டு நின்றனர். இவர்கள் வரு முன்பே சப்இன்ஸ்பெக்டர்களும், ஏராளமான போலீசும் தயாராகக் காத்திருந்தனர். உடனே ஒரு சப்இன்ஸ் பெக்டர் முன்வந்து நீங்கள் இவ்விடத்தை விட்டுப் போய்விடவேண்டும். போக்குவரத்துக்குத் தடைபடு கின்றது. உங்களை எச்சரிக்கின்றேன் என்று கூறினார்.

இந்தி ஒழிந்தாலொழிய நாங்கள் போகமாட்டோம் எனத் தாய்மார்கள் கூறினர். அப்படியானால் நீங்கள் ஸ்டேஷனுக்கு வரவேண்டும். இன்ஸ்பெக்டர் ஜெனரல் உத்தரவு; உங்களை அழைக்கின்றார் என்றார்.

சரியெனப் புறப்பட்டனர். உடனே நூற்றுக்கணக் கான பெண்கள் முன்வந்து 'தமிழ் வாழ்க' 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று பொறிக்கப் பட்டிருந்த தட்டுகளில் ஆரத்தி எடுத்து, மாலையிட்டு வாழ்த்தி வழியனுப்பினர். சப்இன்ஸ்பெக்டர், காரில் ஏறுங்கள் என்று கூறிய தை மறுத்து நடந்தே ஆனை கவுனி போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றனர். தாய்மார்களைக் கைது செய்துவிட்டனர் என்று தெரிந்ததும், அங்குநின்று உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கியிருந்த ஆண்களும் பெண்களும் கைதட்டி, வாழ்த்தொலி செய்தனர்.



போலீஸ் ஸ்டேஷனில் இவர்களிடம் கையெழுத்து வாங்கி, கோர்ட்டுக்குக் கொண்டு போகும் வரையில் கூட்டத்தினர் ஒரு சிறிதும் கலையாது ஸ்டேஷனைச் சுற்றி கோஷமிட்டுக் கொண்டே நின்றனர்.

பின்னர் கோர்டிற்குப் போகக் காரில் ஏறும் போதும் மக்கள் ஆராவாரித்தனர். உடனே டாக்டர் எஸ்.தருமாம் பாளும், மூவாலூர் இராமாமிர்தத்தம்மாளும் அனை வரையும் கைகூப்பி வணங்கி "இன்று இந்தியை ஒழிக்கச் செல்கின்றோம் இந்தி ஒழியும் வரையில் நீங்கள் உங்கள் கடமைகளைத் தவறாது செய்ய வேண்டும்" என்று கூறினர். ஜனங்கள் இராமாமிர்தம் வாழ்க! தருமாம்பாள் வாழ்க! மலர் முகத்தம்மை வாழ்க! சீதாம்மாள் வாழ்க! பட்டு அம்மாள் வாழ்க! இந்தி ஒழிக! என ஆரவாரித்தனர். சென்னைத் தமிழ் மக்களின் உணர்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்தது ஓடியதை எழுத என் பேனாவுக்குச் சக்தியில்லை.

பின்னர் தாய்மார்களும் இருதொண்டர்களும் ஜார்ஜ் டவுன் போலீஸ் கோர்ட்டிக்குக் கொண்டு போகப் பட்டனர். காலை 11.30 மணிக்கு நீதிபதி தோழர் வெங்கட ராமையர் அவர்களால் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர், இப்பெண்கள் ஐவரும், தொண்டர்கள் இருவரும் பொதுமக்களின் போக்குவரத் திற்கு இடையூறாகவும், சென்னை அரசாங்கத்தார் கொண்டு வந்துள்ள கட்டாய இந்தியை எதிர்ப்பதின் அறிகுறியாகவும் இன்று காலை 10 மணிக்கு இந்து தியாலாஜிக்கல் பள்ளியின் முன் நின்று 'இந்தி ஒழிக' 'தமிழ் வாழ்க' 'ஆச்சாரியார் ஆட்சி ஒழிக' 'பார்ப்பன சூழ்ச்சி ஒழிக' எனக் கூறி மறியல் செய்ததாகக் கூறினார்.

பின்னர் சப்இன்ஸ்பெக்டர் சாட்சியத்தில் கூறிய தாவது:

இவர்கள் எழுவரும் இன்று காலை ஊர்வலமாக வந்து இந்து தியாலாஜிக்கல் பள்ளிமுன் நின்று 'தமிழ் வாழ்க' 'இந்தி ஒழிக' 'பார்ப்பன சூழ்ச்சி ஒழிக' 'ஆச் சாரியார் ஆட்சி ஒழிக' எனக்கூறிக்கொண்டு மறியல் செய்தனர். இதனால் பெரும் கூட்டம் கூடிவிட்டது. போக்குவரத்துத் தடைப்பட்டது.

இதனால் பள்ளியிலுள்ள பையன்களெல்லாம் வேடிக்கை பார்க்க வகுப்பைவிட்டு வெளியே வந்து விட்டனர். மேலும், பையன்கள் உடனே போகவோ, வெளியில் வரவோ முடியாமல் போயிற்று. நான் இங்கு நிற்கக் கூடாததென எச்சரித்தும், இந்தி ஒழியும் வரை போகமாட்டோம் எனக்கூறினர். எனவே உடனே நான் கைது செய்தேன்."

நீதிபதி : சாட்சி கூறியது எல்லாம் சரிதானா?

தருமாம்பாள் : சில உண்மை இருக்கிறது. சில தவறாகவும் கூறுகிறார். நாங்கள் இந்தி ஒழிக! தமிழ் வாழ்க! என்று கூறினோமேயொழிய பார்ப்பன சூழ்ச்சி ஒழிக! என்றோ, ஆச்சாரியார் ஆட்சி ஒழிக! என்றோ கூறவில்லை. அப்படி நாங்கள் சொன்னோம் என்று தவறாகக் கூறுவாரானால், அதைப்பற்றி நாங்கள் என்ன சொல்லுவது? இப்பவும் கூறுகின்றோம். இந்தி ஒழியும் வரை இதேபோல் கூச்சல் போடத்தான் செய்வோம். இதனை எங்களைக் கைது செய்யுமுன் சப்இன்ஸ்பெக்டரிடத்தும் கூறியுள்ளோம்.

இராமாமிர்தம் : எங்களுக்குத் தாய்மொழியாகிய தமிழ்தான் பொது மொழியாயிருக்க வேண்டும். நாங்கள் எங்கள் உரிமைக்காகப் பாடுபடுகிறோம். இதற்குக் கூட இந்த அரசாங்கத்தில் இடமில்லையென்றால் நாங்கள் எப்படி வாழ்வது! நாங்கள் 'தமிழ் வாழ்க' 'இந்தி ஒழிக' என்றுதான் கூறினோமே ஒழிய, வேறொன்றும் கூறவில்லை.

மலர்முகத்தம்மை : தமிழ்நாட்டில் தமிழ்தான் தழைக்க வேண்டும். இந்தி ஒழிய வேண்டும். இது இரண்டு தான் எங்கள் நோக்கம்.

சீதாம்மாள் : தமிழ் வாழவும், இந்தி ஒழியவும் வேண்டும்.

பட்டுஅம்மை : தமிழ் வாழ்க, இந்தி ஒழிக இதுதான் எங்கள் கடமை.

இரு தொண்டர்களும் தங்கள் கருத்தும் அவ்வாறே என்றனர்.

நீதி : சப் இன்ஸ்பெக்டர் உங்களைப் போகச் சொன்ன போது, மாட்டேன் என்றீர்களா?

தாய்மார்கள் : ஆம்!

நீதி:எதுவரை போகமாட்டீர்கள்; ஆனால் அங்கேயே இருக்கவேண்டும். நிற்கவேண்டுமென்பது உங்கள் கருத்தா

தருமாம்பாள் : இந்தி ஒழியும் வரை சதா இங்ஙனம் வந்து கொண்டு தானிருப்போம்.

நீதி : ஒரு பாஷையை ஒழிக்கமுடியுமா?

தருமாம்பாள் : இல்லை. எங்கட்கு இந்தி கட்டாய பாடமாக இருத்தல் கூடாது என்பதே.

நீதி : உங்கட்கு வேண்டுமானால் நீங்கள் படிக்க வேண்டாம். படிக்கின்றவர்களை நீங்கள் ஏன் தடுக்க வேண்டும்?

தருமாம்பாள் : தமிழர்கள் எல்லோரும் படிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தினால்......

நீதி : இஷ்டப்பட்டவாளை ஏன் தடுக்கவேண்டும். வேண்டியவர்கள் படித்துக் கொள்ளட்டுமே!

தருமாம்பாள் : இந்தியை யார் வேண்டுகிறார்கள் என்பதை ஓட்டுக்கு விடச்செய்யுங்கள்.

நீதி : மற்றவர்கள் படிக்க வேண்டாமென்பதில் உங்களுக்கு என்ன சிரத்தை?

தருமாம்பாள் : மற்றவர்கள் மட்டுமல்ல, பொது வாகத் தமிழர்கட்கே அவர்கள் சந்ததிக்கே இந்தி வந்தால் நிச்சயம் கெடுதல் உண்டாகும். இதற்குத் தாய் தந்தையர்கள் ஆவன செய்யவேண்டாமா?

நீதி : அதற்குப் பள்ளிக்கூடத்தின் முன் நின்று சத்தம் போடுவானேன்.

தருமாம்பாள் : இந்தி வந்தால் தமிழர்கட்குக் கெடுதல் உண்டாகும் என்பதை ஒவ்வொரு வீட்டிற்கும் போய்ச் சொல்லமுடியாது. இதுமாதிரி ஒரு ஊர்வலமாக வந்து கிளர்ச்சி செய்தால், தமிழர்கள் இதற்காவன செய்வார்கள். அரசியலாரும் தங்கள் தவறை உணர் வார்கள். இதற்காக நாங்கள் ஊர்வலமாக வந்து பள்ளி யின் முன் மறியல் செய்தோம்.

நீதி : இதைவிடுத்து, வேண்டுமானால் ஒவ்வொரு வர் வீட்டிற்கும் போய் கத்துங்களேன்!

தருமாம்பாள் : எங்களுக்கு எல்லோருடைய வீடுகளும் சரியாகத் தெரியாது. தயவு செய்து தாங்கள் ஒரு லிஸ்டு கொடுத்தால் அவ்வாறு செய்வோம்.

நீதி : உங்களுக்கு ஏதாவது சாட்சிகள் உண்டா?

தருமாம்பாள் : இந்த அரசியலில் எங்களுக்கு சாட்சி எங்கு கிடைக்கும். பொதுவாக இங்கு கோர்ட்டிற்கு வந் திருக்கும் ஆயிரக்கணக்கான மக்களும் சாட்சிகள்தான்.

இராமாமிர்தம் : எங்களைப் பாதுகாக்கவேண்டிய அரசாங்கமே இவ்வாறு செய்தால் நாங்கள் என்னதான் செய்யமுடியும்?

பிராசிகூட்டிங் இன்ஸ்பெக்டர் கூறியதாவது : நீங்கள் செய்தது தவறு என்று உணர்ந்து இனி இது போல் செய்யவில்லையென்று கூறினால் உங்களை மன்னித்து விடுவதாகச் சொல்லுகிறார் நீதிபதி.

தருமாம்பாள் : அதற்காக நாங்கள் இங்கு வர வில்லை.

இராமாமிர்தம் : எங்கள் தாய்மொழியை வேண்டா மென்று சொல்லச் சொல்லுகின்றீர்களா? அது முடியாது.

நீதிபதி : எனது கடமைமையச் சொன்னேன். ஆனால் எனக்கு முன்பே தெரியும் நீங்கள் சொல்ல மாட்டீர்களென்பது.

தாய்மார் அனைவரும் : எங்கள் தாய் மொழிக்காக - உரிமைக்காகப் போராடினோம். தவறு செய்தா லல்லவா மன்னிப்புக்கேட்க வேண்டும். நாங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லையே.

பின்னர் பிராசிகூட்டிங் இன்ஸ்பெக்டர் தொண்டர் களை நோக்கி ‘‘நீங்கள் உங்கள் செய்கை தவறான தென்று உணர்கின்றீர்களா? உணர்ந்தால் உங்கள் ரயில் சார்ஜுக்குக் கூட பணம் கொடுத்து அனுப்புவோம்.

தொண்டர்கள் : நாங்கள் அதை விரும்பவில்லை. தாய்மொழி தான் எங்கட்கு முக்கியமானது.

பின்னர், நீதிபதி தாய்மார் ஐவர்க்கும் 50 ரூபாய் அபராதம் அல்லது 6 வாரம் வெறுங்காவல் என்றும், தொண்டர்கள் இருவருக்கும் 50 ரூபாய் அபராதம் அல்லது 6 வாரம் கடுங்காவல் என்றும் தீர்ப்புக் கூறினார்.

தாய்மார்களும், தொண்டர்களும் சிறைத் தண்ட னையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டனர். தாய்மார் ஐவரில் தோழர் சீதம்மாள் தன்னிரு குழந்தைகளுடன் சென்றார். அதைக்கண்ட அன்னாரின் மூத்த மகன் 3-வது குழந்தை வயதுடையவன் அழ ஆரம்பித்தான். உடனே தோழர் சீதாம்மாள் அவர்கள் அவனைத் தூக்கித் தேறுதல் கூறி பயப்படாமிலிரு நான் சீக்கிரம் வந்து விடுகிறேனென்று கூறிச்சென்றார். இக்காட்சி யைக் கண்டோர் அனைவரும் கண்ணீர் விட்டனர். இன்று கோர்ட்டில் இவ்வழக்கைக் கவனிப்பதற்காக, தலைவர் தோழர் ஈ.வெ.ரா., காஞ்சி பரவஸ்து ஆச்சாரியார், அருணகிரிநாதர் ஆகியோர் உள்ளிட்ட பன்னூற்றுக் கணக்கான மக்கள் வந்திருந்தனர். எல் லோரையும் கோர்ட்டில் அனுமதிக்காததால் பல்லாயிரக் கணக்கான மக்கள் வெளியில் நின்று பலவாறு கோஷ மிட்டுக் கொண்டே இருந்தனர்.

**(குடிஅரசு, 20-11-1938)**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## 8 தாய்மார்கள் கைது

### பச்சிளங் குழந்தைகளுடன் சென்ற பரிதாபக் காட்சி

நவம்பர் 20, இன்று காலை 10.30 மணிக்குச் சென்னை இந்து தீயாலாஜிக்கல் பள்ளி முன் மறியல் செய்த தாய்மார்களான திருவாட்டிகள் மாஜி ‘திராவிடன்’ ஆசிரியர் பண்டிதர் எஸ்.எஸ்.அருணகிரிநாதர் துணைவியார் திருவாட்டி உண்ணாமுலையம்மாள் தனது தமிழரசி என்ற ஒரு வயது பெண் குழந்தை யுடன்; என்.வி.நட ராஜன் துணைவியார் புவனேசுவரி அம்மாள் தனது சோமச்சுந்தரம் என்னும் ஒன்றரை ஆண்டுக் குழந்தையுடன்; டி.வி.முருகேசம் துணைவி யார் சிவசங்கரி அம்மையார் தனது லோகநாயகி என்னும் ஒன்றரை வயதுக் குழந்தையுடன்; வி.என். தேவசுந்தரம் துணைவியார் சரோஜினி அம்மையார் மார்த்தாண்டம் என்ற தனது 2 வயதுக்குகுழந்தை யுடன்; டாக்டர் சிற்சபையின் துணைவியாரும் சிறை சென்ற தாய் டாக்டர் எஸ்.தர்மாம்பாள் அவர்களது மருமகளுமான சரஸ்வதி என்னும் கலைமகளம்மை யார்; பி.கோவிந்தராஜுலுவின் துணைவியார் ஞான சுந்தரி அம்மையார் தனது விமலா என்னும் 2 வயதுக் குழந்தையுடன்; சதுரங்கப் பட்டணம் தனக்கோடியம் மையார் ஆகிய எண்மரும், தொண்டர்களான சேலம் அம்மாபேட்டை சி.மு.ப. மாரியப்ப முதலியார், விருது நகர் வி.எம்.சங்கரலிங்கம் ஆகிய இருவரும் போலீ சாரால் பதினாயிரக்கான மக்கள் முன் கைது செய்யப் பட்டனர்.

தாய்மார்களும், தொண்டர்களும் கைது செய்யப் படுவதற்கு முன் காலை 10 மணிக்கு பெத்துநாயக்கன் பேட்டை கிருஷ்ணன் குளத்தையடுத்த காசிவிசுவ நாதர் கோயில் முன்பிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டனர். ஊர்வலத்தின் ஆரம்பத்திலேயே இன்று பெண்கள் மறியல் செய்யப் போகிறார்கள் என்பதையறிந்து பல்லா யிரக்கணக்கானப் மக்கள் ஆண்களும், பெண்களு மாகக் கூடிவிட்டனர். பெண்கள் எண்மருக்கும் தொண்டர் எண்மருக்கும் தொண்டர் இருவருக்கும் ஏராளமான மாலைகள் போடப்பட்டன. ஒரு புகைப்படமும் எடுக்கப் பட்டது. சில பெண்கள், தேவாரப் பண்களைப் பாடித் தாய்மார்களை மகிழ்ச்சியுடன் வழியனுப்பினர். ஒரு தொண்டர், தமிழ்க்கொடியை ஏந்தி ஊர்வலத்தின் முன் வந்தார். ஆரவாரமான கைதட்டலிடையேயும் ‘தமிழ் வாழ்க’ ‘தாய்மார்கள் வாழ்க’ ‘தமிழ்நாடு தமிழருக்கே’ ‘இந்தி வீழ்க’ என்ற பேரொலியினிடையேயும் ஊர்வலம் புறப்பட்டது. தார்மார்கள் வெற்றி வெற்றி’ என்ற வெற்றிப் பாடலையும் பாடிக்கொண்டுவந்தனர். ஊர்வலம் தங்க சாலைத் தெருவழியே தியாலாஜிக்கல் பள்ளியருகில் வந்ததும் அங்கு நின்றிருந்த பல்லாயிரக் கணக்கான

மக்கள் கைதட்டித் தாய்மார்களை வரவேற்றனர். பள்ளியின்முன் நின்ற கூட்டம் சமாளிக்க முடியாததாயிற்று. தாய்மார்கள் 10 நிமிடம் 'இந்தி வீழ்க', 'தமிழ் வாழ்க' என்று கூறிக்கொண்டும் பாடல்களைப் பாடிக்கொண்டும் நின்றனர். உடனே சப்இன்ஸ்பெக்டர் தாய்மார்களையும் தொண்டர்களையும் கைது செய்தார். கைது செய்யும் நிலையில் மக்கள் காட்டிய உணர்ச்சி, ஊக்கம் கை தட்டுதல் வரம்பு கடந்ததாயிருந்தது. பின்னர் ஆனை கவுனி போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்று அங்கிருந்து 11.30 மணிக்கு ஜார்ஜ் டவுடன் கோர்ட்டிற்குக் கொண்டுவரப்பட்டனர். கோர்ட்டிலும் கோர்ட்டிற்கு வெளியிலும் மக்கள் கூட்டம் ஏராளமனதாயிருந்தது.

நீதிபதி : தோழர் வெங்கட்ராமையர் முன்னிலையிலும் விசாரணை நடைபெற்றது. சப் இன்ஸ்பெக்டர் தனது சாட்சியத்தில், இவர்கள் இன்று காலை 10.30 மணிக்குத் தியாலாஜிகல் பள்ளியின் முன் கட்டாய இந்தியை எதர்ப்பதன் அறிகுறியாக நின்று இந்தி ஒழிக! தமிழ் வாழ்க! எனக் கூச்சலிட்டனர். அதனால் பள்ளிக் கூடம் நடப்பதற்கும், மாணவர் உள்ளே வெளியே செல்வதற்கும் தடைப்பட்டது எனக் கூறினார்.

தாய்மார்களும் தொண்டர்களும் தாங்கள் குற்றவாளிகள் அல்லவென்றும் தங்கள் தாய்மொழிக்காப் போராடினோமென்றும், இந்தி ஒழியும்வரை தாங்கள் அயரப்போவதில்லை என்றும், தாங்கள் ஒன்றும் சொல்லிக்கொள்வதற்கில்லை என்றும் இந்த ஆட்சியில் எங்களுக்குச் சாட்சிகள் தாங்களேயன்றி வேறு யாருமில்லையென்று கூறினார்கள்.

பின்னர் நீதிபதி சார்பாகப் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் தாய்மார்களை நோக்கி, நீங்கள் சிறு குழந்தைகளுடன் இருக்கின்றீர்கள், சிறை துன்பமானது, உங்கள் புருஷர்கள் வருந்துவார்கள். இனி இவ்வாறு செய்யவில்லையென்றால் உங்களை மன்னித்துவிடுகிறோம் என்பதாகக் கூறினார்.

உடனே தாய்மார்கள் நாங்கள் அதற்காக இங்கு வரவில்லை. எத்தகைய கஷ்டத்தையும் எங்கள் மொழி, நாடு முன்னேற்றத்திற்காக அனுபவிக்கத் தயாராயிருக்கிறோம். இவ்விஷயத்தில் தலையிட எங்கள் புருஷர்களுக்கு உரிமையில்லை. அவர்கள் அப்படித் தலையிடுகிறவர்களுமல்ல எனத் தெரிவித்தனர்.

பின்னர் பிராசிகூடிங் இன்ஸ்பெக்டர் தொண்டர்களை நோக்கி ரயில் சார்ஜ் கொடுக்கப்படும் உங்கள் குற்றத்தை உணர்ந்தால் எனக் கூறினார்.

தொண்டர் : நாங்கள் கொலை, திருட்டில் சம்பந்தப்பட்டவர்களல்ல. தாய்மொழிக்காகப் பாடுபடுகிறோம். ரயில் சார்ஜை விரும்பி நாங்கள் வரவில்லை.

பின்னர் நீதிபதி தாய்மார் எண்மருக்கும் தலா ஆறுவாரம் வெறுங்காவல் அல்லது 50 ரூபாய் அபாரதமென்றும், தொண்டர்களிருவருக்கும் 6 வாரம் கடுங்காவல் அல்ல 50 ரூபாய் அபராதம் என்றும் தீர்ப்பளித்தார்.

தாய்மார்களும் தொண்டர்களும் தண்டனையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்கள்.

கோர்ட்டில் நடவடிக்கையைக் கவனித்து வந்த தோழர் சி.பாசுதேவ் எழுந்து, தாய்மார்கள் சிறை செல்லும்வரை ஒவ்வொருவர் கையிலும் சிறு குழந்தைகள் இருப்பதால் சரியாக உணவளிக்க வேண்டுமென்றும் வாரண்டு வரும் வரை இங்கேயே வைக்க வேண்டுமென்றும் கூறினார்.

நீதிபதி வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு வெளியில் நிற்கும் கூட்டத்தைச் சமாளிப்பது முடியாததாகையால் தாய்மார்களை இங்கேயே வைக்கமுடியாது, ஆனால் உணவு வசதிகள் கவனிக்கப்படும் என்று கூறினார்.


பசியால் தாய்மார்களின் கையிலிருந்து குழந்தைகள் அழத்தொடங்கின. இதைப்பார்த்த கோர்ட்டிலிருந்த மக்களனைவரும் போலீஸ் உத்தியோகதஸ்கர்கள் உள்ளிட்ட அனைவரும் கண்ணீர் விட்டனர்.

இரவு வரை தாய்மார்கள் இங்கேயே இருப்பார்கள். இரவு 9.30 மணிக்கு வேலூருக்குக் கொண்டு போகப்படுவார்களெனத் தெரிகிறது.

**(குடிஅரசு, 27-11-1938)**

**- தொடரும்**

## எஸ்.வி.இராஜதுரை ஆவணப்படம் வெளியீட்டுவிழா



மார்க்சியத் தத்துவத்திற்கும்-பெரியாரியல் தத்துவத்திற்கும் சிறந்த பங்களிப்பை வழங்கிய தோழர் எஸ்.வி. ராஜதுரை அவர்களைப் பற்றிய ஆவணப் படம் திரையிடல் நிகழ்வு, 4-6-2016 சனி மாலை 5.30 மணிக்கு மாம்பலம் சந்திர சேகர் திருமண மண்டபத்தில் நடைபெறுவதாக இருந்தது. காவல்துறை அனுமதி மறுப்பு காரணமாக, திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் ஒருவரின் வீட்டு மாடியில் நடைபெற்றது. கணக்குறிஞ்சி (ஆவணப்பட இயக்குநர்) அறிமுக உரையாற்றினார். தோழர்கள் கொளத்தூர் மணி ஜி.இராமகிருஷ்ணன், கு.இராமகிருஷ்ணன், பாலசுந் தரம், அ.குமரேசன், பொழிலன், வ.கீதா, வீ.அரசு, ஆதவன் தீட்சண்யா, செழியன், இன்குலாப், டிராஸ்கி மருது, புனித பாண்டியன், கோவை ஞானி சதிஸ் உட்பட பலர் உரையாற்றினர்.

# ‘ஈ.வெ.ராம சகாப்தம்’ என முதன் முதல் பதிவு செய்தவர் அருப்புக்கோட்டை சூ.ஆ.முத்துநாடார்




**சுயமரியாதைத் தோற்றம்**

நம் பாரத நாட்டிலுள்ள மக்களனைவரையும் அரசியல் வாழ்க்கையிலும் சமுதாய வாழ்க்கையிலும் மேன்மையுடன் விளங்கச் செய்வதற்காக அமைந்துள்ள காங்கிரஸ், சுயராஜ்யா, ஹோம்ரூல், தென்னிந்திய நலவுரிமைச்சங்கம், ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம், தியாசபிக்கல் சங்கம், ஆசார சீர்திருத்த சங்கம் முதலிய பல ஸ்தாபனங்களைப் போல, மக்களை சமுதாய அரசியல் வாழ்க்கையில் புனிதமடையச் செய்யும் பெரும் ஸ்தாபனமாகவே சுயமரியாதைத் தோற்றம் நமது நாட்டிற் காணப்படுவதுடன், இந்து, வைணவ, புத்த, சமண, சீக்கிய, கிறிஸ்தவ, முகம்மதிய மத ஸ்தாபனங்களனைத் தையும், அன்பையும் விருத்தி செய்யும் சுயமரியாதை மதமாகவும் செங்கற்பட்டில் சுடரொளி வீசப்பெற்றது. இச்சுயமரியாதையின் தாதாவாகிய ஈ.வெ.ராமன் ஆணுக்காணாகவும், பெண்ணுக்குப் பெண்ணாகவும், பெரியாருக்குப் பெரியாராகவும், பாலருக்குப் பாலராகவும், வாலிபருக்கு வாலிபராகவும், சர்வசக்தி வானாகவும், புதிய அவதாரப் புத்தராகவும் விளங்குகின்றார். புதிய துருக்கியையும் கமால்பாட்சாவையும் கண்டு ஐரோப்பா திடுக்குறுவதைப் போல், செங்கற்பட்டையும், ஈ.வெ.ராம னையுங் கண்ட வைதீகம் வாய்விட்டலறுகின்றது; புராணிகம் புலம்புகின்றது.

காஞ்சீபுரம் மாநாட்டில் ராமன் வாய்திறந்து சொன் னால்தான் தலைமை ஸ்தானத்தை ஏற்றுக் கொள்ளவே னென்று ராமனுடைய ஆசீர்வாதத்துக்கு ஆசைப்பட்ட திரு.எஸ்.ஸ்ரீநிவாசம்–பின்னர் காங்கிரஸிலிருந்து கொண்டு, ராமன் காங்கிரஸிலிருந்து விலக்கப்பட்டாற்றான் துலக்கம் பெறுமென்று சொன்ன திரு.எஸ்.ஸ்ரீநிவாசம், இப்போது ராமன் மேற்காதல் கொண்டு காங்கிரஸிற்குள் வாவெனக் கூறி அழைக்கின்றார். மற்றொரு புராணி கரும் ராமன் மீது, காமுறுகின்றார். ‘‘கற்றாரைக் கற்றாரே காமுறுவ‘‘ரென்னும் முறைப்படி, காமுறுவதியல்பேதான். ஆனால் நேற்றுவரை, நாஸ்திகத்துக்கு மூல புருஷர் ராமனென்பது போலும், அனுமல்லாகான் அரசிழந்தது போல் ராமனுடைய கெதியுமாகுமென்பது போலும் சாடைபேசிய புராணிகர், இன்று ராமன்மீது காதல் கொண்டது உண்மைக்காதலா, அன்றி வேறு காதலா வென்பதை வரவர அறிவோம், பழைய சினேகிதப் புது எதிரிகளையும பணியச் செய்து வரும் சுயமரியாதைத் தோற்றத்தை யார்தான் போற்றாதிருக்க முடியும்?

செங்கற்பட்டுத் திருவிழாவைச் செவ்வனே கண்டு ணராமல் செங்கல்பட்டில் ஈ.வெ.ராம நண்பர் ஜஸ்டிஸ் கட்சியைப் புதைத்துவிட்டாரென்பது கண்மூடித்தனமாகும். மகாத்மா காந்தியின் உண்மையான நிர்மாணத் திட்டங்

களை உதறித் தள்ளிவிட்ட உதவாக் காங்கிரஸ் எதுவோ அதுவேதான், செங்கற்பட்டில் வெகு ஆழத்திற்புதைக்கப் பட்டுவிட்டது. மகாத்மா காந்தியிடம் எதைக் கொல்வதாக ராமன் கூறிவந்தாரோ அதைக் கொன்றேவிட்டார். ஐஸ்டிஸ்க்கு மதுரையில் அபயஸ்தங் கொடுத்து, கோவையிற்புத் துயிரளித்தார். செங்கற்பட்டில் முடிசூட்டி விட்டார். ராமன் சகோதரத்துவத்தைப் போதிக்கவே பிறந்தாரென்பதைப் பிரத்தியட்சமாய்க் காட்டிவிட்டார். புராணிகரும் ராமனைப் புகழ்ந்துவிட்டார். என்னே சுயமரியாதைத் தோற்றத்தின் மகிமை!

**(- நாடார்குலமித்திரன், 25-2-1929, தலையங்கம்)**

## மதுஒழிப்பு வருமானத்தை ஈடுகட்ட வழி: மதுவருமானம் போய்விட்டால்...

நமது இந்திய நாட்டின் துரதிஷ்டம் நல்லகாரியங்களை நடத்துவதற்கு கவர்ன்மெண்டின் கையில் பணமில்லாமல் போய்விடுகிறது. தவிரவும் தீயவழியில் வரும் சம்பாத்தியத்தால் கல்வியைப் பரப்ப வேண்டியதாக முடிந்திருக்கிறது. இது இரட்டையாட்சியின் அலங்கோலங்களில் ஒன்று.

ஏழைத் தொழிலாளி முதல் வக்கீல்கள், உத்தியோக வர்க்கத்தார் வரை இந்தியமதுவும், சாராயமும், அந்நிய நாட்டுத் தினுசுகளும், சாப்பிட ஆரம்பித்துவிட்டார்கள். இதனால் இந்திய ஏழைக் குடும்பங்கள் படுங் கஷ்டம் இறைவனுக்குத்தான் தெரியும். ஏழைகளின் வறுமை தொலைந்து அவர்களும் ஒருவேளையாவது வயிறாரச் சாப்பிடுவதற்காகவும், அவர்களும் சந்தோஷமான குடும்பங்களாகக் காலந்தள்ளவும் மதுவிலக்குத் தீர்மானங்கள் சட்டசபைகளில் வந்தால், மந்திரிகளும் நிர்வாக சபை மெம்பர்களும் கூடிப் பேசிக்கொண்டு, மதுவருமானத்தாலேயே இந்தியர்களுக்குக் கல்வி போதிக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது; அந்த மது வருமானம் போய்விட்டால் கல்விக்காகச் செலவிடப் பணமில்லையே; அதற்காகப் புதிய வரி விதிக்க ஜனங்கள் சம்மதப்படுவார்களா? பூரண மதுவிலக்கு சாத்தியமா? மது அருந்துவோரின் சுதந்தரத்துக்கு விரோதமாக கவர்ன்மெண்டார் தலையிடுவது நீதியா? எனப் பல கேள்விகளைப் போட்டு விடுகிறார்கள்.


இந்தியாவின் செல்வங்களை வடிகட்டுவதற்கான எத்தனையோ சட்டதிட்டங்களும், எவ்விதக் காரணமுஞ் சொல்லாமல் தேசாபிமானிகளைச் சிறை செய்து வைக்கப் புதிய புதிய சட்டங்களும் செய்வதில் இந்தியா கவர்ன்மெண்டாவது, மாகாண கவர்ன்மெண்டுகளாவது சலிக்கிறதில்லை. அப்போது பொருளைப்பற்றிய விசாரமவாது, மனித சுதந்தரத்தைப் பற்றிய கவனமாவது அதிகார வர்க்கத்தின் மனதில் உண்டாகிறதில்லை. இந்தியர்களுக்கு ஏதாவது நன்மையான காரியங்களைச் செய்யவேண்டுமென்னும் போதுதான், இத்தனை யோசனைகளும் வந்து முட்டுக்கட்டைபோட்டுக் கொள்ளுகின்றன.

**பூரண மதுவிலக்கினால் வருமானத்தையும் இழந்து, திருட்டுத்தனமாய் மதுவுற்பத்தி செய்பவர்களையும், அந்நிய நாட்டிலிருந்து இரகசியமாய் மது இறக்குமதி செய்பவர்களையும் கண்டுபிடித்துத் தண்டிப்பதற்காக ஒரு இலாகாவையும் வைத்து நடத்துவதில் ஏற்படுஞ் செலவையும் ஈடுசெய்ய வேண்டியது அவசியமென்பதை நாமும் ஒப்புக் கொள்கிறோம்.**

அதற்காக நமக்குத் தோன்றும் யோசனை என்னவென்றால், அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் துணிகளுக்கு 100-க்கு ரூ.50 வீதமும், உள்நாட்டு மில்களில் தயாராகும் துணிகளுக்கு 100-க்கு ரூ.25 வீதமும் வரிவித்தால், அந்த வரியானது ஏழை முதல் பணக்காரன் வரை சகலரையும் கட்டுப்படுத்துவதாகும். அதன் மூலம் வசூலாகும் பணத்தை இந்தியா கவர்ன்மெண்டார் மாகாண வாரியாகப் பங்கிட்டுக் கொடுத்து, கல்வியபிவிருத்தி செய்யலாம். இதை எல்லா நிலையிலுள்ள இந்தியர்களும் ஏற்றுக் கொள்வார்கள். தவிரவும் அதனால் கதரபிவிருத்திக்கும் ஒரு சாதகமுண்டாகும். நல்லவழியால் வரும் பணத்தைக் கொண்டு இந்தியர்களுக்குக் கல்வி கிடைப்பதால் இந்தியா கவர்ன்மெண்டின் பேரிலிருந்த ஒரு அபகீர்த்தியும் நீங்கும். இதை இந்தியசட்டசபை மெம்பர்களும், மாகாண சட்டசபை மெம்பர்களும் யோசனை செய்து, மசோதா ரூபமாகவும், தீர்மான ரூபமாகவும் கொண்டுவந்து நிறைவேற்ற முயற்சியெடுப்பார்களா?

**- நாடார்குலமித்திரன், 7-11-1927**

## கும்பகோணம் ஸ்டாலின் படத்திறப்பு



பெரியாரியக்கத் தோழர் கும்பகோணம் ஆர்.பி.எஸ். ஸ்டாலின் 1.6.2016 அன்று மறைவுற்றார். அன்னாரின் படத்திறப்பு விழா 20.06.2016 திங்கள்கிழமை காலை 10 மணிக்கு கும்பகோணம் ராயா மகாலில் நடைபெற்றது. குடந்தை சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன் தலைமையில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் படத்தைத் திறந்து வைத்து நிறைவுரையாற்றினார்.

# பகுத்தறிவாளர் – தனித்தமிழ் அறிஞர், மணிமேகலை இளங்கோ மேல்நிலைப்பள்ளித் தாளாளர் தேவத்தூர் **நா.நாச்சிமுத்து** அவர்கள் மறைவு



திராவிட இயக்கமும் தமிழ் உணர்வும் புயல் வேகத்தில் தமிழகத்தில் வளர்ந்துவந்த காலத்தில் தேவத்தூர் நா.நாச்சிமுத்து மதுரை அமெரிக்கன் கல்லூரி மாணவர்.

தமிழிலக்கியத்திலும் திருக்குறளிலும் ஈடுபாடு கொண்டிருந்த இவரை, பெரியார், அண்ணா, புரட்சிப் பாவேந்தர் ஆகியோரின் பேச்சும் எழுத்தும் ஈர்த்தன. பழுத்த சுயமரியாதை வீரராகவும், தமிழின உரிமைப் போர் மறவராகவும் இவர் அரசியல் களத்தில் இறங்கினார்.

பழனி ஒட்டன்சத்திரம் வட்டாரங்களில் சுயமரியாதை, கடவுள் மறுப்பு, இந்தி எதிர்ப்பு ஆகிய கருத்து நிலைகளில் ஆயிரக்கணக்கான இளைஞர்களைத் திரட்டினார். ஒரு போராளியாகக் களமிறங்கி, புயல்வேகச் செயல்பாட்டாளராக உருவெடுத்தார். பழமையில் ஊறிக்கிடந்த சமூகத்தில், திராவிட இயக்கத்தைக் காட்டுத் தீ போல் பரவச் செய்தார். அண்ணா அவர்களையும் திராவிட இயக்கப் பேச்சாளர்களையும், மாட்டு வண்டிகளிலும் மிதிவண்டிகளிலும் ஊர்ஊராக அழைத்துச் சென்றார். தமது தோட்டத்திலிருந்த சாமி சிலைகளை மரத்தில் தலைகீழாகத் தொங்கவிட்டுக் கட்டினார். குழந்தைகளுக்கெல்லாம் தமிழ்ப்பெயர் சூட்டுவதை ஒரு பேரியக்கமாக நடத்தினார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முதல்வீரராகச் செயல்பட்டார்.

ஒட்டன்சத்திரம் சட்டப்பேரவைத் தொகுதியில் ஒரு பெரிய நில முதலையை எதிர்த்து நின்று 1962இல் தோல்வியுற்றார். ஆனால் அதே வேட்பாளரை 1967 இல் வீழ்த்தி வாகை சூடினார். 1971இலும் பெரு வெற்றி பெற்றார்.

ஒட்டன்சத்திரம் பகுதி குன்றுகள் நிறைந்தது. பற்பல ஓடைகள் நிறைந்தது. பேரவை உறுப்பினர் ஆன உடனே, நூற்றுக்கணக்கான ஓடைகளில் தடுப்பணைகளைக் கட்டினார். சாலைகளே இல்லாத ஊர்களுக்கெல்லாம் சாலை வசதிகளையும் பேருந்து வசதிகளையும் ஏற்படுத்தினார். மக்கள் மேம்பாட்டுக்குத் தேவையான பணிகளை எண்ணி ஆராய்ந்து செயல்படுத்தினார்.

அக்காலத்தில் 20 கல், 30 கல் தொலைவுகளில்தான் உயர்நிலைப் பள்ளிகள் இருந்தன. மக்கள், கல்வி வளர்ச்சியை எண்ணிப் பார்க்க இயலாதவர்களாக இருந்தனர். எனவே தமது சிற்றூரிலேயே ஓர் உதவி பெறும் உயர்நிலைப் பள்ளியைத் தொடங்க எண்ணினார். சொந்தக் கட்சி அமைச்சர்களே இடையூறுகள் செய்தனர். ஆனால், முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா காட்டிய அன்பாலும் ஒத்துழைப்பாலும் தமது தோட்டத்திலேயே ஓர் உயர்நிலைப் பள்ளியைத் தொடங்கினார். இழந்துவிட்ட தம் குழந்தைகளின் நினைவாக, ‘‘மணிமேகலை-இளங்கோ உயர்நிலைப்பள்ளி’’ என்று பெயரிட்டார்.

பள்ளியில் சிறப்பான உணவு வசதியுடன் விடுதியும் தொடங்கப்பட்டது. பள்ளியில் பயிலும் 90 விழுக்காடு குழந்தைகள் தூய தமிழ்ப்பெயர் தாங்கியவர்களாக இருந்தனர்.

விடுதியிலும், பள்ளியிலும் யோகாசனம் முறையாகக் கற்பிக்கப்பட்டது. கருநாடக இசை, நாடகம், கலைகள் கற்பிக்கப்பட்டன.

பள்ளி நூலகத்தில் விடுதலை, உண்மை, தென்மொழி, தமிழ்ச்சிட்டு, முதலான இதழ்கள் இடம் பெற்றன.

**பள்ளியில் காலையில் ‘‘அவர்தாம் பெரியார்’’ என்னும் புரட்சிப் பாவேந்தரின் பாடல்தான் ஒலிக்கும். பகுத்தறிவுக் கருத்துப் புகட்டல் பாடம் புகட்டலுடன் சேர்ந்து நடைபெறும்.**

தந்தை பெரியார், பாவலரேறு பெருஞ்சித்திரனார், உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், வைகோ, நைஜீரிய நாட்டைச் சேர்ந்த மருத்துவர் சிமா கலு சிமா (Chima Kalu Chima), தமிழ்ச் சான்றோர் பேரவை அய்யா அருணாசலம் ஆகியோர் இப்பள்ளிக்கு வருகை தந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

நாச்சிமுத்து ஐயா அவர்களின் தேவத்தூர் மணிமேகலை இளங்கோ உயர்நிலைப்பள்ளி, தாகூரின் சாந்திநிகேதனைப் போன்றது.

முனைப்பான பெரியார் சிந்தனையாளராகிய நாச்சிமுத்து அவர்கள் தனிமனித வாழ்விலும் ஒழுங்கு முறைகளிலும் தூய காந்திய நெறியினராய் விளங்கினார்.

உடற்பயிற்சி, யோகாசனம், காய்கறி உணவு, இயற்கை மருத்துவம், தனிமனித நேர்மை, வாழ்வியல் தூய்மை, சமூகத் தொண்டு ஆகியவற்றால் அவரை புத்தரோடும் காந்தியோடும் மக்கள் ஒப்பிட்டார்கள்.

1983 முதல் தமிழீழ விடுதலைப் போரின் மிகப் பெரிய ஆதரவாளராக விளங்கினார். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவுவதை ஓர் அறப்பணியாகச் செய்துவந்தார்.

**1975 முதல் பெருஞ்சித்திரனாரின் தென்மொழி இதழைப் பரப்புவதிலும், பாவாணர் நூல்களைப் பரப்புவதிலும் ஈடுபாடு கொண்டு விளங்கினார். 1981 முதல் "சிந்தனையாளன்" வாசகரானார். நடுநிலை பிறழாத அரசியலறிஞர் ஆனைமுத்து ஒருவரே என்று அடிக்கடி கூறுவார்.**

சில ஆண்டுகளுக்கு முன் "மக்கள் நெஞ்சம்" ஆசியர் தோழர் கலசம் அவர்கள் தேவத்தூர் சென்று, நாச்சிமுத்து அவர்களுடன் விரிவாக உரையாடியது நினைவுகூரத்தக்கது.

93 அகவை வரை எளிமையான ஓட்டுவீட்டில் வாழ்ந்து, துணைவியாரையும், பிள்ளைகளையும் இழந்துவிட்ட நிலையில், பள்ளியே துணையாய், மாணவர்களே பிள்ளைகளாய் ஏற்று, எளிமையே வடிவாக வாழ்ந்தவர். மக்கள் சமூகத்திற்கும், கல்வி வளர்ச்சிக்கும், தமிழ் உணர்வுச் செழிப்புக்கும் தொண்டாற்றியவர். சாகும்வரை படிப்பதை நிறுத்தாதவர்;

கடந்த 20.5.2016 இரவு 11 மணிக்கு படிப்பதையும் சிந்திப்பதையும் நிறுத்திக்கொண்டார். 21.5.2016இல் முன்னாள் மாணவர்களும் தமிழ் உணர்வாளர்களும் திராவிட இயக்கத்தினரும் வீரவணக்கம் கூற, அப்பெருமகனாரின் உடல் பள்ளி வளாகத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

29.5.2016 ஞாயிறன்று அவரது படத்திறப்பும் நினைவேந்தல் நிகழ்வும் நடைபெற்றன. ஒட்டன் சத்திரம் சட்டப்பேரவை உறுப்பினர் சக்கரபாணி, பழனி சட்டப்பேரவை உறுப்பினர் முதலான அரசியலாளர்களும், பேராசிரியர் காளிமுத்து, கல்லை அருட்செல்வன், ஒடவை தமிழ்வேந்தன் முதலான தமிழறிஞர்களும், மு.இரவி, ஐ.பி.எஸ் முதலான முன்னாள் மாணவர்களும், இரணியன், வேலிறையன் முதலான முன்னாள் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். பள்ளிச் செயலர் திருவள்ளுவன் நன்றி கூறினார்.

**- இரணியன்**

## வளர்க நா.நாச்சிமுத்து புகழ்!

மா.பெ.பொ.க. சார்பிலும், "சிந்தனையாளன்" ஆசிரியர் குழு சார்பிலும் மனங்கசிந்த இரங்கலையும், இறுதி அஞ்சலியையும் மறைந்த பெரியார் பெருந்தொண்டர் தேவத்தூர் நா.நாச்சிமுத்து அவர்களுக்கு உரித்தாக்குகிறோம்.

*- ஆசிரியர் குழு*

## நா.அருணாசலம் படத்திறப்பு

மாணவர் நகலம் நா.அருணாசரம் அவர்களின் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்வு 26.6.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சென்னை, இராஜா அண்ணா மலைபுரம் இமேஸ் அரங்கில் நடைபெற்றது. தோழர் இரா.நல்லக்கண்ணு தலைமையில் படத்திறப்பு, சுடர் அஞ்சலி, நினைவு மலர் வெளியீடு, இசை அஞ்சலி, ஆவணப்படம் திரையில் ஆகிய நிகழ்வுகள் நடைபெற்றன.

## பெண்ணாடத்தில் பொன்.இளங்கோவன் 77வது பிறந்தநாள் விழா மற்றும் நூல் வெளியீடு

பொன்.இளங்கோவன் 77ஆம் பிறந்தநாள் விழா மற்றும் நூல் வெளியீடு நிகழ்வு 11-6-2016 சனிக்கிழமை 4 மணிக்கு பெண்ணாடம் அஞ்சலி சுபா மகாலில் நடைபெற்றது. பிறந்தநாள் விழாவிற்கு முனைவர் செம்மொழி க.இராமசாமி தலைமை தாங்கினார். முன்னிலை பூ.பொய்யா மொழி-மங்கையர்க்கரசி இணையர், குயப்பள்ளம் குழந்தைவேலன் துணைவியார் கு.இன்பவடிவி ஏற்றனர். பூமாலை மணிவண்ணன் தொகுப்புரை வழங்கினார். பட்டி சு.செங் குட்டுவன், மலர்தாசன், சு.சதாசிவம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

1. சமசர சுத்த சன்மார்க்க சத்தியசங்கம்-கையேடு. 2.சுத்த சன்மார்க்க சுகநிலை பெறுக. ஆகிய இரு நூல்கள் வெளியீட்டு விழா நடைபெற்றது. இர.சுப்பிரமணி அடிகளார் நூல்களை வெளியிட்டார். கு.இ.தொல்காப்பியன், சி.தங்கப் பிள்ளை, பொ.மன்னர்மன்னன், சிலம்பு ஜானகி-மக்கள் திரள், த.சுடர் கொழுந்து-சிலம்புச் செல்வி தமிழ்ப்பெரு வளத்தான் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். பாவலர் ப.வரதராசன், புதூர்சாமி நூல் அறிமுகம் செய்தனர்.

கோ.சுந்தரவடிவேலு, கோ.வி.புகழேந்தி, தி.இளையராசு, தா.கோ.சம்பந்தம், பொன் பிச்சைமுத்து, மங்கையர்க்கரசி சீனிவாசன், பா.சம்பத் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

# இராஜீவ் கொலை வழக்கில் சிறைத் தண்டனை

# பேரறிவாளன் உட்பட 7 பேரை விடுதலை செய்யக்கோரிப் பேரணி

## அரசியல் கட்சித் தலைவர்கள், திரைப்பட நடிகர்கள் பங்கேற்பு

பேரறிவாளன் உள்பட 7 பேரை விடுதலை செய்யக் கோரி, சென்னையில் பேரணி நடைபெற்றது. இதில் அரசியல் கட்சித்தலைவர்கள், திரைப்பட நடிகர்கள் பங்கேற்றனர்.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று சாந்தன், முருகன், பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்கள் கடந்த 25 ஆண்டுகளாகச் சிறையில் இருந்து வருகின்றனர்.

இவர்களை விடுதலை செய்யக்கோரி பேரறிவாளனின் தயார் அற்புதம்மாள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

**பேரணி**

அதன்படி, 7 தமிழர் விடுதலைக்கான கூட்டியக்கம் சார்பில் சென்னையில் 11-6-2016 சனி அன்று கோட்டை நோக்கிப் பெரிய பேரணி நடத்த ஏற்பாடு செய்திருந்தார். பேரணி அன்று மதியம் 1.30 மணியளவில் ராஜரத்தினம் திடல் அருகில் இருந்து தொடங்கியது. பேரணியைப் பேரறிவாளனின் தயார் அற்புதம்மாள் தொடங்கி வைத்தார்.

**முழக்கங்கள்**

பேரணி, ராஜரத்தினம் விளையாட்டு மைதானத்தில் இருந்து தெற்குக் கூவம் சாலை வழியாக, சி.பா.ஆதித்தனார் சாலையைக் கடந்து, லேங்ஸ் தோட்டசாலை வழியாக, பிற்பகல் 3.30 மணிக்கு லேங்ஸ் தோட்டச் சந்திப்பை வந்தடைந்தது. பேரணியில் கலந்து கொண்டவர்கள், 'விடுதலை செய்! பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்!', 'சஞ்சய்தத்துக்கு ஒரு நீதி! பேரறிவாளனுக்கு ஒரு நீதியா?' என்பது போன்ற முழக்கங்களை எழுப்பியபடி வந்தனர். பேரணி முடிவடைந்தவுடன், பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள், 7 பேர் விடுதலை தொடர்பான வழக்கை நடத்தி வரும் வழக்குரைஞர் சிவகுமார், இயக்குநர் விக்ரமன், மனிமேகலை ஆகியோர் முதல்-அமைச்சர் தனிப்பிரிவில் சென்று தங்களின் கோரிக்கை விண்ணப்பத்தைக் கொடுத்தனர்.

**அற்புதம்மாள் பேட்டி**

பேரணி தொடங்குவதற்கு முன்பாகப் பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் நிருபர்களிடம் கூறியதாவது:

எனது மகன் பேரறிவாளன் 1991-ம் ஆண்டு சூன் 11-ந் தேதி ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைதாகி இன்றுடன் (நேற்று) 25 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. 25 ஆண்டுகளுக்குப் பிறகு ஏழு பேரையும் விடுதலை செய்யும் காலம் வந்துவிட்டதாக நம்புகிறேன்.

கடந்தமுறை ஆட்சியின் போது, முதல்-அமைச்சர் ஜெயலலிதா 7 பேரையும் 2 முறை விடுதலை செய்ய உத்தரவிட்டார். இப்போது அவர் மீண்டும் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்துள்ளார். எனவே இப்போது நிச்சயம் விரைந்து முடிவு எடுத்து 7 பேரையும் விடுதலை செய்வார் என நம்புகிறேன்.

அந்த நம்பிக்கையை வெளிப்படுத்தவே எல்லாக் கட்சிகளையும், இயக்கங்களையும் ஒருங்கிணைத்து, கோரிக்கைப் பேரணி நடத்தி முதல்-அமைச்சரிடம் மனு வழங்க உள்ளேன். இந்தப் பேரணி வெற்றிகரமாக முடியும். முதல்-அமைச்சர் விரைந்து முடிவு எடுத்து 7 பேரின் வாழ்க்கை விரைந்து கிடைக்கப்போகிறது என நம்புகிறேன். கால் நூற்றாண்டுகளாக எனது மகனின் இளமை போய்விட்டது. எங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் நோய்வாய்ப்பட்டுவிட்டோம். 25 ஆண்டு கால வேதனையில் இருந்து என் மகன் விரைவில் வெளிவரவேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

(நன்றி : தினத்தந்தி, 12-6-16)

### தமிழேந்தியின் சரியான கைப்பேசி எண்

பாவலர் தமிழேந்தி தொடர்ந்து சென்னையில் மருத்துவம் செய்து கொண்டு, நலம் பெற்று வருகிறார். **அவரின் சரியான கைப்பேசி எண்: 9445815831.**

முகவரி :
எண்.46, கே. மோகனம் தெரு,
சிலந்திக்குட்டை, கொளத்தூர் முதன்மைச் சாலை,
சென்னை - 600 099.
(வில்லிவாக்கம் தொடர்வண்டி நிலையம் அருகில்)

# பாரதமாதாவின் புத்திரிகள் நம் சகோதரிகளல்லரா?

- பி. குப்புசாமி

எனக்கு பெஜவாடாவில் பார்ப்பனரல்லாதார் திருமண ஊர்வலத்தைக் கண்டதும் பரிதாபமும், ஒரு பக்கம், எங்கள் மதம்போச்சு, எங்கள் சாஸ்திரம் போச்சு, வருணாசிரம தர்மத்துக்கு அழிவுவரலாச்சு, எங்கள் பணவரும்படி போச்சுது, எங்கள் தலைவிதி 'குடிஅரசு' வந்து இப்படியாச்சுது என்று கூக்குரலிடும் சில வைதீர்களிடம் வெறுப்பு ஒருபக்கமும் உண்டாயிற்று.

மணமகனும், மணமகளும் பலவர்ணமான, பாசிகளால் நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்த ஓர் பல்லக்கில் ஏறி பாண்டு, நாதசுரவாத்தியங்களுடன் ஊர்வலம் வந்தனர். பல்லக்கிற்கு முன்னால் பத்து முதல் பதினெட்டு வயதிற்குட்பட்ட சுமார் பத்து அழகிய வாலிப தாசிச் சகோதரிகள் பாட்டுகள் பாடிக்கொண்டும் நடனம் புரிந்துகொண்டும் வந்தனர். அவர்கள் தாங்கள் பெற்றுக்கொண்டிருக்கும் பணத்திற்காகத் தங்கள் மானத்தைத் துறந்து தாங்கள் தொழில் புரிய உதவியாகவிருக்கும் பலருடைய மனது குதூகலமடையும் வண்ணம் பலவிதமான அபிநயங்கள் செய்யுங்காலையில், அது நோக்கும் விசாலபுத்தி படைத்த எவரும் வெட்கத்துடன் துக்கப்படாமலிக்க முடியாது. இவ்வித இழிதொழிலும் இதுபோன்ற இன்னும் பல அட்டூழியங்களும் நடக்கவிடாமலும், நம் சொந்தச் சகோதரிகள் பாரத சேய்கள் இத் தொழிலைவிட்டு நன்மார்க்கத்தையடையும் படியான புத்தியை அவர்களுக்குக் கொடுக்கும்படியும், இந்தத் தொழில் செய்வதற்கு உதவியாக இருக்கும் சிலருக்கு நல்ல உணர்ச்சி உண்டாகும்படி செய்யவும் தீவிரப் பிரச்சாரம் செய்யவேண்டும்.

அச்சகோதரிகளைச் சுற்றிலும் பல வாலிப மாணவர்கள் நின்றுகொண்டு கேலியும் பரிகாசமும் செய்துகொண்டே வந்தனர். அப்பெண்கள் நமது சொந்தச் சகோதரிகளாயிற்றே-ஓர் தாயான பாரத மாதாவின் அரும்புதல்விகளாயிற்றே-அவர்கள் இத்தகைய, இழிதொழில்புரிந்து வாழ்க்கை நடத்துவது நம்முடைய பாரத நாட்டுக்குத்தானே அவமானம் என்று உணர்ச்சி இல்லாத இந்த வாலிப மாணவர்களின் அறியாமை குறித்து எனக்குத் துக்கம் ஏற்பட்டது.

அந்த ஊர்வலம் பிரதான வீதிகளின் வழியே சென்றது. ஆனால் நான் பார்க்கும்படி நேரிட்டது ஒரு பார்ப்பன அக்கிரஹாரத்தின் வழியே சென்று கொண்டிருந்த பொழுதேயாகும். அந்தரஸ்தாவின் இருபுறமுள்ள வீடுகளில் வசிக்கும் பார்ப்பனப் பெண்கள் எல்லோரும் வாசலில் நின்றுகொண்டு மேற்படி தாசி சகோதரிகள் பாடும் பாட்டுக்களைக் கேட்டும் அவர்கள் நடனம் புரிவதையும் அபிநயங்கள் செய்வதையும், பார்த்தும் சந்தோஷமடைந்தனர். தங்களைப் போன்ற பெண் மணிகள் இவ்வித இழி தொழிலைவிட்டுச் சீர்திருத்தும் படியான வழியைத் தேடக் கவலைப்பட வேண்டிய அவர்கள், அக்காட்சியைக் கண்டு மகிழ்ச்சியடைந்ததைப் பார்க்க நான் பெரிதும் வருந்தினேன். அவ்வூர்வலத்தை முதன்மையாக இருந்து நடத்துபவர் அந்தச் சகோதரிகளை எந்தெந்த வீட்டுவாசலில் பெண்கள் கும்பலாக இருந்தனரோ அந்தந்த இடங்களில் நிறுத்திப்பாடும் படியும் நடனம் புரியும்படியும் செய்துவந்தனர்.

இதில் இன்னும் ஓர் சம்பவம் குறிப்பிடற்பாலது, மணமகனின் சிநேகிதர்களில் சிலர், அத்தாசி சகோதரிகளில் ஒரு அழகிய மாதை அழைத்து அன்னார் கையில் ஏதோ கொஞ்சம் பணங்கொடுத்து பல்லக்கில் வந்து கொண்டிருக்கும் மணமகனுக்கும் பன்னீர் தெளிக்கும் படிக் கேட்டு அச்சகோதரி அவ்விதம் செய்யவே, எல்லோரும் அதைப்பார்த்து மகிழ்ந்தனர். ஊர்வலங்களில், இந்தவிதமான வாலிப சகோதரிகளை நடனம் புரியும்படிச் செய்ய எந்தச்சாத்திரம் இடங் கொடுக்கிறதோ அறியேன். இப்படிச் செய்வதில் அவர்கள் நோக்கம்தான் என்னவோ? இப்படிப்பட்ட சம்பங்கள் நமது வாலிப மாணவர்கள் கெடுவதற்கும் நம்முடைய இந்திய சமூகத்தை மிஸ்மேயோ போன்ற அன்னியர் இழிவுபடுத்துவதற்கும் சந்தர்ப்பங்களாக இருப்பதுமல்லாமல், இந்த தாசித் தொழிலுக்கு ஊக்கம் அளித்ததுமாகும். இது மாதிரியாக இவ்வூரில் சாதாரணமாக அநேக ஊர்வலங்களில் நடந்து வருவதாகக் கேள்விப்படுகிறேன்.

இனியாகிலும் நம் சகோதரர்கள் விழித்துக் கொண்டு சீர்திருத்துவதோடு பார்ப்பனர்களில் வைதிகர் ஓர் சாரார், தாசித் தொழில் செய்வதற்குத் தங்கள் சாஸ்திரக் குப்பைகளைக் கிளப்பி ஆதாரம் காட்டினாலும் அப்படிப்பட்ட சாஸ்திரங்களைத் தீயில் இட்டுக் கொளுத்தும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

**(“குடிஅரசு”, 1929)**

# வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள்



## ரவி.பவித்ரா-கண்ணா (எ) மணிகண்டன்



காஞ்சி மாவட்டம் பனையூர் கிராமத்தைச் சேர்ந்த வரும் தற்போது மேற்குத் தாம்பரத்தில் வசித்து வருபவருமான தோழர் ரவி-காஞ்சனா இணையரின் மகள் பவித்ராவிற்கும்; சென்னை-72 பட்டாபிராம் எண்.5, பல்லவன் தெரு, சார்லஸ் நகர் கோதண்டன் திருமதி கோதண்டன் அவர்களின் மகன் கண்ணா (என்கிற) மணிகண்டனுக்கும், சென்னை-77 வேலப்பன் சாவடி, கெஜலட்சுமி திருமணக்கூடத்தில் 15.6.2016 புதன் காலை 7 மணிக்கு வாழ்க்கை ஒப்பந்த விழா சிறப்பாக நடைபெற்றது. 14-6-2016 இரவு பெண் அழைப்பு விழாவில், மா.பெ.பொ.க. தோழர்கள் வே.ஆனைமுத்து, க.முகிலன், கி.கலை, சு.கஸ்தூரி, மா.சுப்பிரமணி, ஆனை.பன்னீர்செல்வம், ப.வடிவேலு ஆகியோர் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## சீர்காழி மா.முத்துச்சாமி இல்ல மணவிழா
## இ.ஜென்னிமார்க்ஸ் - இ.தினேஷ்குமார்

சீர்காழி மா.முத்துச்சாமி-பேச்சியம்மாள், மானாந் திருவாசல் ஆ.இராமையன்-காசியம்மாள் இவர்களது பெயர்த்தியும், முத்து இரணியன் மகாலட்சுமி இணை யரின் மகளுமான இ.ஜென்னி மார்ஸ் அவர்களுக்கும்; சீர்காழி கு.வெங்கடாசலம்-சாரதாம்பாள் க.ஆறுமுகம் பார்வதி இவர்களின் பெயரனும், வெ.இளங்கோவன்-சுமதி இணையரின் மகனுமான இ.தினேஷ்குமார் அவர்களுக்கும் 26.06.2016 ஞாயிறு காலை 8 மணிக்கு, சீர்காழி எம்.ஏ.எல். திருமண மகாலில் வாழ்க்கை ஒப்பந்தவிழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில், மா.பெ.பொ.க. சார்பில் வே.ஆனைமுத்து, த.புகழேந்தி, கோ.மு.கருப்பய்யா, த.இராமமூாத்தி, செங்குட்டுவன், பா.மோகன், தி.துரைசித்தார்த்தான், ஆசிரியர் கோ.செய ராமன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## திருக்குறள் வழியில் இல்வாழ்க்கை இணைப்புவிழா
## இள.மேகலா - மா.வினிஷ்

நாகர்கோவில் ந.இளங்கோ-எழில் இணையரின் மகள் இளமேகலா அவர்களுக்கும், திருநெல்வேலி பே.மாரியப்பன்-மா.இராஜராஜேஸ்வரி இணையரின் மகன் மா.வினிஷ் அவர்களுக்கும் 8-6-2016 புதன் கிழமை காலை 9 மணிக்கு வள்ளியூர் பி.ஏ.மகாலில் திருக்குறள் ஓதி இல்வாழ்க்கை இணைப்பு மன்றல் விழா நடத்தப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## கலைப்பிரியா - ம.பிரபு



ஜெகந்நாதன் பார்வதி அம்மாள் பேத்தியும் காட்பாடி சித்த வைத்தியர் சி.குப்புசாமி-இராசம்மாள் கொள்ளுப் பேத்தியும், கு.சிவபாதம்-இராஜேஸ்வரி அவர்களின் பெயர்த்தியும் கிருஷ்ணமூர்த்தி-மங்கை யர்க்கரசி இணையரின் மகளுமான கி.கலைப்பிரியா அவர்களுக்கும்; வேலூர் காசிராஜன் சரோஜா அம்மாள் பேரனும் அந்தோனிதாஸ் மணியம்மாள் கொள்ளுப் பேரனும், இளவரசி-மரியதாஸ் இணையர்களின் மகனு மான ம.பிரபு அவர்களுக்கும் திருமணவிழா 29.06.2016 புதன்கிழமை காலை 9 மணிக்கு வேலூர் சங்கமம் திருமண மண்டபத்தில் சிறப்புற நடை பெற்றது. ம.பெ.பொ.க. தோழர்கள் வே.ஆனைமுத்து, மோ.சி.சங்ர், சா.குப்பன், மீ.டில்லிபாபு, பொ.காளி யப்பன், மா. தசரதன் ஆகியோர் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## ப.இராசராசன் - சு.லலிதா

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோயில் வட்டம் வீரானந்தபுரம் சின்னபுங்கனேரி இரா.பன்னீர்செல்வம் -மரகதமணி இணையரின் மகன் ப.இராசராசனுக்கும், அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் வட்டம் தர்மசத்திரம் மறைந்த சுந்தரராசன்-பழனியம்மாள் இணையரின் மகள் சு.லலிதாவிற்கும் வாழ்க்கை ஒப்பந்தவிழா மீன்சுருட்டி கட்டிடக் குழு திருமண மண்டபத்தில் 26-6-2016 ஞாயிறு காலை 7.00 மணிக்கு, வே.ஆனைமுத்து தலைமையில் நடைபெற் றது. இரா.பன்னீர்செல்வம் வரவேற்புரையாற்றினார். கு.இராமசாமி, தி.பாலசுப்ரமணியம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வே. கலியமூர்த்தி, துரை சித்தார்த்தன் உள்ளிட்ட தோழர்கள் வாழ்த்துரை வழங்கினர். வி.இரவி நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுற்றது. மணமக்கள் சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக உரூ.500 வழங்கினர்.

# நீண்டகால மக்கள் நலத்திட்டங்கள் தேவை

**நா**ம் வாழும் பகுதியில் அரசுத் திட்டங்கள் எதுவும் எதிர்காலத்தை நோக்கியவை அல்ல, இப்பொழுதே திட்டமிட்டு செயல்படுத்திக் கொள்ளையடிக்கும் திட்டங்களாக உள்ளன. கழிவு நீர் கால்வாய்களை வருடத்திற்கு இருமுறை செப்பனிடுதல் கொள்ளையடிக்கவே, வளர்ந்துவரும் பகுதியில் குறைந்தது அய்ம்பது ஆண்டுகளுக்குப் பயன்படும் திட்டங்களைத் தீட்டி ஒருமுறை செயல்படுத்தினால் போதும் என்ற கவனத்துடன் அரசும் அரசு அதிகாரிகளும் செயல்பட்டால் கருவூலம் காலியாகாது. அடுக்குமாடி வீடுகளை நான்கு மாடிக்கு மேல் கட்டினால் அந்த குடியிருப்புகளுக்கு குடிநீர், மின்சாரம், கழிவு, நீர்கால்வாய், சாலை வசதி போன்றவற்றை மனதில் கொண்டு அனுமதிப்பதில்லை. பலமாடி கட்டிடம் கட்ட பல கோடி கட்டணம் பெற்றாலும், அந்தத் தொகை மேற்கண்ட செயல்திட்டங்கள் பல ஆண்டுகள் பயன்படும் வகையில் இல்லை. காரணம் பல கோடி கையூட்டாகக் கைமாறுகின்றன.

மக்கள் தொகை பெருகிவரும் இந்த காலத்தில் புதிய சாலைகள் போட ஒதுக்கப்படும் இடம் அய்ம்பது ஆண்டுக்குப் பிறகு எவ்வளவு தேவை என்று மனதில் கொண்டு சாலைகளையும், தெருக்களையும் அமைக்க வேண்டும். சாலை மட்டும் போதாது. நிலத்தடி நீர் சேமிக்க கண்டிப்பாக மண்தரைகள் வேண்டும். சாலைகளை ஒட்டி மண்தரைகள், குடியிருப்புப் பகுதியில் உள்ள விளையாட்டுப் பகுதியில் மண்தரை பள்ளி கூடங்களில் மண்தரை அடுக்குமாடி கட்டிடங்களில் கீழ் மண்தரை அமைத்து மண் தரைகளிலும் மரங்கள் நட்டு வளர்த்தல், ஒரு வீட்டுக்கு ஒரு மரம் தேவை என்பதை வலியுறுத்தும் நோக்கம் அனைவருக்கும் தேவை. இதையே கொள்ளையடிக்க திட்டம் தீட்டினால் நம்மை ஆளும் அரசும் மற்றும் அதிகாரிகளும் கொடுங்கோலர்களே, கொள்ளையர்களே ஆவார்கள். விழிப்புணர்வு இல்லா மக்களும், சேர்ந்துவாழத் தகுதியற்ற காட்டுமிராண்டிகளே, பகுத்தறிந்து செயல்படாத அனைவரும் முட்டாள்களே.

குடியினால் பல கேடுகள் வரும், புகைத்தால் பல கேடுகள் வரும். ஒழுக்ககேடானால் பல நோய்கள் வரும். படிக்கவில்லை என்றால் மூளை முடமாகும். உழைக்காமல் வருமானம் கிடையாது. இதுபோன்ற பகுத்தறிவுச் சிந்தனைகள் அனைவருக்கும் தேவை.

**- உழவர் மகன் ப.வ.**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி சூலை-2016

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **இரா. குப்புசாமி** | கரூர் | 1000/- |
| **க. ஆதிமூலம்** | கீழ்ப்பெண்ணத்தூர் | 1000/- |
| **நா. நாச்சிமுத்து** | அம்பத்தூர் | 1000/- |
| **கல்லை அருட்செல்வன்** | ஒட்டன்சத்திரம் | 1000/- |
| **ஞா. மரியதாஸ்** | அம்பத்தூர் | 1000/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 300/- |
| **பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| பேரா. **ச.பொ.சீனிவாசன்** | மூணாறு | 200/- |
| **வீ. இராசாப்பிள்ளை** | சிதம்பரம் | 200/- |
| **மரு. வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| சென்ட்ரிங் **இரா.ப. கோவிந்தன்** | தாம்பரம் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **இ. கபிலன்** | சிதம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **இளவரசன்** தமிழ்க்களம் | அரியலூர் | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - சூலை - 2016

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **க. குப்புசாமி** | சோளிங்கபுரம் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்ப்பென்னாத்தூர் | .... 100/- |
| **கு.சூரியன்** | பெங்களூர் | .... 100/- |
| **கு.பாரி** | சோளிங்கபுரம் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை - 53.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-53. ☎ : 044-2625 2119